# தமிழ் நிலவு

முனைவர் க.த.திருநாவுக்கரசு

M.A., (Tamil), M.A., (History), M.Litt., Dip.Ing., Phd.,

வெளியீடு

மணியகம்

3/30 , இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த்தோட்டம், கோட்டூர்புரம்,
சென்னை 600085.
9444453737

# தமிழ் நிலவு

முனைவர்
**க. த. திருநாவுக்கரசு**

வெளியீடு
**மணியகம்**
3/30, இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த் தோட்டம், கோட்டூர்புரம்,
சென்னை–600 085
9444453737

# நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தமிழ் நிலவு |
| பொருள் | : | கட்டுரைகள் |
| ஆசிரியர் | : | முனைவர் க.த.திருநாவுக்கரசு |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு –அக்டோபர் 2024<br>முதற்பதிப்பு – அக்டோபர் 1981 |
| நூலின் அளவு | : | 1/8 டெமி |
| பக்கங்கள் | : | viii + 184 = 192 |
| தாள் | : | 80 GSM Maplitho |
| எழுத்துரு | : | Tau–Marutham – Pt.11 |
| அச்சிட்டோர் | : | அரசு ஆர்ட்ஸ்<br>78, சீனிவாசபெருமாள் சன்னதி முதல் தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை –600 014<br>044 – 28351101, 28588056<br>E–mail : arasuarts@gmail.com<br>www.arasuarts.com |
| வெளியீடு | : | மணியகம் பதிப்பகம்<br>3/30, இரண்டாவது பிரதான சாலை,<br>கோட்டூர் தோட்டம், கோட்டூர்புரம்<br>சென்னை – 600 085<br>9444453737, tambalavanan@gmail.com |
| உரிமை | : | பதிப்பகத்திற்கே |
| விலை | : | இலவச வெளியீடு |
| எண்ணிக்கை | : | 25 புத்தகங்கள் |
| ISBN | : | 978–93–48345–90–5 |

# முதல் பதிப்பின் பதிப்புரை

இப்பதிப்பகத்தின் ஏழாவது வெளியீடாகத் தமிழ் நிலவு வெளிவருகிறது. தொடர்ந்து நல்ல நூல்களை வெளியிட ஆதரவளித்து வரும் அன்பர்களுக்கு நன்றி.

திருக்குறள்மணி க. த. திருநாவுக்கரசு அவர்கள் முப்பது ஆண்டுகளாக அருந்தமிழ்ப்பணி ஆற்றி வருவதை நாடு நன்கறியும். அவருடைய எழுச்சிமிகு சிந்தனையின் வெளிப்பாடாக இந்நூல் இலங்குகிறது. தமிழ் இலக்கியத்தின் சிறப்பியல்புகளையும், தமிழ்ப்பண்பாட்டின் அருமை பெருமைகளையும் 'இன்றைய வாழ்க்கை' எனும் வண்ணத்தில் குழைத்துத் தருவதையே, தம் எழுத்துப்பணியின் நோக்கமாக அவர் கொண்டுள்ளார். இதனை அவருடைய நூல்களே தெரிவிக்கின்றன.

இந்நூலினுள் பண்டைத் தமிழ்ச் சான்றோரின் கருத்தூற்றமும், இடைக்கால இலக்கியப் படைப்பாளரின் ஏற்ற மிகு இதயவொலியும், இக்கால கவிஞர்களின் புதுமை நாட்டமும் பின்னிப் பிணைந்துள்ளன. நம் செந்தமிழ் மொழியின் சிறப்புமிகு இலக்கியங்களின் எண்ணப் போக்கு, வரலாற்றுக் காலம் நெடுக எவ்வாறு வளர்ந்து வந்துள்ளது என்பதை அறிவதற்கு, இந்நூல் பெரிதும் உதவும் என நம்புகின்றோம்.

இந்நூலினைச் செம்மையாகப் பதிப்பித்துத் தந்த நற்செய்தி அச்சகத்தாருக்கு எங்கள் நன்றி என்றும் உரித்தாகும்.

**மணியகத்தார்**

# முதல் பதிப்பின் முன்னுரை

'தமிழ் நிலவு' எனும் இந்நூலினுள் பன்னிரண்டு இலக்கியக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவை யாவும் ஆய்வுமுறையில் அமைந்த சிந்தனைக் கட்டுரைகளாகும். தமிழ் மக்களுடைய வாழ்க்கையை மையமாகக் கொண்டு இவை சுற்றிச் சுழலுகின்றன.

கடத்த இருபது ஆண்டுகளில், பல இதழ்களிலும், மலர்களிலும் என்னுடைய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் சிறப்புமிக்க சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, அவற்றிற்கு இந்நூல் வடிவம் கொடுத்துள்ளேன். 'தமிழ் நிலவு' எனும் வாழ்க்கை வரலாற்று ஓவியம், இருபது ஆண்டுகளுக்கு முன்னர் 'தமிழ்நாடு' எனும் நாளிதழில் வெளியிடப்பட்டதாகும்.

இக்கட்டுரை தமிழ்க்கடல் மறைமலையடிகளின் வாழ்வையும் தொண்டையும் சித்திரிப்பதாகும். இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வானில் பொங்கி வரும் பெருநிலவாகப் பொலிவுறுபவர் நம் அடிகளாவர். எனவே, அவரைப் பற்றிய ஆய்வுரையின் தலைப்பையே, இந்நூலின் பெயராக அமைத்துள்ளேன்.

இக்கட்டுரைகளை நூல் வடிவில் வெளியிட இசைவு அளித்த பல்வேறு இதழாசிரியர்களுக்கும் பதிப்பாசிரியர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என் தமிழ்ப்பணிக்கு ஊக்கம் அளித்துவரும் தமிழ் அன்பர்கள், இந்நூலையும் கனிவுடன் வரவேற்பர் என நம்புகின்றேன்.

**சென்னை.**

30.புரட்...தி.ஆ. 2012. **க.த.திருநாவுக்கரசு**

# உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | அறங்கூறும் அவையம் | 1 |
| 2. | கற்பனைக்கு ஒரு கவிஞரேறு | 12 |
| 3. | இராமலிங்கர் கண்ட இறைவன் | 20 |
| 4. | பழமொழிகள் உணர்த்தும் பழந்தொழில் | 32 |
| 5. | கணக்காயர் | 50 |
| 6. | மெய்யுணர்வுக் காதல் நெறி | 54 |
| 7. | சும்மா | 73 |
| 8. | தமிழ் வளர்த்த அறவோர் | 78 |
| 9. | மண்டோதரி | 112 |
| 10. | பழமையில் பூத்த புதுமை | 125 |
| 11. | மனிதம் | 137 |
| 12. | தமிழ் நிலவு | 143 |
| 13. | நூலாசிரியரின் நூல்கள் | 158 |
| 14. | தமிழில் வெளியிட்ட கட்டுரைகள் | 161 |
| 15. | வாழ்க்கைக் குறிப்பு | 178 |

## கட்டுரைகள் வெளியிடப்பட்ட இதழ்கள்

| | |
|---|---|
| 1. அறங்கூறும் அவையம் | 'தமிழ்ப்பணி'. மார்ச்சு– ஏப்பிரல்,1972. |
| 2. கற்பனைக்கு ஒரு கவிஞரேறு | 'தமிழ்ப்பணி' ஜூலை, 1974. |
| 3. இராமலிங்கர் கண்ட இறைவன் | 'அருட்பெருஞ்ஜோதி' ஆண்டு மலர், செங்கை, ஜனவரி, 1964. |
| 4. பழமொழிகள் உணர்த்தும் பழந்தொழில் | 'நிலவளம்' சென்னை, பிப்பிரவரி – ஏப்பிரல் 1973 |
| 5. கணக்காயர் | 'நல்லாசிரியர் பாராட்டு விழா மலர்" சென்னை, ஏப்பிரல் 1973 |
| 6. மெய்யுணர்வுக் காதல் நெறி | 'சத்திய ஞான சபை நூற்றாண்டு விழா மலர்," வேலூர்,1964. |
| 7. சும்மா | 'மலைச்சாரல்' சோளிங்கபுரம், திசம்பர், 1973, |
| 8. தமிழ் வளர்த்த அறவோர் | 'தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளி விழா மலர்,' தில்லி, 1971 |
| 9. மண்டோதரி | 'கம்பன் மலர்', சென்னை, 1977. |
| 10. பழமையில் பூத்த புதுமை | இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்க மலர், அண்ணாமலை நகர், 1979 |
| 11. மனிதம் | 'தொழிலாளர் நல அதிகாரிகளின் ஆண்டு விழா மலர்' சென்னை,1963. |
| 12. தமிழ் நிலவு | 'தமிழ்நாடு' மதுரை, 12–9–1957 |

# 1

# அறங்கூறும் அவையம்

உணர்ச்சியின் பிண்டமாக உள்ளவன் மனிதன். அவனுடைய அறிவு வளர்ச்சியால் ஓரளவிற்குத் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயலுகிறான். இம்முயற்சியில் ஓரளவிற்கு அவன் வெற்றியும் பெறுகிறான். வாழ்க்கையில் உண்டாகும் உள்ளப் பண்பாட்டிற்கேற்ப, அவன் உணர்வு நிலையிலிருந்து அறிவு நிலையை எட்டிப் பிடிக்கின்றான். ஆயினும், வாழ்க்கையில் நெருக்கடிகளும் அதிர்ச்சிகளும் உண்டாகின்ற பொழுது, அவன் நிலை குலைந்து விடுகிறான்; அல்லது அழுக்காற்றினால் உள்ளம் குமைகின்றபொழுது அவன் உணர்ச்சி வயப்படுகிறான். அதனால், அவன் நடுவுநிலையிலிருந்து பிறழுகிறான். பிறன் பொருளிடத்துப் பற்றும் பாசமும் அவனுக்கு உண்டாகிறது. அப்பொருளைத் தன்னுடையது என்று அவன் உரிமை கொண்டாடத் தொடங்குகிறான். ஒரு பொருளிடத்து இருவர் உரிமை கொண்டாடத் தொடங்குகின்ற பொழுது தோன்றுவதே வழக்கு. இதனை,

> வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே எனது,
> எனது என்றிருப்பார், அது காரணமாகத் தம்முள்
> மாறுபட்டு அப்பொருண்மேற் செல்வது,

என்று பரிமேலழகர் தந்துள்ள விளக்கம் இங்குக் கருதத்தக்கது.[1]

---

1, திருக்குறள், அறத்துப்பால், பரிமேலழகர் உரைப்பாயிரம் கழகம், சென்னை, 1967.

நம்முடைய முன்னோர்கள் வழக்கினைப் பதினெட்டு வகையாகப் பாகுபடுத்தியுள்ளனர். அவை கடன்கோடல், உபநிதி, கூடிமேம்படல், நல்கியதை நல்காமை, ஒப்பிப் பணி செய்யாமை, கூலி கொடாமை, உடையன் அல்லான் விற்றல், விற்றுக் கொடாமை, கொண்டு உள்ளம் ஒப்பாமை, கட்டுப்பாடு கடத்தல், நிலவழக்கு. மாதர் ஆடவர் ஒழுகலாறு, தாய பாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக் கொடுமை, சூது, ஒழிபு என்பனவாகும்.

இவ்வழக்குகளை விசாரிக்கும் பொறுப்பு முதன்முதலில் சமூகத் தலைவர்களின் தலைமையில் இயங்கிய சமுதாய நிறுவனங்களிடத்தும், ஊராட்சி மன்றங்களிடத்தும் இருந்தது. காலப்போக்கில் மனிதன் எண்ணத் தெரிந்து, அறிவைப் பெருக்கிக் கலைகளை வளர்த்துக் கருத்து வகையால் முன்னேற்றம் அடைந்தான். பேரூர்களும் நகரங்களும் பெருகின. அந்நிலையில் தலைநகரில், அரசனுடைய தலைமையின் கீழே பெரிதும் அறங்கூறும் அவையம் அமைக்கப் பெற்றது. இவ்வாறு நாகரிக வளர்ச்சியின் நல்லதொரு சின்னமாக அறங்கூறும் அவையம் ஆதி காலத்தில் அமைந்தது.

குடிமக்களின் நலன் கருதி நாடாளும் மன்னன், மக்களிடையே உண்டாகும் வழக்குகளைத் தானே, நேரில் விசாரித்துத் தீர்ப்பு வழங்குவான். அந்நிலையில் அவனுடைய அரசவையே, அறங்கூறும் அவையமாகத் திகழ்ந்தது. மன்னனின் 'மனச்சான்றே' அறத்தின் ஊற்றாகவும், 'வழக்காற்று ஒழுக்கநெறியே சட்டத் தொகுப்பாகவும் பயன்பட்ட காலம் அது. அதனால்தான், 'ஒரு நாட்டின் அரசு, செயல் முறைப்படுத்தும் கொள்கைகளையும் நெறிமுறைகளையும் கொண்டதே அந்நாட்டின் சட்டம்' என்று கூறும் வழக்கம் உண்டாயிற்று.

## அறமும் நீதியும்

இன்று 'நீதி' என்னும் சொல்லையே நாம் பெரிதும் இப்பொருளில் பயன்படுத்தி வருகின்றோம். பண்டைக்காலத்தில் 'அறம்' என்னும் சொல்லையே இந்தப் பொருளில் நம் முன்னோர்கள் வழங்கியுள்ளனர். 'அறம்' என்னும் சொல்லிற்கு எட்டுவகையான பொருள்கள் வழக்கில் உள்ளன. அவற்றுள் ஒன்றே 'நீதி' என்பதாகும். விருப்பு வெறுப்பின்றி நடுவுநிலைமையோடு நின்று வழக்குகளைச் சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல், ஆராய்ந்து பார்த்துத் தீர்ப்புக் கூறும் 'நீதி' (Justice) நிர்வாக முறையையும், 'அறம்' என்னும் சொல் தொன்றுதொட்டு உணர்த்தி வருகின்றது.

வடமொழியாளர் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை 'நீதி' என்னும் சொல்லை 'இராசநீதி' என்னும் பொருளிலேயே கையாண்டுள்ளனர். தமிழ் மக்கள் 'நீதி' என்னும் சொல்லைப் பல்லவர் காலம் முதல் 'ஒழுக்க நெறி' என்னும் பொருளில் வழங்கி வந்துள்ளனர். அண்மைக்காலத்தில் தான், வடமொழியாளர் போற்றும் 'இராசநீதி'யின் ஒரு பகுதியான 'தண்டநீதி' என்னும் பொருளில் விளங்கும் வழக்கு விசாரணை முறைக்கு, 'நீதிமுறை' என்னும் பெயர் தமிழகத்தில் வழங்கத் தலைப்பட்டது.

## தொல்காப்பியர் கண்ட அறங்கூறும் அவையம்

பண்டைத் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பியல்புகளைத் தொகுத்துரைப்பது 'தொல்காப்பியம்' என்னும் ஒல்காப் புகழ் வாய்ந்த இலக்கண நூலாகும். அந்நூலுள்,

எட்டுவகை நுதலிய அவையத் தானும்

(தொல்.பொருள்.புறத். 21.)

என்னும் அடி, அறங்கூறு அவையத்தைக் குறிப்பிடுகின்றது. இதற்கு 'எட்டுப் பாகுபாட்டைக் குறித்த அவையகமும்' என்று இளம்பூரணர் பொருள் கூறுவர். மேலும், அவர் "அவையத்தானும்

ஏனைய அவையின் இவ்வவை மிகுதி உடைத்தென்றவாறு, அவையாவன: குடிப்பிறப்பு, கல்வி ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை என்பன"[2] என்று தந்துள்ள விளக்கம் இங்குக் கருதத்தக்கது.

நச்சினார்க்கினியர், இத்தொடருக்கு "எண்வகைக் குணத்தினைக் கருதிய அவையத் தாரது நிலைமையானும்* என்று பொருள்கூறி, "அவை குடிப்பிறப்புக் கல்வி ஒழுக்கம் வாய்மை தூய்மை நடுவுநிலைமை அழுக்காறின்மை அவாவின்மை என விவையுடையராய் அவைக்கண் முந்தியிருப்போர் வெற்றியைக் கூறுதல்" என்று குறிப்பிடுவர். இதற்கு எடுத்துக் காட்டாக.

குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு காமுற
வாய்மை வாய்மடுத்து மாந்தித் தூய்மையிற்
காத லின்பத்துத் தூங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலு(ம்)
அழுக்கா றின்மை யவாஅ வின்மையென
விருபெரு நிதியமு மொருதா மீட்டுந்
தோலா நாவின் மேலோர் பேரவை

என்னும் ஆசிரியமாலைச் செய்யுளைக் காட்டியுள்ளார்.[3]

இச் செய்யுள் அறங்கூறும் அவையத்து உறுப்பினர் களுடைய சீரிய பண்புகளை நயமுற எடுத்துரைப்பதை நாம் காண்கிறோம்.

## சங்ககாலத்தில் அறங்கூறும் அவையங்கள்

சங்க காலத்தில் அறங்கூறும் மன்றங்கள் பல இருந்தன அவை,

---

2. தொல்.பொருள். புறத். 17. இளம். உரை,கழகம், சென்னை , 1953.

3 தொல்.பொருள். புறத், 21 நச்சி. உரை, கணேசையர் பதிப்பு, சுன்னாகம், 1948.

அறமறக் கண்ட நெறிமாண் அவையம் (புறம். 224).

என்று போற்றப்பட்டன. 'அறிவானமைந்தோர் தொக்கிருந்த அவை' எனும் பொருளில் 'சான்றோரிருந்த அவையத்து' (புறம். 266) என்று ஒரு புலவர் அதைச் சுட்டி உள்ளார். பண்டைத் தமிழகத்தில் முடியுடை மூவேந்தர்களுடைய உறையூர் (உறந்தை), மதுரை, வஞ்சி மாநகரம் எனும் தலைநகரங்களில் அறங்கூறும் அவையங்கள் சிறப்புற்று விளங்கின. சோழப் பேரரசர்களின் தலைநகராக, நெடுங்காலம் மாண்புற்று விளங்கிய உறையூரில் புகழ்வாய்ந்த அறங்கூறும் அவையம் ஒன்று இருந்தது.

.....அறம்நின்று நிலையிற் றாகலின்
மறங்கெழு சோழர் உறந்தை

(புறம்.39)

மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறங்கெட அறியா தாங்கு

(நற்.400)

அறங்கெழு நல்லவை உறந்தை

(அகம். 93)

என்னும் பாடற்பகுதிகள் "வீரமிக்க சோழர்கள் ஆட்சிக்குட்பட்ட உறையூரில் உள்ள அறங்கூறும் அவையத்தில் என்றும் அறம் நிலைபெற்று விளங்கும்; அங்கு என்றுமே அறம் கெட்டுப் போனது இல்லை" என்னும் கருத்துக்களைத் தெளி வுறுத்துகின்றன.

மதுரை மாநகரிலும் இத்தகைய மன்றம் இருந்ததை.

செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூ றவையம்

என்று மதுரைக்காஞ்சி (490–92) சுட்டுகிறது. இதை

அரைசுகோல் கோடினும் அறங்கூ றவையத்து
உரை நூல் கோடி ஒருதிறம் பற்றினும்

என்று (சிலப். 5:135–6) இளங்கோவடிகளும் பாராட்டியுள்ளார்.

இவ்விலக்கியச் சான்றுகளால் பண்டைக்காலத் தமிழகத்தில் அறங்கூறும் அவையங்கள் இருந்தமை மறுக்கமுடியாத உண்மை என்பது புலனாகின்றது.

## அறங்கூறும் அவையத்தின் தலைவன்

பண்டைக்காலத்தில் அரசனே, அறங்கூறு அவையத்தின் தலைவனாக விளங்கினான். அரசனுடைய ஐவகைக் கடமைகளுள் 'முறை செய்தல்' ஒன்றாகும். ஒரு நாட்டின் அரசு செயல்படுத்தும் கொள்கைகளையும் நெறிமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டதே நீதி, இதனை 'முறை' என்னும் சொல்லால் வள்ளுவர் குறிப்பிடுவர்.

முறைசெய்து குடிமக்களைக் காப்பாற்றும் 'மன்னவன், மக்களுக்கு இறைவன்' என்று மதிக்கப்படுவான் என்னும் கருத்தமைய,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்

(குறள். 388)

என்றுவள்ளுவர்மொழிந்துள்ளமைஇங்குக்கருதத்தக்கதாகும். 'முறை செய்வது எப்படி?' என்னும் வினாவிற்கு மறுமொழி கூறுவதைப் போன்று,

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை

(குறள். 541)

என்னும் குறள் காணப் பெறுகிறது. இதனால், 'யாரிடத்திலும் குற்றம் இன்னதென்று ஆராய்ந்து, தாட்சண்யம் காட்டாமலும் நடுவுநிலைமையில் பிறழாமலும் செய்யத்தக்கதை ஆராய்ந்து செய்வதே நீதி முறையாகும்' என்பது பெறப்படுகிறது. இத்தகைய

அரும்பணியை அரசர்களே செய்தனர் என்பதை மேற்கண்ட குறட்பாக்கள் எடுத்துரைக்கின்றன.

இக்கருத்தை அரண்செய்கின்ற முறையில் கிள்ளி வளவனை, வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர் பாராட்டிப் பாடியுள்ள பாடலின் பகுதி ஒன்று அமைந்திருக்கிறது.

அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே
(புறம்.35)

மற்றும் தொண்டைமான் இளந்திரையன்,

முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி
(பெரும்பாண். 443–444)

வந்தான் என்று கூறப்படுவதாலும், இவ்வுண்மையை நாம் உணரலாம்.

இவற்றால், அரசனே அறங்கூறும் அவையத்தின் தலைவனாகவும், தலைமை நீதிபதியாகவும் செயற்பட்டான் என்பது புலனாகின்றது.

கரிகாற் சோழன் இளைஞனாக இருந்த காலத்தில், இரு முதியோர்களுக்கு இடையே உண்டான வழக்கினை விசாரிப்பதற்காக, நரைமுடி தரித்து அவையின்கண் எழுந் தருளி, வழக்கினை விசாரித்து நல்ல தீர்ப்பு வழங்கினான். இதனை,

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மாக்கள் உவப்ப – நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்....

என்னும் பழமொழிப்பாட்டு (6) அறிவிக்கிறது. இதனாலும் அரசனே, அறங்கூறும் அவையத்தின் தலைவனாகவும், நடுவராகவும் இருந்து வழக்குகளை விசாரிப்பது மரபெனத் தெரிகிறது.

## நடுவர்

அறங்கூறு அவையத்தின் தலைவனாக அரசன் பணிபுரிகின்றபொழுது, அவனுடைய 'ஐம்பெருங் குழுவை'ச் சேர்ந்த அமைச்சரும், அறவோரும், சேனாபதி முதலியோரும் அவையில் அமர்ந்து வழக்குகளைக் கூர்ந்து நோக்கித் தம் கருத்துக்களைக் கூறும் வழக்கமும் இருந்தது.[4]

சிற்சில சமயங்களில், தனக்குப் பதிலாக ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் ஒருவரை அறங்கூறு அவையத்தின் தலைவராக அமர்த்தி, அரசன் முறை செய்தலும் உண்டு. பூதப்பாண்டியன்,

அறனிலை திரியா அன்பின் அவையத்து
திறனில் ஒருவனை நாட்டி, முறை திரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக!

(புறம். 71.)

என்று குறிப்பிட்டுள்ளமையால் இதனை நாம் அறிகிறோம்.

எனவே, சங்ககாலத் தமிழகத்தில் அரசனே பெரும் பாலும் அறங்கூறும் அவையத்திற்குத் தலைவனாக விளங்கினான் என்றும், அவன் அவையத்தாரை (Jury)க் கலந்து முறை வழங்குவது மரபு என்றும் நாம் கூறலாம்: சில சமயங்களில் அறங்கூறும் அவையத்திற்கு அறிவும் ஆற்றலும், அறவுணர்வும் மனத்தெளிவும் உடைய ஒருவரைத் தலைவராக அரசன் அமர்த்துவதும் உண்டு என்று நாம் கருத இடமுண்டு. இவ்வாய்வினால், பண்டைக் காலத்திய அறங்கூறும் அவையத்தின் அமைப்பு முறை ஓரளவிற்குத் தெரிகிறது.

## சட்ட நூல்

இக்காலத்தைப் போன்று விரிவான சட்டத்தொகுப்புகள் பண்டைக் காலத்தில் இருந்திருக்க வாய்ப்பு இல்லை சட்டநூல்

4 சிலப். 5.137 அடி., உரை.

என்று நாம் கருதத்தக்க வகையில் யாதாகிலும் அக்காலத்தில் அறங்கூறும் அவையங்களால் போற்றப்பட்டிருக்குமானால், அவை அறநூல்களாகவே இருந்திருக்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் பண்டைக் காலத்தில் அறத்தை யுணர்த்தும் நூலிலேயே, ஆட்சிக் கலையைப் பற்றிய செய்திகளும் இணைந்தும் இழைந்தும் காணப்பெறுவதால், தனிப்பட்ட சட்டநூல்கள் இருந்திருக்க இயலாது. இளங்கோவடிகள்,

....அறங்கூ றவையத்து
உரை நூல் கோடி ஒருதிறம் பற்றினும்

(சிலப். 5:135–6)

என்னும் அடிகளில், அறங்கூறும் அவையங்களில் போற்றப்பட்ட 'நூலினைச்' சுட்டுகின்றார், இவ்'வுரை நூல்' யாதாக இருக்கலாம்? இவ்வடிக்கு 'அறங்கூறும் தருமாசனத்தார் உரைக்கும் நடுவுநிலைமை கோடி' என்பது அடியார்க்கு நல்லார் உரை. 'நூல்' என்பதற்கு அவர் 'நடுவுநிலைமை' என்று பொருள் கொள்ளுகிறார். ஆனால், நாம் 'நூல்' எனக் கொள்ளுவதில் தவறில்லை. ஒருக்கால், 'அது சட்ட நூலைக் குறிப்பதாகுமோ?' என்னும் ஐயம் நமக்கு எழலாம். அன்றைய நிலையில், நாம் அதைச் 'சட்டநூல்' எனக் கூறுவதைவிட, 'அறநூல்' எனக் கொள்ளுவதே பொருத்தமாகும்.

## வழக்கு விசாரணை முறை

அவையினுள் புகுந்தவுடனேயே, தம் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ளும் முதியோரைப் பற்றிப் பொருநராற்றுப் படை, 'அவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்* (188) என்று குறிப்பிடுகிறது.

பண்டைத் தமிழகத்தில் வழக்கு விசாரணை எவ்வாறு நடைபெற்றது என்பதை அறிவதற்குப் போதிய சான்றுகள் இன்று கிடைக்கவில்லை. அரசன் முன்னர்க் குற்றம் செய்த வனையோ, அவனுக்குப் பதிலாக அவனுடைய தந்தையை யோ கொண்டுவந்து நிறுத்துவர். குற்றம் சுமத்தப்பெற்றவனை

விசாரித்து, வழக்காற்று நெறிமுறைக்கேற்ப அவையத் தாரைக் கலந்து தண்டனை கொடுத்தல் உண்டென்பது தெரிகிறது.[5]

பொருள் வழக்காயின் இருதிறத்தினரையும் மன்னன் விசாரித்து, விருப்பு வெறுப்பில்லாமல், சமன்செய்து சீர் தூக்குங்கோல்போல் அமைந்து, தன் மனத்தில் பட்டதைத் தீர்ப்பாகக் கூறுவான்,[6]

**தண்டனை முறை**

பண்டைக்காலத்தில் திருட்டுப்போன்ற சிறிய குற்றங்களுக்குக் கூடக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. 'மரண தண்டனை' இக்காலத்தில் மிகப் பெரிய தண்டனையாகக் கருதப்பெறுகிறது. ஆனால், அக்காலத்தில் 'கொலைக்குக் கொலை' என்பது மட்டுமன்று; அதைவிட மிகச் சிறிய குற்றத்திற்கும் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது. அறியாமையால் செய்யப்பட்ட தவற்றிற்குக் கூடச் சில அரசர்கள் 'கொலைத் தண்டனை' கொடுத்திருக்கின்றனர். தண்டனையின் கொடுமையைக் கண்டு, அச்சத்தால் பிற மக்கள் அத்தகைய குற்றங்களைச் செய்யாமல் இருப்பார்கள் என்னும் உள்நோக்கத்தோடு இத்தகைய கொடிய தண்டனை கொடுக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால், தண்டனையின் மூலம் நிலைத்த பயனைப் பெறவேண்டுமெனில், 'கடிதோச்சி மெல்ல எறிக' என்று வள்ளுவர் அறிவுறுத்துகிறார். வரம்புகடந்த கடுமையான தண்டனையை விதிப்பதைப் போன்று பார்ப்பவர்க்குத் தோன்ற வேண்டும். ஆனால்வரம்புக்குட்பட்ட நிலையில், உள்ளத்தால் குற்றத்தை உணருமாறு தூண்டும் வகையில் மென்மையாகத் தண்டனையைக் கொடுக்கவேண்டும் என்னும் வள்ளுவர்

---

5 குறுந்தொகை, 292.

6 பழமொழி, 6.

கருத்து பண்டைக்காலத்தில் மேல்வரிச்சட்டமாக இருந்தது எனக் கூறலாம்.

## தமிழ் மொழியும் அறங்கூறும் அவையங்களும்

அறங்கூறும் அவையத்தில் தமிழே ஆட்சிமொழியாக இருந்தது. தமிழ்நாட்டில். தமிழ்மக்களை நடுவர்களாகக் கொண்ட அன்றைய அவையங்களில், தமிழைத் தவிர வேறெம்மொழியும் இடம்பெற முடியாத நிலை சங்ககாலத் தமிழகத்தில் இருந்தது. ஆனால், சோழப் பேரரசர் காலத்தில், தருமாசனத்தில் பட்டர்கள் அமர்ந்து வழக்குகளை ஆயத் தொடங்கிய காலத்தில், தமிழ்மொழியின் செல்வாக்குக் குறையத் தொடங்கியது. வெள்ளையர் ஆட்சியில் அயல்மொழிக்கு அரியணையைக் கொடுத்துவிட்டுத் தமிழ்மொழி வாழ்விழந்து நிற்கவேண்டிய அவலநிலை உண்டாயிற்று.

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்று பண்டைத் தமிழர் அறத்தைப் போற்றினர். அவர்கள் அவையங்களை அமைத்து, மக்களிடையே உண்டாகும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் கலையையும் நன்குகற்றிருந்தனர். அவர்கள் அமைத்து விட்டுச் சென்ற அடிப்படையின் மீது, பிற்காலத்தில் வந்தோர் நல்லதொரு நீதி நிர்வாக அமைப்பினை நிறுவத் தவறிவிட்டனர். சாதி அடிப்படையில் 'ஒரு குலத்திற்கு ஒரு நீதி' எனும் கோட்பாடு தமிழகத்தில் வேரூன்றத் தொடங்கியமையே, பண்டைத் தமிழகத்தின் அறங்கூறும். அவையங்கள் பிற்காலத்தில் – மறைந்தமைக்குக் காரணமாகும்.

# 2

# கற்பனைக்கு ஒரு கவிஞரேறு

கவிஞன் ஒரு மாய வித்தைக்காரன் அன்றாடவாழ்வில், நாம் நடைமுறையில் காணமுடியாத அழகையும் நேர்த்தியையும் நுண்ணுணர்வையும் செம்மை நலனையும் கவின்மிகு கற்பனையோடு குழைத்துக் 'கவிதை'யெனும் இலக்கியச் செல்வத்தை அவன் படைக்கின்றான்.

**பாட்டின்உடல்**

கவிதை மலர்வதற்குத் தூண்டுகோலாக இருப்பது உணர்ச்சித் துடிப்பு. அவ்வுணர்ச்சித் துடிப்பே, கவிஞனுடைய உள்ளத்தில் ஒடுங்கியிருக்கும் கற்பனையூற்றின் கண்ணைத் திறக்கின்றது; உண்மையை உணர்ந்தவாறு வெளியிடத் தூண்டுகிறது. அதனால், காலத்தையும் இடத்தையும் எளிதில் கடந்து, தான் உணர்த்த விரும்பும் கருத்துகளைக் கவர்ச்சியுடையதாக அவன் புனைந்துரைக்கின்றான். அந்நிலையில் அவற்றை உவமை, உருவகம் முதலியவற்றால் அழகுபடுத்தியும், வெவ்வேறாக உள்ள பொருள்களை இயைபுபடுத்தியும் வாழ்க்கையின் அனுபவத்தை வெவ்வேறான வண்ணங்களால் தீட்டியும் அவன் காட்டுகிறான். அப்பொழுது அது கலைவடிவம் பெறுகிறது. அந்தக் கலை வடிவம் கற்பவர் உள்ளத்திலும் அதே கற்பனையைப் பதிய வைத்து, உணர்ச்சியைத் தூண்டுகிறது. இதைக் கருத்தில் கொண்டே

'கற்பனையின் பொங்கலே கவிதை' என்று ஷெல்லி கவிதைக்கு இலக்கணம் வரைந்துள்ளார்.

கவிதைக்கு உயிர் உணர்ச்சி; உடல் கற்பனை; உடை ஒலிநயம் என்று திறனாய்வாளர் கூறுவர். உணர்ச்சியை உயிராகவும், கற்பனையை உடலாகவும் கொண்டு விளங்கும் கவிதைக்குக் கருத்தே உள்ளமாக அமைகிறது. உணர்ச்சி, கற்பனை, கருத்து ஆகிய மூன்றும் ஒன்றாக இயைந்து செயற்படும்பொழுதே, கவிதையில் ஒலிநயம் தோன்றுகிறது.

இவற்றுள், கவிஞருடைய உள்ளத்தை நிழற்படம் போலப் படம்பிடித்துக் காட்டும் ஆற்றலுடையது கற்பனை. கற்பனையின் சிறப்புக்கு உறுதுணையாக விளங்குவன உவமை, உருவகம் போன்ற அணிகள். இவற்றோடு கருத்தோவியம் (Imagery) சேர்ந்து ஐம்பொறிகள் வாயிலாக ஒருவன் நுகர்ந்து இன்புறத்தக்க கருத்துகளை உணரச் செய்கிறது.

## வாணிதாசரின் கற்பனை வளம்

இத்தகைய கற்பனை வளமிக்க கவிதைகளை இயற்றுவதில் கவிஞரேறு வாணிதாசனார் சிறப்புற்று விளங்குகிறார். அவருடைய பாடல்களில் உணர்ச்சி துள்ளுநடை போடும் ; கற்பனை களிநடம் புரியும்.

காலைக் கதிரவன் நீலக்கடலினைக் கிழித்து எழும் காட்சி கண்கொள்ளாக் காட்சி, 'அதை எப்படிச் சொல்வது?' என்னும் திகைப்பு நமக்கு உண்டாகும். ஆனால் கவிஞரேறுவின் கற்பனையுள்ளம் எங்கெங்கோ சிறகடித்துப்பறக்கிறது.

தொடுவான் மதிலுக்கப்பால்
தோன்றிடும் அழகைக் காண
நடுவினில் துளைத்த சந்தோ
அகண்டமோ, நடுவிளக்கோ
கடலிடை எழுந்த காலைக்
கதிரவன்? (எழில். 1: 2)

என்று நம்மை அவர் வினவுகிறார்.

நம் ஊரின் சந்து பொந்துகளில் செல்லும்பொழுது தள்ளாமையால் தளர்நடையிடும் தாய்மாரைக் காணுகின்றோம். அப்பொழுது ஔவை மூதாட்டியின் நினைவு நம் மனக்கண் முன்னால் நிழலாடுகிறது. அந்தப் பாட்டியை இன்றும், என்றும் இவ்வுலகில் வாழச் செய்துள்ளார் வாணிதாசர்.

நரைத்த முடி; வளைந்த முதுகு; குழி விழுந்த கண்கள்; பொக்கை வாய்; வெளுத்த முகம்– இவற்றையுடையவளே அந்த அம்மை! இதை,

முன்நரை கூந்தல்; கொட்டை
முந்திரி முதுகு; கண்கள்
சின்னமா வெதும்பல்! பொக்கைச்
சிரிப்புவாய் கரும்புச் சொத்தை
மின்னல்சேர் கார்கா லத்து
வெண்மதி முகத்தின் தோற்றம்!

(எழில். 1:6)

என்று சொல்லோவியமாக அவர் தீட்டியுள்ளார்.

இப்பாட்டில் 'கொட்டை முந்திரி முதுகு', 'கண்கள் சின்னமா வெதும்பல்', 'பொக்கைச் சிரிப்புவாய் கரும்புச் சொத்தை' என்னும் கருத்தோவியங்கள் கற்பனைத் திறனுக்கு வலிவும் பொலிவும் அளிக்கின்றன.

நாம் எல்லாரும் நாள்தோறும் யாதாகிலும் ஒரு நூலைப் படிக்கிறோம். 'ஆனால், அது எத்தகையது?' என்பதைப் பற்றியெல்லாம் நாம் நினைத்துப் பார்ப்பதே இல்லை! நம் கவிஞர் நூலின் இயல்பினையும், அருமை பெருமைகளையும் மிகநுட்பமாக அலசியாராய்ந்துள்ளார்.

கருத்தினில் பிறந்து மக்கள்
காதினில் தவழ்ந்து, தாளிக்
குருத்தினில் வளர்ந்து தோளில்
குன்றினில் துள்ளியாடி
அருங்கலை அள்ளி அள்ளி
அளிக்கின்ற வள்ள லாகி
விருந்தூட்டு கின்றாய் இன்று
வெள்ளைத்தாள் கோட்டைக் குள்ளே! (எழில். நூ.2)

நூலினை,'வெள்ளைத்தாள் கோட்டையாக' உருவகப் படுத்தியுள்ள திறம் புதுமையானது; போற்றத்தக்கது. 'மாந்தர்தம் மனக்கோட்டந் தீர்ப்பது நூல்' என்பர் பண்டைச் சான்றோர், நம் கவிஞர் பெருமான், 'ஆன்றோர் உள்ளமே உயர் நூலாகும்' என்றும், 'எந்த ஈட்டியும் அரசும் நூலை எதிர்த்துப்பின் மீண்டதில்லை' என்றும் வரலாற்று உண்மைகளை எடுத்துரைக்கின்றார்.

உணர்ச்சியின் பிழம்பாக விளங்குபவர் நம் கவிஞர். தாம் உணர்த்த விரும்பும் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு, வாயிலாக உள்ள பொருள்களைத் தம்முடைய மனக் கண்ணால் காணுகின்றார். அவற்றை உவமை, உருவகம் முதலிய கற்பனை மலர்களால் பிணைத்துக் கூற முயன்று உள்ளார். வெவ்வேறாக உள்ள பொருள்களைத் தம் வாழ்க்கை அனுபவம் என்னும் கயிற்றால் பிணைத்து, அவற்றிடையே புதியதோர் பொலிவை அவர் ஊட்டியுள்ளார், அதற்காக, அவர் பயன்படுத்தியுள்ள சொற்கள் இருவகைச் செயல்முறைகளை மேற்கொள்ளுகின்றன. படிப்பவருடைய உள்ளத்தில் கருத்தோவியங்களைத் தோற்றுவிப்பதோடு, உணர்ச்சிமிகு அனுபவத்தையும் அவை நுகரச் செய்கின்றன.

கடல் அலைகள் ஓயாது எழுந்தும், வீழ்ந்தும், கரையினை முட்டியும் மோதியும் புரளுகின்றன. இதைக் காணும் கவிஞருக்கு அது ஓயாது 'போர்' புரிவதாகத் தோன்றுகின்றது

பொங்கிச் சீறி அலையெழுப்பிப்
போரைச் செய்யும் கடல்

(எழில். 2:5)

என்று அவர் சித்திரித்துக் காட்டுகிறார்.

போர்க்களத்தில் போர்புரியும் பண்டை நாளையப் போர் முறையைக் கவிஞர் நமக்கு நினைவூட்டுகிறார். கடலின் கைகளே அலைகள். தாங்கள் பரந்து விளையாட வொட்டாமல் தடுக்கும் அரக்கனாகிய கரையினை, அவ்வலைகள் எதிர்த்துப்

பன்னெடுங் காலமாகப் போரிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், அந்த அரக்கன் தோல்வியுற்றால், நாம் எல்லாம் கடலின் கொடும் பசிக்கு இரையாகி விடுவோம் அல்லவா? எனவே, இப்போராட்டம் முடிவுறாமல் என்றும் நடைபெற்றுக் கொண்டே இருக்கட்டும் என அவர் கடலை வாழ்த்திப் பாடியுள்ளமை சிந்தனைக்குச் சிறந்த விருந்தாகும் .

## படைப்புக் கற்பனை

கற்பனையை மூவகையாகப் பாகுபடுத்திக் கூறுவர். அவை படைப்புக் கற்பனை, இயைபுக் கற்பனை, கருத்து விளக்கக் கற்பனை என்பனவாகும். தன்னுடைய அனுபவத்தில் கண்ட பண்புகளையும் உண்மைகளையும் கவிஞன் ஒருவன், எத்தகைய கட்டுப்பாடும் இல்லாமல் தானே தேர்ந்தெடுத்து, அவற்றை ஒன்றாக இணைத்துப் புதியதொரு முழுநிறைவான வடிவத்தைப் படைத்துக் காட்டுந் திறனே படைப்புக் கற்பனை (Creative Imagination) யாகும்.

.....தனிமனிதன் நல்வாழ்வும் சரியும் என்றே
அழைப்பளித்தே பாழடைந்த
கோட்டைமதில் அறிவுறுத்தும்

(எழில். 3:5)

இடிந்த கோட்டைகள் பல நாட்டிலே உள்ளன. நாம் அவற்றைப் பார்த்துள்ளோம், ஆனால், நம் உள்ளத்தில் எத்தகைய எழுச்சியும் உண்டாவதில்லை; கவிஞருடைய அகத்தே 'தனிமனிதனின் நல்வாழ்வு சரிந்த சரித்திரமாக' அவை காட்சி தருகின்றன.

சோலையில் பல மரங்கள் உள்ளன. அவற்றின் வளம் தான் நம்மைக் கவரும். ஆனால், நம் புலவருக்கோ அச்சோலையே ஒரு கோட்டையாகத் தோன்றுகிறது. அதிலுள்ள மரங்களோ தூண்களாகத் தோன்றுகின்றன.

சோலையாம் கோட்டையின் உள்ளே
தூண்களாம் மாபலா தென்னை.

(எழில். 6: 7)

## இயைபுக் கற்பனை

இரண்டாவது வகைக் கற்பனையை இயைபுக் கற்பனை என்பர், கவிஞன் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் உணர்ச்சி தனக்குப் பொருத்தமான மற்றொரு காட்சியை நினைவிற்குக் கொண்டுவரும். அப்பொழுது, முன்பு மனத்தில் பதிந்திருந்த உணர்ச்சியை அது கலை வடிவம் பெறச் செய்கிறது. இவ்வாறு ஒத்த கருத்தை அல்லது உணர்ச்சியை இயைபுபடுத்திப் புனைந்துரைப்பதையே இயைபுக் கற்பனை (Associative Imagination) என நாம் போற்றுகிறோம்.

அன்றாட வயிற்றுப் பிழைப்பிற்கு அல்லற்பட்டு, கூலி வேலை செய்து வாழும் மக்கள் மிகப் பலராவர். அவர்கள் வாழ்வில் ஒளியும் இல்லை; பொலிவும் இல்லை; எப்பொழுதும் இல்லாமையும் போதாமையும் அவர்களை வாட்டி வதைக்கின்றன. இக் காட்சியைக் குளிர்காலத்து மாலைப் பொழுதோடு இயைபுபடுத்திப் பார்க்கிறார் கவிஞர். கதிரவன் ஒளி மங்கிய நிலை; 'உஸ்' என்று ஊதைக்காற்று வீசுகிறது; குன்றுகளே குளிரால் நடுங்கும் நிலை; இத்தகைய பருவத்தில் எங்கும் மக்கள் நடமாட்டம் குறையும்: ஆரவாரம் இருக்காது: ஊரே வெறிச்சோடியிருக்கும். இத்தகைய மாலைநேரம் கூலியாட்களின் கொதிமனம் போல பொலிவிழந்து இருப்பதாகக் கவிஞர் படம்பிடித்துக் காட்டுகிறார்:

கூலியாட்களின் கொதிமனம் போலொளி
குன்றிய குளிர்மாலை

(எழில். 4: 9)

மங்கையரின் இடையைப் புகழ்ந்து பாடாத பாவலரில்லை; ஆனால், நம் கவிஞருடைய கற்பனையில் தமிழ் இலக்கணத்தின் நுட்பம் வெளிப்படுகிறது.

துடிபோல் இடையோ? ஒருபிடி இடையோ?
குற்றிய லுகரத் தொலியோ? அறியேன்

(எழில்.3)

தமிழ் ஒலியமைப்பில் குற்றியலுகரத்தின் பண்பையும் பயனையும் அறிந்தவர், இவ்வுவமையின் உள்ளார்ந்த சிறப்பினை நன்குணர்வர். இவ்வுவமையும் இயைபுக் கற்பனையின்பாற்பட்டதேயாகும். தாம் கண்ட மகளிர் இடையையும், தாம் அறிந்த குற்றியலுகரத்து ஒலியையும் ஆசிரியர் இயைபுபடுத்தி ஒரு கருத்தோவியத்தைப் படைத்துள்ளார்.

## கருத்து விளக்கக் கற்பனை

கவிதைக்குக் கலைமெருகு அளிக்கும் கற்பனை வகையுள் மூன்றாவதாகச் சிறப்புற்று விளங்குவது கருத்து விளக்கக் கற்பனை (Interpretative Imagination) யாகும். பொருள் உணர்ச்சி, கருத்து ஆகியவற்றிடையே பொதிந்துள்ள பயன் மதிப்புகளைக் கவிஞன், தன் உள்ளத்தால் உணர்ந்து, அவற்றிற்கு ஒரு கருத்து விளக்கம் தர உதவும் அறிவுத்திறனே கருத்து விளக்கக் கற்பனையாகும்.

வாடிய மலரைக் காணும் கவிஞரின் உள்ளம், இன்றைய சமுதாயத்தின் வாடிய அவல மலர்களின் நிலையை நினைந்து வருந்துகிறது. 'அவ்வவல நிலைக்குக் காரணம், யாது?' என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்காததனால் அவர்களுக்கு 'வழி' பிறக்க வழியில்லை என்று அவர் அறிவிக்குந் திறனில் கருத்துவிளக்கக் கற்பனை கவினுற்று விளங்குகிறது:

கசங்கிய மலரே: உன்னைக்
கண்டதும் இந்த நாட்டில்
கசங்கிய மலர்கள் சிந்தும்
கண்ணீரென கண்முன் தோன்றும்
கசங்கிய தெதனால் என்று
கருத்தூன்றிப் பாரா மக்கள்

கசங்கியே வாழ்த லன்றிக்
களிப்போடு வாழ்த லுண்டோ?

(எழில், வாடி,1)

இத்தகைய பாடற்பகுதிகள் பலவற்றை வாணிதாசரின் பாடல்களில் நாம் காணுகின்றோம். இவை யாவும் மனித வாழ்க்கையைப்பற்றி அவர் கொண்டுள்ள விழுமிய கருத்து களைத் தெரிவிக்கின்றன.

கனிஞரேறுவின் கற்பனைத் திறனை முழுமையாகச் கண்டின்புற இங்கு வாய்ப்பில்லை. அக்கற்பனைக் கடலுள் மூழ்கித் திளைக்க, அவருடைய கவிதைத் தொகுதிகள் அனைத்தையும் சுவைத்து இன்புற முயலுவோமாக.

# 3

# இராமலிங்கர் கண்ட இறைவன்

## மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடி

இன்று இந்தியா மறுமலர்ச்சி அடைந்து வருகிறது. இம்மறுமலர்ச்சிக்கு – சிறப்பாக சமய வாழ்வின் மறுமலர்ச்சிக்கு வட இந்தியாவில் இராஜாராம் மோகன்ராய், இராம கிருஷ்ணர், விவேகாநந்தர் முதலியோர் வழிகோலினர். தமிழகத்தில் மறுமலர்ச்சி இயக்கத்திற்குக் கட்டியங் கூறியவர் இராமலிங்க அடிகளாவர். இவ்வருளாளர்கள் தோன்றிய காலத்தில் சமய உண்மைகள் மறக்கப்பட்டு, சமயச் சடங்குகளே 'உண்மையான சமயம்' என்ற தவறான எண்ணம் நாடெங்கும் பரவி இருந்தது. அந்த எண்ணத்தின் அடிப்படையில் போலிக்கொள்கைகளும், பொய்யான கதைகளும் மக்களின் மதியை மயங்கச் செய்தன.

இந்நிலையில் சமயத்தின் மீது படிந்திருந்த மாசினைத் துடைத்து, அதனைப் பேரொளிபெற்று விளங்குமாறு செய்வதற்கு வள்ளலார் அரும்பாடுபட்டார். அவ்வரும் பணியை ஆற்றுவதற்கு, அவர் பின்பற்றிய வழியே சன்மார்க்க நெறியாகும்.

## மனித இனமும் தெய்வ நம்பிக்கையும்

மனிதனுடைய பழக்கவழக்க மரபுகளில் 'சமயம் என்பது ஓர் உயிர் போன்று விளங்கி வரும் சாதனமாகும்.

உயிரினங்கள் காலத்திற்கும். இடத்திற்கும் தேவைக்கு மேற்பத் தம் இயல்புகளை மாற்றியும் திருத்தியும் புதுப்பித்துக் கொள்ளுகின்றன. அதைப் போன்று, சமயமும் மனித இனத்தின் நாகரிக வளர்ச்சிக்கேற்ப வளர்ச்சியுற்று வந்திருக்கிறது. ஆதி மனிதன் அச்சத்தினால் இயற்கைச் சக்திகளைப் போற்றி வணங்கினான். ஆனால், அவனே எண்ணத் தெரிந்து அறிவைப் பெருக்கிக் கலைகளை வளர்த்துக் கருத்து வகையால் உயர்ந்த நிலையை அடைந்த காலத்தில், இறைவனை அன்பின் ஊற்றாகவும் அறிவின் ஒளிப்பிழம்பாகவும் போற்றி வழிபடலானான். இதனால்தான், ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலா இறைவனுக்கு ஆயிரம் திருநாமங்களும், திருமேனிகளும் தோன்றலாயின.

அத்தெய்வங்களை அடிப்படையாகக் கொண்டு பல சமய நிலையங்களும், தத்துவ நெறிகளும் பல்கிப் பெருகின. பொய்தீர் ஒழுக்க நெறி' என்று போற்றப்பட்ட கடவுள் நெறியில், சமய வாழ்வின் சிந்தனைக் குழப்பங்களும், தன்னலப் போக்குகளும் தலைதூக்கத் தொடங்கின. 'என் தெய்வம், உன்தெய்வம்' என்ற வேறுபாட்டோடு கூடிய வெறுப்புணர்ச்சியும் விரும்பப்படாத வகையில் வளர்ச்சியுற்றது.

## ஒன்றே தெய்வம் – பழைய கோட்பாடே

பண்டை உலகில், மனிதனுடைய சிந்தனை உரிமையை மதித்துப் போற்றிய நாடுகளுள் நம்முடைய இந்திய நாடு முதலிடம் பெறுகிறது. அதனால்தான், அது 'வேற்றுமைக்கு இடையே ஒற்றுமை காணும்' உயர்ந்த பண்பினை உதட்டளவில் போற்றாமல், நடைமுறையில்– ஏன்? அன்றாட வாழ்விலும் அயராது கடைப்பிடித்து வந்திருக்கிறது. இப்பண்பாட்டில் ஊறித் திளைத்த காரணத்தினால் நம் நாட்டில் தோன்றிய அருளாளர்கள் இறைவனை ஒருவனாகவே கண்டனர்.

உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே!

என்று அப்பரும்,

ஒன்று கண்டீர்; உலகுக்கு ஒரு தெய்வம்
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

என்று திருமூலரும்.

ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு

என்று பட்டினத்தடிகளும்,

வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கில் விளங்கு பரம் பொருளே நின் விளையாட்டல்லால் மாறுபடுங்கருத்தில்லை,

என்று தாயுமானவரும் தாம் பெற்ற ஆன்மிக அனுபவத்தையும் மெய்யறிவின் பயனையும் இந்த உலகிற்கு உரைத்துச் சென்றனர்.

## வள்ளலாரும் கடவுள் நெறியும்

பதினாறாம் பதினேழாம் நூற்றாண்டுகளில் அரசியல் வீழ்ச்சியுற்றமையால் தாழ்ச்சியுற்ற நமது தாயகம், இந்த உண்மையை மறக்க நேர்ந்தது. இதனால், அறியாமை இருள் மக்கள் உள்ளங்களைக் கவ்விக் கொண்டது. இராமலிங்க அடிகள் தோன்றியபொழுது, நாட்டு மக்களின் மனநிலையை அவர் நன்குணர முடிந்தது. மக்கள் மனத்தில் மண்டிக் கிடந்த மாயஇருளைஅகற்றுவதற்குஅவர்பெரிதும்முயன்றார்.எனவே, அவர் போலி மதவாதிகளையும், அவர்தம் கொள்கைகளையும், சடங்கு நெறிகளையும் சாடினார்.

ஆறு கோடியாஞ் சமயங்கள்; அகத்தினு மதன்மேல்
வீறுசேர்ந்த சித்தாந்த வேதாந்த நாதாந்தத்
தேறும் மற்றைய அந்தத்துஞ் சிவம் ஒன்றேயன்றி
வேறுகண்டிலேன் கண்டிரேற் பெரியர்காள் விளம்பீர்!

இப்பாடலில் 'ஒன்றே தெய்வம்' என்ற கோட்பாட்டை அடிகள் 'சிவம் ஒன்றே' என்ற தொடரின் மூலம் அறிவிக்கிறார். இங்குச் 'சிவம்' என்பது சைவருக்குரிய தெய்வத்தை மட்டும் குறிப்பதன்று. எல்லையற்ற பரம்பொருளாகிய இறைவனையே அது குறிக்கின்றது. தம் வழிபடு தெய்வமாகிய சிவத்தின் மூலம்,

அடிகள் இறைவனைக் கண்டவர். அதனால் 'கடவுள் ஒன்றே' என்று சொல்ல வந்தவர் 'சிவம் ஒன்றே என்று அறுதியிட்டுக் கூறுவதோடு அமையாமல், வேறுயாராகிலும் பல்வேறு தெய்வங்கள் உண்டென்பதைக் கண்டிருந்தால், கண்டிரேற் பெரியர்காள் விளம்பீர்" என்று பணிவோடும் பண்போடும் அவர் வேண்டுகின்றார்.

மேலும், எதற்கெடுத்தாலும் "வேதத்தில் சொல்லி இருக்கிறது; இந்த சாத்திரத்தில் சான்று இருக்கிறது; அந்தப் புராணத்தில் புதைந்து கிடக்கிறது எனவே அது உண்மை" என்று கூறி, உலகை ஏமாற்றுவோரைக் கண்டு அவர் எள்ளி நகையாடுகிறார்.

வேதா கமங்கள் என்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதா கமத்தின் விளைவறியீர் – சூதாகச்
சொன்னவலால் உண்மையொளி தோன்ற உரைத்தலிலை
என்ன பயனோ இவை?

என்று வள்ளலார் உலகத்தவரைச் சிந்திக்குமாறு தூண்டுகிறார். பயனற்றவற்றை, தேவையற்றவற்றை, மக்களை அறியாமை இருளில் ஆழ்ந்து உறங்குமாறு தூண்டுவனவற்றையெல்லாம் அடியோடு அழித்தொழித்து, "புதியதோர் உலகு செய்வோம்; போரிடும் இவ்வுலகத்தை வேரொடு சாய்ப்போம்!' எனக் கூற விரும்புகின்றார் அடிகளார். ஆனால், அதைத் தம் கருத்தாகக் கூறாமல்– இறைவன் தமக்குக் காட்டிய வழியாகவே, அவர் அதைப் போற்றுகிறார்.

இருட்சாதி தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப் புன்செயி லெருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச்சிரம
வழக்கெலாங் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டுத்
தெருட்சாருஞ் சுத்தசன் மார்க்க நன்னீதி
சிறந்து விளங்கவோர் சிற்சபை காட்டும்
அருட்சோதி வீதியி லாடச் செய்தீரே
அருட்பெருஞ் ஜோதியென் னாண்டவர் நீரே

என்று அவர் இறைவனைப் போற்றுகின்றார்.

எனவே, மக்கள் எல்லாரும் உண்மை நெறியாகிய சன்மார்க்க நெறியில் சேர்ந்து 'ஒன்று பரம்பொருள், நாமதன் மக்கள்' என்ற எண்ணத்தோடு வாழ,

திருநெறியொன் றேயதுதான் சமரசசன் மார்க்கச்
சிவநெறியென் றுணர்ந்துலகீர் சேர்ந்திடுமின் ஈண்டுர்

என்று வள்ளலார் அழைப்பு விடுக்கின்றார்.

## இராமலிங்கர் கண்ட கடவுட் காட்சி

இறைவனுடைய இருப்பில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு இராமலிங்கர் வாழ்ந்தார். இளமை முதல், அவர் போற்றி வழிபட்ட தெய்வம் அம்பலவாணராவார். அவருடைய உள்ளத்தையும், உயிரையும் உடலையும் ஆட்கொண்ட இறைவன், அவருக்கு அம்பலவாணராகத் தோற்றமளித்தார். "சார்பினால் தோன்றாது, தான் அருவாய் எப்பொருட்கும் சார்பென நிற்கும்" எங்கும் நிறைந்த இறைவனை, எல்லாமாய் விளங்கும் இறைவனை, அவர் அம்பலவாணராகப் போற்றி வணங்கினார். இதை,அவரேபலபாடல்களில்தெரிவித்துள்ளார்.

அருட்சோதித் தெய்வமெனை யாண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே யாடுகின்ற ஆனந்தத் தெய்வம்.

என்றும்,

ஆனந்தத் தாண்டவ ராஜனடி – நமை
ஆட்கொண் டருளிய தேஜனடி

என்றும் அடிகள் கூறுவன இதற்குப் போதிய சான்றாகும்.

இவ்வாறு, குறிப்பிட்ட ஒரு தெய்வத்தைத் தம்முடைய வழிபடு தெய்வமாகப் போற்றிய பெரியார், பிற தெய்வங்களும் தம்முடைய தெய்வத்தைப் போன்ற ஒப்பற்ற பரம்பொருளின் பல்வேறு வடிவங்களே என்ற பரந்த நோக்குடையவராகவும் விளங்கினார்.

செய்யப் பெறும் நகைகள் பல. ஆனால், அவற்றிற்குப் பயன்படுத்தப் பெறும் பொன் ஒன்றே; செய்யப்பெறும்

மண்பாண்டங்கள் பல. ஆனால், அவற்றைச் செய்வதற்குப் பயன்படுத்தப் பெறும் மண் ஒன்றே: பல நிற வண்ணங்களிலே பசுக்கள் உள்ளன. ஆனால், அவை அனைத்தும் கொடுக்கும் பால் ஒன்றே; உலகில் உள்ள உயிர் இனங்கள் தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, செடி கொடிகள் என்று ஏழு வகைப்படும். ஆனால், அவற்றில் பொருந்தியுள்ள உயிர் ஒன்றே: இவற்றைப் போன்றே பொருந்திய சமயங்கள் பலவும் தத்தமக்குரிய பேரால் வேறுபடுகின்றன. ஆனால், அச்சமயங்களின் முடிவாக – தலைவனாகத் திகழும் இறைவன் ஒருவனே என்னும் கருத்தினை நம் அடிகளார் அல்லும் பகலும் அயராது எடுத்தியம்பியுள்ளார்.

'எம்மதமும் சம்மதம்' என்பதே இராமலிங்க அடிகளின் கோட்பாடாகும். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதோடு அமையாமல், உலகில் உள்ள சமயங்களினூடே திகழும் பொதுமைப் பண்புகளையும் உணர்ந்து அவர் போற்றியுள்ளார்.

> எம்மத நிலையும், நின்னருள் நிலையில் இலங்குதல் அறிந்தனன்
> எல்லாம் சம்மத மாக்கிக் கொள்கின்றேன்

என்பது அடிகளின் அருள்வாக்கு.

> ஒன்றே பொருளெனின் வேறென்ப, வேறெனின்
> அன்று என்ப ஆறு சமயத்தார்

என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அறுவகைச் சமயத்தினரும் பூசலிட்ட காட்சியைக் கல்லாடர் குறிப்பிட்டுள்ளார். அத்தகைய சமயவாதிகள் 'மெய்யுணர்வு பெற்ற மெய்யறிவாளர்களா?' என்ற ஐயம் நமக்கு உண்டாவது இயற்கை.

ஆனால், உண்மையான அருளாளர்களும், மெய்யுணர்வு பெற்ற மெய்ஞ்ஞானிகளும் வேற்றுமைக்கு இடையே ஒற்றுமை கண்டதோடு, அச்சமயங்கள் உணர்த்தும் தெய்வங்களை எல்லாம் தம்முடைய தெய்மாகவே கருதிப் போற்றினர். அவ்வருளாளர் வழியிலே வந்த நம் இராமலிங்கர் இறைவனை

வேண்டிக் கேட்ட வரங்கள் பல அவற்றுள்,

> எல்லாமுடைய அருட்பெருஞ்சோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி, எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆச்சிரமம் முதலிய உலக ஆசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்தில் பற்றாவண்ணம் அருள் செய்தல் வேண்டும்

என்று கேட்ட வரம் முக்கியமானதாகும். இதில் 'சுத்த சன்மார்க்கத்திற்குச் சமயங்கள், மதங்கள் தடையாகவுள்ளன' என்று அவர் கூறுவது பொருந்துமா எனச் சிலர் ஐயுறவு கொள்ளலாம்.

மனிதன் சென்றடைய விரும்புவது இறைவனை. அவ்விறைவனை அடைவதற்குரிய வழிகளாக அமைந்தவையே சமயங்கள். அச்சமயங்களுள் ஒன்றை நல்லது என்றும், மற்றொன்றைத் தீயது என்றும் கூறுவது அறியாமையாகும். அவ்வாறு கூறுகின்றவர், குன்றைக் கண்டு ஓயாது குரைத் தெழும் நாயைப் போன்றவர்களாவர் என்று திருமூலர் குறிப்பிட்டுள்ளார்:

> ஒன்றது பேரூர்; வழியா றதற்குள;
> என்றதுபோல இருமுச் சமயமும்:
> நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
> குன்று குரைத்தெழு நாயை யொத்தார்களே

இப்பாட்டின் உட்பொருளை உணர வல்லார் அடிகளின் உள்ளடக்கிடக்கையை எளிதில் உணர முடியும். சமயத்தின் உள்ளார்ந்த பொருளை உணராது அல்லது உணரவொட்டாமல் மூடி மறைக்கப்படும் செயல்களுக்கு இடந்தருகின்ற சடங்குகள் மலிந்த சமயத்தையே அவர் சாடுகிறார். வேறோர் இடத்தில்,

> கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்
> கூட்டமும்அக் கூட்டத்தே கூவுகின்ற கலையும்

கள்ளமுறும் அக்கலைகள் காட்டியபல் கதியும்
காட்சிகளும் காட்சிதரு கடவுளரும் எல்லாம்
பிள்ளைவிளை யாட்டு

என்று அடிகள் அறிவித்துள்ளமை மேற்கண்ட கருத்தை அரண் செய்கிறது.

இத்தகைய மெய்யுணர்வாளருக்கு 'ஒன்றே தெய்வம்' என்ற கொள்கையை உணர்த்தியவரும் இறைவனே யாவார். இதனை இராமலிங்க அடிகள் உருக்கத்தோடு உரைத்துள்ளார்.

எவ்டைத்தும், எவ்வுயிர்க்கும், இலங்குசிவம் ஒன்றே
என்னாணை என் மகனே! இரண்டில்லை யாதுச்சு
செவ்வடத்தே அருளொடுசேர்த்து இரண்டெனக்கண்டறிநீ
திகைப்படை யேல் எனறெனக்குச் செப்பிய நற்குருவே!

என்ற அருட்பாவில் வரும் 'சிவம்' என்ற சொல் 'தெய்வம் கடவுள், பரம்பொருள்' என்ற பொருளிலேயே கையாளப் பட்டுள்ளதை நாம் காணலாம்.

## பிற்சமயத்தாரின் கடவுளும் சிவனே

எம்மதமும் சம்மதமே என்ற இலட்சிய நோக்கொடு உலகத்தின் சமயத் தத்துவங்களை எல்லாம் ஆராய்ந்து அறிந்த வள்ளலார், 'ஒன்றே தெய்வம்!' என்ற தம்முடைய விழுமிய கோட்பாட்டை மிகச் சுருக்கமாகவும், மிகத் தெளிவாகவும் இரண்டு பெண்களின் வாயிலாக உலகிற்கு உணர்த்தியுள்ள திறம் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

சமயஉலகம்பண்டைத்தமிழரின்அகப்பொருள்நெறியைப் புதிய முறையில் போற்றிக் காத்து வந்துள்ளது. அகப்பொருள் இலக்கியத்துள் தலைவன்,தலைவி, தோழி முதலியோர் வருவர். அக்காதல் நெறியை 'மெய்யுணர்வுக் காதல் நெறியாக' மாற்றிய அருளாளர் இறைவனைத் தலைவனாகவும், ஆன்மாவைத் தலைவியாகவும், நல்வினையைத் தோழியாகவும் உருவகப்படுத்திக் கூறுவர். இதனை "நாயக–நாயகி பாவம்"

என்பர். இம்முறையில் அடிகள் பாடியுள்ள பாடல்கள் பல. அவற்றுள் இரண்டின் கருத்தை நாம் இங்குக் காண்போம். அப்பகுதியில் தோழியும், தலைவியும் உரையாடுகின்றனர். அவ்வுரையாடலில் 'ஒன்றே தெய்வம்' என்ற கோட்பாட்டை அடிகள் தெளிவுறுத்தியுள்ளார்.

அவ்வுரையாடலை நாம் கேட்போம். தோழி வினவுகிறாள்; என்ன அம்மா? அம்பலத்தே ஆடுகின்ற உன் கணவரின் திருப்பெயரைச் சொல் என்று நான் கேட்டேன்; நீயோ என் கணவர் பெயரையா தெரிந்து கொள்ள வேண்டும்? இதோ சொல்லுகிறேன் என்று தொடங்கி 'அவரை நான் அருகர் என்பேன்; புத்தர் என்பேன்; அயன் என்பேன்; நாராயணன் என்பேன்; அரன் என்பேன் ஆதிசிவன் என்பேன்; சதாசிவம் என்பேன்; சத்திசிவம் என்பேன்; பரமன் என்பேன்: பிரமம் என்பேன்; பரப்பிரமம் என்பேன்! சுத்தசிவம் என்பேன்; என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போகிறாயே; உனக்கென்ன பைத்தியமா பிடித்து விட்டது?

**தலைவி மறுமொழி பகருகிறாள்:**

சிற்சபையில் நடம்புரியும் என் நாயகனாருக்குப் புறச் சமயங்களாகிய சமண, பௌத்தம் ஆகியவற்றின் தெய்வங்களுடைய பெயர்களும், அகச் சமயங்களும் தத்துவக் கோட்பாடுகளையுடைய வைணவம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் போன்றவற்றால் உணர்த்தப்படும் இறைவனுடைய பெயர்களும் பொருந்துமா என்றா கேட்கின்றாய்? பிற்சமயத்தார் பெயரும் அவர் பெயரேயாகும்; பித்தர் என்ற பெயரையுடையவர்க்கு எந்தப் பெயர்தான் பொருந்தாது? அச்சமயங்களுக்குரிய தெய்வங்களின் பெயர் மட்டுமா அவருடைய பெயர்? உன்பெயரும் என்பெயரும் அவருடைய திருப்பெயரே? சிற்சபையில் என் கணவர் புரியும் திருக்கூத்தைக் கண்டாலே இவையெல்லாம் உனக்குத் தெளிவாகப் புரியுமடி தோழி!

என்று தலைவி தெரிவிக்கிறாள். இனி இக்கருத்துகள் அமைந்த அருட்பாக்களை நாம் காண்போம்:

பெருகியபே ரருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகையென் கணவர்திருப்பேர்புகல்என் கின்றாய்
அருகர், புத்த ராதியென்பேன்: அயனென்பேன்; நாரா
யணனென்பேன்; அரனென்பேன்; ஆதி சிவனென்பேன்:
பருகுசதா சிவமென்பேன்; சத்திசிவமென்பேன்:
பரமமென்பேன்; பிரமமென்பேன்; பரப்பிரமமென்பேன்
துருவுசுத்த பிரமமென்பேன்; துரிய நிறைவு என்பேன் :
சுத்தசிவம் என்பேன்; இவை சித்து விளையாட்டே!
சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்குச்
சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ?" என்றாய்
பிற்சமயத் தார் பெயரும் அவர் பெயரே கண்டாய்!
பித்தரென்றே பெயர்படைத்தார்க் கெப்பெயரொவ்
[வாது?
அச்சமயத் தேவர் மட்டோ? நின்பெயர்; என்பெயரும்
அவர் பெயரே! எவ்வுயிரின பெயருமவர் பெயரே!
சிற்சபையில் என் கணவர் செய்யுமொரு ஞானத்
திருக்கூத்துக் கண்டாலே தெளியுமிது தோழி!

இவ்விரு பாடல்களும் தலைவி, தோழிக்கு உரைக்கும் முறையில் வள்ளலார் பாடியவையாகும், முதல் பாடலில் அருகர், புத்தர் என்னும் பெயர்கள் தாம் வணங்கும் அம்பலவாணரின் திருப்பெயர்களே என்று அவர் அறிவுறுத்துகிறார். "அருகர், புத்தர் என்பன சமண, பௌத்த சமயத் தலைவர்களின் பெயராயிற்றே; அவற்றைச் சைவ சமயத்திற்குரிய தெய்வத்தின் பெயராகக் கொள்ளலாமா?" என்று தோழி கேட்பதாகப் பாவனை செய்து கொண்டு, அடிகள் புறச் சமயப் பெயர்களேயன்றிப் "பிற்சமயத்தார் பெயரும் அவர் பெயரே" என்று தெளிவுறுத்துகிறார்.

இந்தியாவின் வரலாற்று ஏடுகளைப் புரட்டுவோமானால் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் புதிதாக வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்தது இஸ்லாம் சமயம் என்பதும், கி பி. பதினாறாம் நூற்றாண்டில் இந்தியாவிற்குள் நுழைந்தது. கிறித்துவ சமயம் என்பதும் இவ்விரு காலத்திற்கும் இடை யில் வடமேற்கு இந்தியாவில் தோன்றியது சீக்கிய சமயம் என்பதும் எளிதில் புலனாகும்.

இவற்றைத்தான், அவர் கருத்தில் கொண்டு "பிற்சமயத்தார் பெயரும் அம்பலவாணரின் பெயரே?" என்ற அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடுகிறார். இக்கருத்தை விளக்கியுரைப்பதைப் போன்று,

ஆத்திசூடி, இளம்பிறை யணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத்தாலே உணர்ந்துணராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்

என்று பாரதியார் பாடியுள்ளமை இங்குச் சிந்திக்கத்தக்கது.

எவ்வுலகில் எவ்வெவர்க்கும் அரும்பெருஞ் சோதியரே
இறைவரென்ப தறியாதே இம்மதவா திகள்தாம்
கவ்வைபெறு குருடர்கரி கண்டகதை போலே
கதைக்கின்றார்; சாகாத கல்விநிலை அறியார்
நவ்விவிழியாய் 'இவரோ! சிலபுகன்றார் என்றாய்!
ஞானநடங் கண்டேன்மெய்த் தேனமுத முண்டேன்
செவ்வைபெறு சமரசன் மார்க்கந் தனிலே
சேர்ந்தேனத் தீமொழியுந் தேமொழியா யினவே!

என்ற பாட்டில், வள்ளலார், மதவாதிகள் தெய்வங்கள் பற் பல என்று கூறுவதைக் குருடர்கள் யானையைக் கண்ட

கேலிக் கூத்தைப் போன்றது' என்று நையாண்டி செய்கிறார். "மதவாதிகள் தாம் கவ்வைபெறு குருடர்கரி கண்டதைப்போல கதைக்கின்றார்" என்ற தொடரில் பொதிந்துள்ள பொருளையும், உணர்ச்சியையும், உண்மையையும் நாம் பலமுறை அப்பாட்டை வாய்விட்டுப் படித்தால்தான் உணர முடியும்.

இத்தகைய விழுமிய கொள்கையை வாயளவில் உலகிற்கு உணர்த்தாது, செயலிலும் வள்ளலார் கடைப்பிடித்து ஒழுகினார் என்பதை அருட்பா அறிவிக்கிறது. சிறந்த சிவ பக்தராகிய இராமலிங்கர், ஸ்ரீ இராமர் தோத்திரம், இலக்குமி தோத்திரம் என்னும் பகுதிகளில் வைணவ சமயத்தின் தெய்வங்களையும் போற்றிப் பாடியுள்ளார். சித்தாந்தத்தின் மூலம் உலகத் தத்துவங்களைக் கண்டுணர்ந்த அடிகள், சித்தாந்தத்திற்கும் வேதாந்தத்திற்கும் இடையே இணைப்புப்பாலம் ஒன்றை அமைத்துள்ளார். அத்துடன் அறுவகைத் தத்துவக் கோட்பாடுகளின் முடிவான பொருளாக உள்ள 'தெய்வம் ஒன்றே' என்னும் அரிய உண்மையை அறிவிக்கும் அருட்பாக்கள் பல அவர் இயற்றியுள்ளார். இவற்றால் அவர் சொல்லாலும் செயலாலும் "ஒன்றே தெய்வம்" என்ற கொள்கையை மனித இனம் உணர்ந்துய்யுமாறு வாழ்ந்து காட்டினார். அதன் பயனாகத் தோன்றியதே சமரச சன்மார்க்க நெறி என்று நாம் சொல்லவும் வேண்டுமோ?

# 4

# பழமொழிகள் உணர்த்தும் பழந்தொழில்

பழமொழிகள், நாட்டு மக்களின் நாவிலே நடமாடும் நயமொழிகள். சுற்றோரும் மற்றோரும் தங்கள் பேச்சுக்கு இடையே பழமொழிகளைப் பயன்படுத்துகின்றனர். பழமொழி என்பதற்குப் பழமையான மொழி எனவும் 'பழகிய மொழி' எனவும், பழுத்த மொழி' எனவும் பொருள் கூறுவர். நாட்டு மக்களிடத்துப் பன்னெடுங்காலமாகப் பழக்கத்தில் இருந்துவருவன பழமொழிகள். இக்காரணத்தால் சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் உள்ள மக்களும் எளிதில் புரிந்துகொள்ளத்தக்க வகையில் எல்லாருக்கும் நன்கு பழக்கமானவையாக அவை உள்ளன. அறிவுரைகள், அனுபவ மொழிகள், ஏளனப் பேச்சுகள், நகைச்சுவையூட்டும் நயமிகு சொற்கள் ஆகிய அனைத்தையும் நாம் "பழமொழி' என்னும் ஒரு சொல்லாலேயே சுட்டி வருகிறோம். இன்று வரை 'எழுதா இலக்கியங்களாகவே அவை இருந்து வருகின்றன.

## பழமொழிக்குப் பல பெயர்கள்

பண்டைக்காலத்தில் பழமொழியை முதுமொழி, மூதுரை, முதுசொல், முன்சொல், பழஞ்சொல். தொன் மொழி, வாய்மொழி, தொன்றுபடு கிளவி, மொழிமை என்னும் பல்வேறு பெயர்களால் நம்முடைய பெரியோர்கள் வழங்கி வந்தனர்.

மொழிமை முதுசொல் –(தி.வா.ப.227)

மொழிமை மூதுரை முன்சொல் பழஞ்சொல் முதுசொல் என்பன
பழமொழியு மாமே – (பிங்கல.2025)

மொழிமைமூ துரைமுன் சொல்லுமுது சொல்லும் பழஞ்சொல்லும்
பழமொழி முதுமையாகும் – (சூடா. பக். 209)

என நிகண்டுகள் கூறுவதனால், இதனை நாம் அறிகிறோம்.

மேலும், 'பழமையான அனுபவ மொழிகள்' என்னும் பொருளில், 'பழமொழி' என்னும் சொல் சங்க இலக்கியத்துள் சில இடங்களில் வழங்கப் பெற்றுள்ளதை நாம் காணுகின்றோம். அவற்றுள்,

இம்மை யுலகத்து இசையொடும் விளங்கி
மறுமை யுலகமு மறுவின்(று) எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி (அகம். 66)

நன்றுசெய் மருங்கின் தீதி லென்னுந்
தொன்றுபடு பழமொழி யின்றுபொய்த் தன்று (அகம். 101)

என்னும் பாடற்பகுதிகள் இங்குக் குறுப்பிடத்தக்கன.

பன்னெடுங் காலமாக மக்களிடையே பழக்கத்தில் இருந்து வருவன பழமொழிகள் என்னும் கருத்தில், அவற்றைத் தொன்றுபடு கிளவி என்று சங்ககாலச் சான்றோர்கள் போற்றியுள்ளனர்.

.....அறத்தா(று)
அன்றென மொழிந்த தான்றுபடு கிளவி (அகம், 5)

என்பது பாலை பாடிய பெருங்கடுங்கோவின் கருத்தாகும்.

மனித வாழ்க்கையின் பல்வேறு துறைகளைப் பற்றி அறிவிலும், அனுபவத்திலும் முதிர்ந்த பெரியோர்கள் கண்ட உண்மைகளைத் திட்பநுட்பமாகக் கேட்போர் உள்ளத்தில் பதியுமாறு சுருங்கச் சொல்லி விளங்கவைப்பன பழமொழிகள்.

அவை அறிவுறுத்துவதோடு இன்புறுத்தவும் செய்கின்றன. தொல்காப்பியர் முதுமொழிக்கு வகுத்துள்ள இலக்கணம், பழமொழிக்கும் பொருந்துவதாகும்.

கடந்த காலத்தில் புகழுடன் வாழ்ந்த பெருமக்களிடத்து அமைந்த நுண்ணறிவு, சொல்வன்மை, உயர்ந்த நோக்கம், நல்வாழ்க்கை முறையில் அன்னோர் பெற்றிருந்த சிறந்த அனுபவங்கள் ஆகிய அனைத்தையும் திரட்டித் தருதல் இம்முதுமொழியின் இயல்பு என்பர் தொல்காப்பியர் :

நுண்மையும் சுருக்கமும் மொழி யுடைமையும்
எண்மையு மென்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருள் முடித்தற்கு வருஉம்
எது நுதலிய முதுமொழி யென்ப (தொல்.செய்.177)

இதனால் எளிமை, தெளிவு, நுட்பம், சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் ஆகிய பண்புகளோடு கருதிய பொருளைத் தெளிவுறுத்துவதற்குக் காட்டப்படும் காரணமாக அமையும் கருத்தினைப் பழமொழி எனக் கூறுவது மரபெனத் தெரிகிறது.

மூதுரை என்னும் பெயரும் பழமொழிக்கு உண்டு. 'முதிர்ந்த உரை' அதாவது 'அறிவின் முதிர்ச்சியுடைய உரை ' என்பது இதற்குப் பொருள். அறிவுநலங் கனிந்த கருத்துகளை அறிவுறுத்துவது மூதுரை என்பது பெறப்படுகிறது. இதனை,

முழையுப் பறியாத தென்னு மூதுரையு மிலளே

(திவ்வி. பிர. பெரிய. 3:7:4)

என்பதனால் அறியலாம். 'மூதுரை' என்னும் நீதிநூல் ஒன்று இருக்கிறது. தமிழ் மூதாட்டியான ஔவையார் இதை இயற்றியுள்ளார். தமிழகத்தில், தொன்றுதொட்டுச் சான்றோர்கள் அனுபவத்தில் கண்ட உண்மைகளைத் திரட்டி, அவற்றிற்கு இலக்கிய வடிவத்தை, இந்நூலின் மூலம் அவர் கொடுத்துள்ளார்.

சிற்றம்பலப் பண்டாரம் என்பவர் இயற்றிய மகா புராணத்தில், 'பழமொழி' யெனும் பொருளில், 'மூதுரை' யெனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது:

முத்தியின் மானமேற் பொலிவா மூதுரைப்
பத்தியின் தானமே பலிக்க வேண்டுமால்

(மகா புராணம்,27.)

அனுபவத்தில் அறிஞர் கண்ட உண்மைகளை உரைப்பனவாக பழமொழிகள் உள்ளன. இதனால் அவற்றை வாய்மொழி என்று சுட்டுகின்ற வழக்கமும் இருந்து வருகிறது. 'வாய்மையுடைய மொழி' என்பது இதற்குப் பொருளாகும். இப்பொருளில் ' வாய்மொழி' என்னும் சொல் சங்கநூல்களில் இடம் பெற்றிருக்கிறது.

நுண்ணூல் தடக்கையின் நாமருப் பாக
வெல்லும் வாய்மொழி. (புறம்.388)

ஏட்டிலே எழுதப்பெறாத காரணத்தினால் வேதத்தை, 'எழுதாக்கிளவி', 'சுருதி', 'கேள்வி' எனச் சுட்டுவது மரபு. அதைப் போன்று, ஏட்டிலே எழுதிப் போற்றப் பெறாமல், மக்களுடைய வாய்களில் உலாவிவரும் பழமொழிகளை, இக்காலத்தில் நாம் வாய்மொழி எனக்குறிப்பிடலாம்.

## ஏட்டிலே இடம்பெற்ற பழமொழிகள்

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர்,

திருவள்ளுவ தேவர் வாய்மையென் கின்ற
பழமொழி ஓதி யேயுணர்ந்து (திருப்புகழ்: திருச்.48)

என்னும் பாடற்பகுதியில் திருக்குறளைப் 'பழமொழி' என்றே பாராட்டியுள்ளார்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டு அளவில், நாட்டில் பெருவழக்கமாக இருந்துவந்த பழமொழிகள் பலவற்றைத் திரட்டி, அவற்றுள் நானூற்றைத் தேர்ந்தெடுத்து, அவற்றை விளக்கும் வகையில் முன்றுறையரையனார் என்னும் புலவர்,

ஒரு நூலை இயற்றியுள்ளார். அந்நூலுக்குப் 'பழமொழி நானூறு' என்பது பெயராகும். ஒவ்வொரு பழமொழிக்கும் ஒவ்வொரு வெண்பா இயற்றி, அதன் இறுதியில் ஒரு பழமொழியை ஆசிரியர் பொருத்திக் காட்டுந்திறன் போற்றத்தக்கதாகும். மற்றும் 'முதுமொழிக் காஞ்சி' என்றொரு நூலும் உண்டு. இவை இரண்டும் 'பதினெண் கீழ்க் கணக்கு' என்னும் நீதி இலக்கியத் தொகுதியைச் சேர்ந்தனவாகும்.

## பழமொழியின் பண்பு

பழமொழி என்பது என்ன? சொற்செறிவும் பொருட்செறிவும் வாய்ந்த ஒரு தொடர்மொழியே, பழமொழி எனலாம். பெரும்பாலும் அது ஒரு சொல் தொடராக விளங்கும். ஆழ்ந்ததும், அகன்றதும், சிறந்ததுமான கருத்துகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் இயல்புடையது பழமொழி. அது வாய்ப்பேச்சுக்கு இடையே படைக்கப்படுவது அன்று. ஆனால் அது வழக்கிலுள்ள தொடரமைப்பாக விளங்கி வருகிறது. அத்துடன் பலரால், பல சமயங்களில் திரும்பத் திரும்ப எடுத்துரைக்கப்படும் சிறப்புமுடையது அது. பலமுறைப் பயன்படுத்தப் படுவதற்கேற்ப மாற்றமும், திரிபும் கொண்ட அமைப்பை உடையதாக இருப்பினும், அதற்கென்று ஒரு வகையான மாறாத தன்மையும் இருந்துவருகிறது. எல்லாரும் நன்கு அறிந்த உண்மைகளையோ, அறிவுரைகளையோ பழமொழி எடுத்துரைக்கிறது. எப்பொழுதும் பொதுப்படையாகவுள்ள ஒரு பொருளினை உணர்த்தும் வகையில் பழமொழி அமைகிறது.

பழமொழி சொற்செட்டும், உணர்ச்சித் துடிப்பும் உயிர்க்களையும் வாய்ந்த சொல்லோவியமாகும். அடிக்கடி அவற்றுள் ஒத்த கருத்துகளின் இணையமைதியையோ முரண்பட்ட கருத்து இணைகளையோ நாம் காணலாம். அந்நிலையில் எதுகை, மோனை, இழுமெனும் இனிய ஒலி நயம் போன்ற பல இலக்கிய இயல்புகள் அதில் இணைந்தும் இழைந்தும் இலங்கும்.

## பழமொழியின் வகை

பழமொழிகளை நாம் இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம். சொற்கள்பலவற்றைக்கொண்டநீண்டதொடர்மொழிகள்முதல் வகையாகும். அவை அறிவுறுத்தும் சொற்றொடர்களாகவே தோன்றும். இரண்டாம் வகையைச் சேர்ந்தவை கட்டளைச் சொற்றொடர்களாகும். அவற்றின் சொற்றொடர் செறிவான கட்டமைப்பு உடையது. அவை சில சொற்களாலான சிறுசிறு தொடர்களாகவும், சிறுதொடர்மொழிகள் சிலவற்றின் சேர்க்கைகளாகவும் வழங்கி வருகின்றன.

ஒரு பழமொழியில் பல்வேறு உறுப்புகள் உள்ளன. அவை யாவும் மிக முக்கியமானவை. அவை ஒவ்வொன்றும் மற்றொன்றைச் சார்ந்தே இயங்கும் இயல்புடையவை. குறிப்பிட்ட சொல் வடிவங்களும், மரபுத்தொடர்களும் பழமொழியில் பொதுப்படையான இடம் பெறுகின்றன. இதன் மூலம் பொருளினைப் பழமொழிகள் வரையறுக்கின்றன. அவை அறிவுறுத்தும் தொடர்மொழிகள், எல்லையற்ற நிகழ்காலத்தையுணர்த்தும் வினைச் சொற்கள், தெரிநிலை வினைச்சொற்கள், இனப்பொருள் உணர்த்தும் பெயர்ச் சொற்கள் என்னும் வகைகளைச் சேர்ந்தனவாகும். 'எப்பொழுதும்', 'எங்கும் இல்லாத என்பன போன்ற பொருள்களையுணர்த்தும் பெயரெச்ச, வினையெச்சங்களைக் கொண்ட தொடர்மொழி வடிவங்களையுடையன பழமொழிகள்.

முரணுரைகளே பெரும்பாலான பழமொழிகளின் சிறப்பு இயல்பாக உள்ளன. பலவகையான எதிர்ச்சொற்களால் நயமிகு முரணுரைகள் அமைவதைக் காணுகின்றோம். பெரிதும், அவை உண்மையான முரணுரைகளாக இருப்பதில்லை. ஆனால், குறிப்பிட்ட சூழ்நிலையைச் சார்ந்த எதிர்ச்சொற்களாக அவை வழங்கி வருகின்றன "ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லுதல்" என்னும் பழமொழி இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## பழமொழிகளின் பயன்

பழமொழிகள் பரந்துபட்ட செல்வாக்கையுடையன. ஏழை, எளிய மக்கள் முதல் செல்வச்சீமான்கள் வரையிலுள்ள எல்லா வகையான மக்களிடத்திலும் அவை பெருவாழ்வு பெற்று விளங்குகின்றன; கல்லார்க்கும் கற்றார்க்கும் உறுதுணையாக இருந்து உவகை யூட்டுகின்றன; சாதி, இன, சமய வேறுபாடற்ற வகையில், ஒரு நாட்டிலுள்ள எல்லா மக்களிடத்தும் அவை உறவாடி வருகின்றன. இக்காரணங்களால் பொது மக்களுடைய கருத்துகளை நுட்பமாகவும், திட்பமாகவும் எதிரொலிக்கும் 'மிதவை இலக்கியங்களாகப் (Floating Literature) பழமொழிகள் விளங்குகின்றன.

சமூகம், அரசியல், ஒழுகலாறு, சமய நெறிமுறைகள் ஆகியவற்றைப் பற்றி ஒரு நாட்டு மக்கள் கொண்டுள்ள இலட்சியங்களுக்கு வலிவும், பொலிவும் அளிப்பன அந்நாட்டில் வழங்கி வரும் பழமொழிகளாகும். ஒரு நாட்டினுடைய பண்பாட்டு வளர்ச்சியையும், நாகரிக முன்னேற்றத்தையும் அறிவதற்கு உறுதுணையாக உள்ளவை பழமொழிகள். எனவே, பழமொழிகள் வெறுங்கற்பனைக் கனவுகளின் அடிப்படையில் தோன்றியவை அல்ல எனலாம். அவை புலவர்களால் புனைந்துரைக்கப்பட்ட பொன்மொழிகளும் அல்ல. ஒரு சமுதாயத்தின் அல்லது நாட்டின் பண்பாட்டினை மதிப்பிடுவதற்குப் பயன்படும் கருவிகளே பழமொழிகள். அவற்றைக் கருத்துக்களஞ்சியங்கள் என்றோ, கற்பனை கலந்த கதைக்குறிப்புகள் என்றோ நாம் கருதுவதைவிட, வாழ்வியல் உண்மைகளை உணர்த்தும் 'வாய்'மொழி இலக்கியங்கள்' எனக் கூறுவதே மிகவும் பொருத்தமாகும். .

## உழவுத் தொழிலைப் பற்றிய பழமொழிகள்

நம் இந்திய நாடு பழம் பெரும் நாடு. இங்கு மனிதன் எண்ணத் தெரிந்து, அறிவைப் பெருக்கிக் கலைகளை வளர்த்து, கருத்து வகையால் முன்னேற்றம் காண்பதற்கு

உறுதுணையாக இருந்தது உழவுத் தொழிலே. குறிஞ்சி நிலமாகிய மலைப் பகுதியில் மனிதன் தோன்றினான். அங்கு – அவன் ஆடையின்றிக் கையது கொண்டு மெய்யது பொத்தி அங்குமிங்கும் அலைந்து திரிந்தான். சிறிது காலம் இயற்கை அன்னை எளிதில் வழங்கிய காய், கனி, கிழங்கு இவை போன்றவற்றைத் தின்று, தன்னுடைய வயிற்றுப்பசியை அவன் தணித்துக்கொண்டான். பின்னர், விலங்குகளை வேட்டையாடி அவற்றின் இறைச்சியைப் பச்சையாகத் தின்று அவன் மகிழ்ந்தான். நாளடைவில் அவ்விறைச்சியைத் தீயில் வாட்டி உண்ணவும் அவன் கற்றான்.

மலைகளிலே மக்கள் பெருக்கம் உண்டானபோது உணவுப் பிரச்சினை உண்டாயிற்று. அதையொட்டி மனிதனுடைய வாழ்க்கைப் போராட்டம் தொடங்கியது. எனவே உணவுப்பொருளை நாடி, மனித இனம் மலைகளில் இருந்து இறங்கி, மலையடிவாரத்தில் உள்ள காடுகளில் குடியேறியது. அங்கு இயற்கையாகக் கிடைத்த மூங்கில் அரிசி, சாமை, வரகு போன்ற காட்டு நிலத் தானியங்களை உண்டு வாழ மனிதன் கற்றான். ஆடு மாடுகள் போன்ற வீட்டு விலங்குகளை வளர்க்கத் தொடங்கியதன் மூலம் அவன் கால்நடைச் செல்வத்தின் பயன்பாட்டை நன்குணர்ந்தான். ஆடு மாடுகள் கொடுத்துதவிய பாலும், அதன் பொருள்களும் மனிதனுடைய உணவுப்பொருள்களுள் முக்கிய இடத்தைப் பெற்றன. அதையொட்டி முல்லை நில நாகரிக வளர்ச்சியுற்றது.

## உழவுத் தொழிலின் சிறப்பு

பல்லாயிரம் ஆண்டுகள் இவ்வாறு கழிந்த பின்னர், மனித ஆற்றுவெளிகளுக்குச் சென்று குடியேறினான், அங்கு பரந்துகிடந்த நிலப்பரப்பைப் பண்படுத்தி உழுது பயிரிட அவன் கற்றான்; காடு கெடுத்து நாடாக்கினான்; குளந்தொட்டு வளம் பெருக்கினான். மனிதன் முதன் முதல் கற்ற பயன்மதிப்புமிக்க சிறந்த தொழில் முல்லை நில வாழ்க்கையில் வளர்க்கத்

தொடங்கிய ஆடு மாடுகளைத் தன்னுடைய தொழிலுக்குப் பலவகையிலும் அவன் பயன்படுத்திக் கொண்டான். இதனால், ஆற்றங் கரையோரங்களில் நிலையாக அவன் வாழக் கற்றான். அதையொட்டி ஊர்களும், நகரங்களும் நாடுகளும் அமையலாயின. அதன் பயனாக நாகரிகத்தின் ஒளியினை மனிதன் பெற்றான். அதைப் போற்றி வளர்ப்பதற்குரிய அமைதியும், ஓய்வும் நிறைந்த வாழ்க்கை அமைப்பினை உழவுத் தொழிலை மேற்கொண்டதால் அவன் எளிதில் பெற முடிந்தது. இதனால் தான், பண்டை உலகின் பலநாடுகளில் ஆற்றங்கரையோரங்களே நாகரிகத்தின் தொட்டில்களாக – வளர்ப்புப் பண்ணைகளாகச் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தன

இத்தகைய நாகரிக வளர்ச்சிக்கு உயிர்நாடியாய் இருந்து வருவது உழவுத் தொழிலே. இத்தொழிலின் சிறப்பை நன்கு உணர்ந்த நம்முடைய முன்னோர்கள்

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை (குறள் 1031)

என்று உழவுத்தொழிலைப் போற்றினர். இவ்வுண்மையை நாட்டிலே வழங்கும் பழமொழிகள் பல, எளிய தமிழில் இனிய முறையில் எடுத்தியம்புகின்றன.

சீரைத் தேடின் ஏரைத் தேடு

என்பது ஒரு பழமொழி. மனிதன் செம்மையாகவும் சிறப்பாகவும், வளமாகவும் நலமாகவும் வாழவேண்டுமானால், அவன் ஏரைக் கொண்டு நிலத்தை உழுது வாழும் பயிர்த்தொழிலை மேற்கொள்ள வேண்டும் என்னும் கருத்தை உணர்த்துகிறது இப்பழமொழி.

மேழிச் செல்வம் கோழை படாது

என்பது மற்றொரு பழமொழி. மேழி (ஏர்) யினைக் கொண்டு ஈட்டப்படும் செல்வம் குற்றமற்றது; நிலைத்த பயன்தரும்; அத்தொழிலால் இகழ்ச்சி உண்டாகாது என்னும் கருத்தில் இப்பழமொழி வழங்கி வருகிறது.

உழவுத்தொழிலைப் பற்றி வழங்கிவரும் பழமொழிகள் பலவற்றை நாம் பன்னிரண்டு வகையாகப் பாகுபடுத்தி ஆராயலாம். வேளாண்மைப் பொருளாதாரத்திற்கு அடிப்படையாகத் தேவைப்படுவது நிலம். நிலத்தைக் கொண்டே உழவுத் தொழில் செய்யப்படுகிறது. பொருள்களின் உற்பத்தி (Production), நிலத்தை (Land) யும், உழைப்பை (Labour) யும் மூலாதாரமாகக் கொண்டிருக்கிறது. நிலத்தொடு உழைப்பு சேருகிறபொழுது உற்பத்தி உண்டாகிறது. பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடு இது. இதனை நிலைக்களனாகக் கொண்டது உழவுத்தொழில்.

## நில வளம்

உழவுத்தொழிலிற்கு முதல் தேவையாக இருப்பது நிலம், அந்த நிலம் இயற்கையிலேயே வளமாக இருக்குமானால். பயிர்கள் செழித்து வளருவதில் வியப்பில்லை. ஆனால் காடுமேடுகளை எல்லாம் திருத்தி, சிற்றூரும் வரப்பெடுத்த' வயலும்,ஆறுதேக்கியநல்வாய்க்காலும்வகைப்படுத்திநெற்சேர உழுது பயிரிடவேண்டுமானால், அதற்குக் கடுமையான உழைப்புத் தேவை. பல சமயங்களில் அவ்வுழைப்பிற் கேற்ற ஆதாயம் கிடைப்பதில்லை.இதை உழவர்கள் நன்குணர்ந்துள்ளனர்.

குடும்பக்கடமைகளைச்செய்யாமல்,ஆடம்பரஆரவாரத்தில் ஈடுபட்டு, சொகுசாக வாழும் இயல்புடைய பெண்கள் உலகில் உண்டு. அத்தகைய பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டவன் வாழ்க்கை அன்பும், பண்பும் இல்லாமல் பாழ்பட்டு விடும். அதைப்போன்று மேட்டு நிலத்தில் பயிரிட்டவருடைய வாழ்க்கையும் வளமற்றுப் போய்விடும். இதை,

மேனா மினுக்கியைக் கொண்டவன் கெட்டான்;
மேட்டிலே பயிரிட்டவன் கெட்டான்

என்னும் பழமொழி அறிவிக்கிறது. இதனால், தாழ்வான

பகுதியில் – பள்ளமான நிலப்பகுதியில் பயிரிட்டால் வளமாக வாழமுடியும் என்னும் உண்மை புலனாகின்றது. தாழ் நிலப்பகுதி இயல்பாகவே வளமாக இருக்கும். அத்துடன் அதில் நீர்ப்பாசனம் செய்வது மிக எளிதாக இருக்கும். இதனால், குறைந்த உழைப்பில் நிறைந்த ஆதாயத்தைப் பெறமுடியும் என்பதை இப்பழமொழி உணர்த்துகிறது.

நிலம் வளமாக இருந்தால், அதில் பயிரிடப்படும் பொருள்கள் எதுவுமே செழித்து வளரும். ஓர் உழவனுடைய வாழ்வின் உயர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் அடிப்படையாக இருப்பது அவனுடைய நிலத்தின் வளமேயாகும்.

மண்வளமானால் பணபலம் தானே வரும் என்னும் பழமொழியால் இதை நாம் தெளியலாம்.

## உழும் முறை

நிலத்தைப் பயிரிடுவதே ஒரு தனிக் கலை. உழவுத் தொழில், வழிவழியாக வந்த பழம்பெரும் தொழிலாகும். அத்தொழிலினைச் செம்மையாகவும் சிறப்பாகவும் செய்வதற்குரிய வழிவகைகளை நம்முடைய முன்னோர்கள் அனுபவத்தின் வாயிலாக நன்கு அறிந்துள்ளனர். அவற்றுள் சிறப்புமிக்க சில முறைகளைக் குறித்து நாட்டிலே சில பழமொழிகள் வழங்கி வருகின்றன. அவற்றுள் நிலத்தை எவ்வாறு உழவேண்டும் என்பதைப் பற்றிய பழமொழிகள் இங்குக் கருதத்தக்கன.

நிலத்தைப் பலமுறை பரவலாக உழுவதைவிட, ஆழமாக ஒரு முறை உழுவது பலவகையிலும் சிறந்தது. இதை 'அகல உழுவதைவிட ஆழ உழு' என்னும் பழமொழி தெரிவிக்கிறது. நிலத்தை ஆழ உழுவதால் கீழ்மண் மேல்மண்ணாக மாறுகிறது; சூரிய வெப்பமும் காற்றோட்டமும் நிலத்தின் அடிப்பகுதிக்கும் செல்லுவதால் மண்ணில் புதிய சத்துக்கள் உண்டாகின்றன.

இதையெல்லாம் தன்னகத்தே கொண்ட சிறப்புமிக்க பழமொழி இது.

உழவு முறையின் அடிப்படை அளவினைச் 'சால்' என்பர். இதனை,நாம்'முறை'என்றும்,'உழவு'என்றும்கூறிவருகிறோம். நன்செய் பயிர்களுக்குப் பலமுறை உழ வேண்டும். புன்செய் பயிர்களுக்கு இவ்வாறு பலமுறை உழ வேண்டிய தேவை இல்லை. ஆனால், எந்தப் பொருளை விதைக்கப் போகிறாமோ, அதற்கேற்ப நாம் நிலத்தை உழுதாக வேண்டும். கொள்ளினைப் பயிரிட விரும்பினால், அதற்காக நிலத்தை ஒருமுறை உழுதால் போதும். விதை விதைத்தபின் ஓரிரு முறை நீர்ப்பாய்ச்சினால் அல்லது மழை பெய்தால் அது நன்கு செழித்து வளர்ந்துவிடும். ஆனால், எள்ளினைப் பயிரிட வேண்டுமென்றால் நிலத்தைப் பல முறை ஆழ உழுதாக வேண்டும். ஒரு சால், இரு சால் ஓட்டினால் அப்பயிர் வளராது. குறைந்தது ஏழு முறையாகிலும் அந்நிலத்தை உழுது, பண்படுத்தவேண்டும். அப்பொழுதுதான் எள்ளுச் செடிகள் நன்கு வளரும். இந்த உண்மையை,

எள்ளுக்கு ஏழு உழவு
கொள்ளுக்கு ஓர் உழவு

என்னும் பழமொழி உணர்த்துகிறது.

## விதைக்கும் முறை

பயிர் செழித்து வளருவதற்கு நிலவளமும், நீர்வளமும் இருந்தால் மட்டும் போதா. அந்நிலத்தில் விதைக்கப்படும் விதைகள் தரமானதாகவும், திடமானதாகவும் இருக்க வேண்டும். வேறு வகையாகச் சொல்லுவது என்றால், விதைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட 'பொறுக்கு விதைகளாக இருக்க வேண்டும்.

விதைகளின் இயல்பிற்கேற்பவே விளைச்சல் அமையும் என்பதை, "எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காய் தெங்காகா"

என்னும் பழமொழி அறிவிக்கிறது. மேலும்

"விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா?"

என்னும் பழமொழியும் இக்கருத்தையே தெளிவுறுத்துகிறது.

விதைகளை விதைப்பதற்கு ஏற்ற பருவத்தை அறிந்து விதைக்க வேண்டும். அப்பொழுது அவை எளிதில் வளரும் வாய்ப்பு மிகுதி. 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்னும் பழமொழி இவ்வுண்மையை யன்றோ அறிவிக்கிறது. தை மாதத்தில் புற்களும் மாசி மாதத்தில் மரங்களும் செழித்து வளரும். இதை "தை ஈனாப் புல்லும் மாசி ஈனா மரமும் இல்லை" என்பதனால் அறியலாம்.

**நீர்ப் பாசனம்**

நிலத்தை உழுது, விதை விதைத்தவுடன் நீர்ப்பாய்ச்ச வேண்டும். அந்நீரைப் பெரிதும் பண்டைக்காலத்தில் மழையின் மூலமாகவே பெற்றனர். மழைநீரை ஏரிகளிலும் குளங்களிலும் தேக்கி, தேவையானபொழுது வாய்க்கால்கள் மூலம் வயல்களுக்குப் பாய்ச்சுவது வழக்கம். "வெள்ளம் வருவதற்கு முன்னே அணைபோட வேண்டும்" என்னும் பழமொழியால், நீரைத் தேக்கிவைக்கும் பழக்கம் இருந்து வருவதை நாம் அறியமுடிகிறது.

மழை பெய்யவில்லையானால் நீர் வளம் குன்றும். நீரில்லையானால் பயிர்கள் வாடிவிடும். தாயினுடைய முகத்தைக் காணாத குழந்தையும் வாடும் இயல்புடையது.

மழை முகம் காணாத பயிரும்
தாய்முகம் காணாத பிள்ளையும் வாடும்

என்னும் பழமொழி இக்கருத்தைத் தெளிவாக உணர்த்துகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த 'மழை' எப்பொழுது பெய்யும் என்பதை நம்நாட்டு மக்கள் நன்கறிந்துள்ளனர்.

வடக்கே கறுத்தால் மழை வரும்
எறும்பு முட்டை கொண்டு திட்டை யேறினால் மழை பெய்யும்

சுடுங்காற்று மழை கூட்டும்.

கொடுஞ்சிநேகம் பகை கூட்டும்.

மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை

என்னும் பழமொழிகள் அனுபவத்தில் கனிந்த முதுமொழி களாகும்.

நீரை வீணாக்காமல், கண்ணுங்கருத்துமாகப் போற்றிக் காக்க வேண்டும். நீர் நிறைய இருக்கின்றபொழுது அதைத் தேக்கிக் காக்காமல் பாழாக்கிவிட்டால், பின்னால் நீர்ப்பற்றாக்குறை உண்டாகும்; பயிர்கள் பாதிக்கப்படும்; பஞ்சம் உண்டாகும்; நாட்டின் சீரும் சிறப்பும் கெட்டுவிடும். இக்கருத்தை,

நீரைச் சிந்தினாயோ சீரைச் சிந்தினாயோ

என்னும் பழமொழி எடுத்துரைக்கிறது. நீர்ப்பாசனம் மிகுதியாக இருந்தால்தான் நெற்பயிர் செழித்து வளரும். இதை,

நீருயர நெல் உயரும்

என்னும் பழமொழி தெரிவிக்கிறது.

## பயிரின் வளர்ச்சி

நல்ல நிலத்தில் சிறந்த விதைகளை விதைத்து, தேவையான அளவிற்கு நீரைப் பாய்ச்சினால், அதில் பயிரானது செழித்து வளரும் என்பதில் ஐயமில்லை. ஆனால், 'பயிர் செழித்து வளருமா? வளராதா?' என்பதை முன்கூட்டியே அறிவதற்கு ஒருவழியுண்டு.விதைகள்முளைக்கின்றபொழுது, அவை 'எவ்வாறு முளைத்துள்ளன? எல்லா விதைகளும் முளைத்துள்ளனவா?' என்பதைக் கூர்ந்து நோக்கினால், அவை எதிர்காலத்தில் எவ்வாறு விளங்கும் என்பதைப்பற்றித் துணிந்து நாம் கூறலாம். இக்கருத்தை,

விளையும் பயிர் முளையிலே

என்னும் பழமொழி சுட்டுகிறது. பயிர் செழித்து வளருவதற்கும் ஒருவன் புண்ணியம் செய்து இருக்க வேண்டும் என்னும்

நம்பிக்கையை,

பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்

என்னும் பழமொழி உணர்த்துகிறது.

## வேலி வேண்டும்

மனிதனுக்குத் தேவையான பொருள்களைக் கட்டிக் காத்தால்தான், அதனால் கிடைக்கக்கூடிய முழுப்பயனை நெடுங்காலம் அவன் பெறமுடியும். பயிர்களைப் பற்றிச் சொல்லத் தேவை இல்லை. நாம் அரும்பாடுபட்டு நிலத்தை உழுது பயிரிட்டு விட்டால் மட்டும் போதுமா? அது நன்றாகச் செழித்து வளருவதற்குப் பாதுகாப்புத் தேவை. ஆடு மாடுகள் வயலில் புகுந்து பயிரை அழித்துவிடாமல் காக்க வேண்டும். அவ்வாறு காப்பதற்குப் பயன்படுத்தும் ஒரு கருவியாகவே 'வேலி' விளங்குகிறது.

தன்னினம் தன்னைக் காக்கும்
வேலி பயிரைக் காக்கும்

என்பது பழமொழி.

பயிரைக் காப்பதற்கு இடப்பட்ட வேலியே பயிரை மேயுமானால், விளைச்சல் ஏது? 'வேலி' போல் உள்ளவர்கள் வரம்பின்றி நடந்துகொண்டால் பயிர்மட்டுமல்ல – வாழ்க்கையே பாழ்பட்டு விடும் அல்லவா?

வேலி தானே பயிரை மேய்ந்தால் விளைவது எப்படி?

என்னும் பழமொழியை அறியாதார் யார்!

## 'களை' யெடுத்தல்

ஏர் உழுதலைப் பார்க்கிலும் எருவிடுதல் நல்லது. பின்னர், வேலியிட்டுப் பயிரைக் காப்பது நல்லது; அத்துடன் களையெடுத்துப் பயிரைக் காப்பது சிறந்தது. "நெல்லுக்கு இரைத்த நீர் புல்லுக்கும் பாயும்." அதனால் தேவையற்ற . புல்பூண்டுகள் பயிரோடு சேர்ந்து வளரும்; பயிரின் வளர்ச்சியும்

செழிப்பும் குன்றிவிடும். எனவே, அடிக்கடி பயிரைக் கண்டு, அதன் இடையே வளர்ந்துள்ள களைகளை அகற்ற வேண்டும். அவ்வாறு களை பிடுங்கவில்லை என்றால், பயிர் பாழாகி விடும்; கால்பகுதி விளைச்சல்கூட இருக்காது.

களை பிடுங்காப் பயிர் காற்பயிர்

என்பது பழமொழி.

## மேற்பார்வை வேண்டும்

உழுது, நல்ல விதைகளை விதைத்து, நீர்ப்பாய்ச்சி, வேலியிட்டு, களை பிடுங்கியதோடு உழவனுடைய கடமை முடிந்துவிடவில்லை. இந்நிலையில், அவன் அடிக்கடி வயலுக்குச் சென்று பயிரின் நிலையைக் அதற்கு ஏற்ற செயல்களில் ஈடுபடவேண்டும். இவ்வாறு அவன் செய்யவில்லையானால் அவன் பட்டபாடு எல்லாம் பாழாகிவிடும். மாட்டை மேய்க்காமல் ஒரே இடத்தில் கட்டிப்போட்டால் அது கெட்டுவிடும், அதைப்போன்று, பயிரை அவ்வப்போது பார்வையிட்டு ஆவன செய்யாவிட்டால் அது கெட்டுவிடும்.

மாடு மேய்க்காமல் கெட்டது;
பயிர் பார்க்காமல் கெட்டது

என்னும் பழமொழி இவ்வுண்மையை உணர்த்துகிறது.

## அறுவடை

உழவுத்தொழிலைப் பொறுத்தவரையில் நாம் எத்துணை அளவு ஆர்வத்தோடு பாடுபடுகின்றோமோ, அத்துணை அளவிற்குப் பயன் கிடைப்பது உறுதி. இதனைப் 'பாடில்லாமல் பயனில்லை' என்னும் பழமொழி தெரிவிக்கிறது; உழவுத்தொழிலில் குறித்த பருவத்தில் குறித்த தொழிலைச் செய்யவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், எல்லாம் அடியோடு கெட்டுவிடும்; எத்தகைய பயனையும் அதனால் பெற முடியாது.

உழுகிற நாளில் ஊருக்குப் போனால்

அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை!

என்னும் பழமொழி நயமாக இக்கருத்தை எடுத்துரைக்கிறது.

அறுவடை செய்து தானியத்தை ஒப்படி செய்கிறபொழுது, நெல்மணிகளைப் பதரிலிருந்து பிரிப்பதற்குத் தூற்றுவார்கள். அவ்வாறு தானியத்தைத் தூற்றுவதற்கு ஏற்றவகையில் 'காற்று வீசுகிறதா?' என்று தக்க சமயத்திற்காகக் காத்திருப்பர். காற்றடிக்கும் பொழுது, காற்றில் தானியத்தைத் தூற்றிக்கொள்வர் இதை,

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்

என்னும் பழமொழி அறிவிக்கிறது.

## பயன் அடைதல்

இவ்வாறு பாடுபட்ட பிறகு, உழவன் பெறக்கூடிய பயன் – ஆதாயம் மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. இதை "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கேனும் மிஞ்சாது " என்னும் பழமொழி தெரிவிக்கிறது.

பயிர்த்தொழிலில் நிறைந்த ஆதாயம் பெறமுடியவில்லை. அதற்குப் பல்வேறு காரணங்களைக் கூறலாம். அவற்றுள்,

காய்ந்தும் கெடுத்தது வானம்; பெய்தும் கெடுத்தது வானம் என்னும் பழமொழி உணர்த்தும் கருத்து முதன்மையானதாகும்.

## கூட்டுப் பயிர்

இக்காலத்தில் கூட்டுறவு முறையில் பயிர்செய்வதை நாம் சிறப்பாகப் போற்றுகிறோம். நம்முடைய முன்னோர்கள் சிலர், கூடிப்பயிரிட்டுள்ளனர். ஆனால், அம்முறையினால் பூசலும், மனக்கசப்புமே அடைந்துள்ளனர். இரண்டு மூன்று குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு வீட்டில் குடியிருந்தால் அவர்களுக்கு இடையே பகைமை உண்டாவது போல,

கூட்டுப்பயிரிடுவதானாலும் வெறுப்பும், மனக்கசப்பும் உண்டாகின்றன. இதை,

கூடி இருந்து பார்! கூட்டுப் பயிர் செய்து பார்

என்னும் பழமொழி நயமாகத் தெரிவிக்கிறது.

உழவுத் தொழிலில் நம் நாட்டு மக்கள் பெற்றிருந்த அனுபவத்தை இப்பழமொழிகள் எடுத்துரைக்கின்றன. ஒவ்வொரு தொழிலையும் செம்மையாகவும் சிறப்பாகவும் செய்வதற்குரிய நெறிமுறைகள் பல உள்ளன. இவற்றைத் 'தொழில் நுட்பக் கலை' எனலாம். தமிழ் மக்கள் உழவுத் தொழிலைப் பண்டைக் காலத்தில் எப்படிச் செய்தனர் என்பதை அறிவதற்கு உதவக்கூடிய கையேடுகள் (Manuals) எதையும் எழுதிப் போற்றியதாகத் தெரியவில்லை. உழவுத் தொழிலைப் பெருமையாகப் பேசிய அளவிற்குக் கூட, உழவுத்தொழிலைச் செய்யும் முறைகளைப் பற்றி நம்முடைய அறிஞர் பெருமக்கள் எழுதிவைக்கவில்லை. திருவள்ளுவர் 'உழவு' என்னும் அதிகாரத்தில், தொழில் முறைச் செய்திகள் சிலவற்றை இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைத்துள்ளார். கம்பர் பாடியதாக நம்பப்படும் ஏரெழுபது என்னும் நூல், ஏர்த்தொழிலின் சிறப்பையும், அத்தொழில் புரியும் உழவர்களுடைய பெருமையையும், வாழ்க்கையையுமே போற்றிப் பாராட்டுகிறது.

ஆனால், வாய்மொழி இலக்கியமாக மக்களுடைய பேச்சு வழக்கில் சிறப்புற்றிலங்கும் பழமொழிகளுள் பல உழவுத்தொழிலின் செய்முறைகளைத் தெளிவுறுத்துகின்றன. அப்பழமொழிகளை நாம் வகைப்படுத்திப் பார்க்கின்றபொழுது, உழவுத்தொழில் முறையைப் பற்றிய நுட்பமான செய்திகள் பல புலனாகின்றன. தொழில் முறையில் வாழையடி வாழையாகப் பல தலைமுறைகளில் நம் நாட்டு மக்கள் பெற்ற அனுபவ அறிவினை, யாரும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க வகையில் இப்பழமொழிகள் உணர்த்துகின்றன.இவற்றைத் தொகுத்து 'உழவுத் தொழில்முறைக் கேகையடு' ஒன்றை நாம் தயாரிக்கலாம்.

# 5

# கணக்காயர்

ஆசிரியப் பணி புனிதமான அன்புப்பணி, அறிவுப்பணி! அப்பணியில் ஒரு விளக்கினைக்கொண்டு நாம்பல திருவிளக்குகளை ஏற்றுகிறோம். இதனால் எங்கும் ஒளி பரவுகிறது. தான்பெற்ற அறிவுச்சுடரைக் கொண்டு ஓர் ஆசிரியன்,பல்லாயிரமக்களுக்கு அறிவொளியைத்தருகிறான். தம்மைவிட,தம்மாணவர்கள்அறிவிலும்,ஆற்றலிலும்,பொருள் வளத்திலும், புகழிலும் மேம்பட்டு விளங்குவதைக் கண்டு பூரிப்பு அடையும் உள்ளப் பண்பாடுடையவன் ஆசிரியனாவான்.

**சுணக்காயர்**

ஆசிரியரை ஆசான், குரு. உபாத்தியாயர், கணக்காயர் என்னும் பல பெயர்களால் நம் முன்னோர்கள் சுட்டியுள்ளனர். இவற்றுள் கணக்காயர் என்னும் பெயரே நம் தமிழில் நெடுங்காலமாக வழங்கி வருகிறது. சற்றேறக்குறைய ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகத்தில் இருவகை ஆசிரியர்கள் இருந்தனர். கணக்காயர் என்பவர் பள்ளியாசிரியர்களாவர்; பேராசான் அல்லது பேராசிரியர் என்பவர் பள்ளிப் படிப்பிற்கு மேற்பட்ட முதுநிலைக் கல்வியைப் பயிற்றுவித்தவராவர்.

கணக்காயர் என்னும் சொல்லினை, நாம் "கணக்கினை ஆய்பவர்" என விரித்துரைக்கலாம். 'கணக்கு' என்னும் 'சொல் இன்று 'கணிதத்தை' மட்டும் குறிக்கும் சொல்லாக வழங்கப்பட்டு

வருகிறது. ஆனால், பண்டைக் காலத்தில் இப்பொருளில் மட்டும் இச்சொல் பயன்படுத்தப்படவில்லை! 'கண்' என்னும் வேர்ச்சொல்லோடு, அக்குச் சாரியை சேர்ந்து, கணக்கு என்னும் சொல் அமைகிறது. மனிதனுக்குக் கண் போன்றவை எவை?

எண்என்ப ஏனை எழுத்(து) என்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு.

(திருக்குறள் 392)

என்பது வள்ளுவர் வாய்மொழி.

இதனால், எண்ணும் எழுத்துமே கண்களெனப் போற்றபடுவது புலனாகிறது. இக்கருத்தை ஔவை மூதாட்டியும் 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்று எடுத்துரைத்துள்ளார். இவ்விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்காயர் என்னும் சொல்லை நோக்குவோமானால், 'எண்ணையும் எழுத்தையும் ஆய்வோரே' அப்பெயரால் சுட்டப்பட்டமை தெளிவாகத் தோன்றும். இதைக் கருத்தில் கொண்டே, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி (Lexicon), 'கணக்காயர்' என்னும் சொல்லிற்கு 'நூல் ஓதுவிப்போர்' அறிஞர், ஆசிரியர்' என்னும் பொருள்களை எடுத்துரைக்கிறது.

## கணக்கு – பல்வேறு பொருள்

கணக்கு என்னும் சொல், எழுத்தைச் சுட்டுவதற்கு நாம் சான்றுகள் பல காட்டலாம். சிறப்பாகத் தமிழ் எழுத்துகளை, 'தமிழ் நெடுங்கணக்கு' எனக் கூறும் மரபினை இங்குக் குறிப்பிடலாம். பழைய இலக்கியங்களைக் கீழ்க்கணக்கு நூல்கள், 'மேற்கணக்கு நூல்கள்' என்று குறிப்பிடும் வழக்கம் இங்குக் கருதத்தக்கதாகும்.

காலப்போக்கில், ஆய்வுசெய்பவரைக் ' கணக்கர்' என்னும் சொல்லால் சுட்டும் வழக்கம் தோன்றியது. காலத்தை ஆராய்ந்து கணிப்பவரை

நாழிகைக் கணக்கர் (சிலப். 5:49)

அமையக் கணக்கரும் (மணி, 1:14)

என்றும், அரசனைச் சூழ்ந்து இருந்து, மந்திராலோசனை புரியும் அமைச்சரை,

மந்திரக் கணக்கர் (சிலப். 22:9)

என்றும், சமயவாதிகளை

சமயக் கணக்கர் (மணி. 1:13; கல்லாடம்.14)

என்றும் குறிப்பிடும் மரபு வளர்ந்துள்ளதை நாம் காணுகின்றோம்,

சங்க காலப் புலவர்களுள் ஒருவர் 'மதுரைக் கணக்காயனார்' என்னும் சிறப்புப் பெயராலேயே சுட்டப்படுகிறார். அகநானூற்றுப் பாடல்களில் மூன்றையும் (93, 338, 342), நற்றிணையில் இரண்டையும் (23, 24) அவர் இயற்றியுள்ளார். சங்க காலப் பெரும்புலவர்களுள் ஒருவரான நக்கீரர், 'மதுரைக் கணக்காயனார் மகனார்' என்று (நெடுநல், முருகு, புறம் 56, 189) அக்காலத்திய அறிஞர்களால் பாராட்டப்பட்டுள்ளார். இக்கணக்காயனார் மதுரையில் ஆசிரியராகப் பணிபுரிந்திருக்க வேண்டும்.

## கணக்காயரின் சிறப்பு

எனினும் 'கணக்காயர்' என்னும் சொல், ஆசிரியரைச் சுட்டும் முறையில் முதன்முதலில் 'நாலடியார்' என்னும் பதினெண் கீழ்க்கணக்கு நூலிலேயே பயன் படுத்தப்பட்டுள்ளது.

கற்றதூஉம் இன்றிக் கணக்காயர் பாடத்தாற்
பெற்றதாம் பேதைஓர் சூத்திரம்

(நாலடி. 314)

கணக்காயர், சமுதாயத்தில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தனர். கணக்காயர் இல்லாத ஊர்தானும் நன்மையடையாது; பிறருக்கும் நன்மை பயக்காது என்று நல்லாதனார் என்னும் புலவர் அறிவித்துள்ளமை இதற்குப் போதிய சான்றாகும்.

கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்
மூத்தோரையில்லா அவைக்களனும் பாத்துண்ணும்
தன்னம யிலாள ரயலிருப்பு(ம்) இம்மூன்றும்
நன்மை பயத்த லில. (திரிகடுகம். 10)

## கம்பன் கண்ட கணக்காயர்

கம்பன் காலத்தில் கணக்காயர் பலர் கல்வியிற் சிறந்தவராய் விளங்கினர்; சிறுவர்களுக்கு அவர்கள் பாடம் கற்பித்த முறை கம்பனுடைய உள்ளத்தைக் கவர்ந்து இருக்கிறது. ஆசிரியர் ஒரு முறை பாடத்தை ஓதுவார்; மாணவச் சிறுவர் பலரும் ஒன்றாகச் சேர்ந்து, ஆசிரியர் சொல்லியதைத் திரும்பத் திரும்ப உரத்த குரலில் ஓதி வந்தனர். இவ்வாறு பாடத்தைச் சிறுவர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஓதும் பொழுது பேரொலி எழுந்ததாம். கார் (மழை) காலத்தில் நீர் நிலைகளில் உள்ள தவளைகள் கத்தும், பேரிரைச்சல் கணக்காயரிடம் பாடம் ஓதிய பிள்ளைகள் எழுப்பிய பேரொலியைப் போன்றிருந்தது என்று கம்பன் குறிப்பிட்டுள்ளான்.

கல்வியிற்றி கழ்கணக் காயர் கம்பலைப்
பல்விதச் சிறாஅரெனப் பகர்வ வல்லரி

(கிட்கிந் 546)

கம்பன் குறிப்பிடும் கணக்காயர் கல்வியில் சிறந்தவர். அவர் பெரும்பாலும் தொடக்கப்பள்ளி ஆசிரியராக இருந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

ஆசிரியர் என்னும் பொருளில், கணக்காயர் என்னும் சொல் சங்ககாலம் முதற்கொண்டு விசயநகரப் பேரரசின் தொடக்கம்வரை வழக்கில் இருந்து வந்திருக்கிறது. ஆனால், விசயநகர அரசர் ஆட்சிக் காலத்தில், 'உபாத்தியாயர்' என்னும் சொல் பெருவழக்குப் பெறலாயிற்று. இச்சொல் நாளடைவில் 'வாத்தியார்' எனப் பொதுமக்களால் திரித்து ஒலிக்கப்படலாயிற்று. கணக்காயர் மறைந்தார்; வாத்தியார் வாழ்வு பெற்றார்!

# 6

# மெய்யுணர்வுக் காதல் நெறி

மக்கள் உள்ளத்தை நெகிழ்ச்சியுறச் செய்யும் ஆற்றலுடைய பக்தி இலக்கியங்கள் பல தமிழ்மொழியில் உள்ளன. இவ்விலக்கியங்களைப் போன்று, உலகில் வேறு எம்மொழியிலும் பக்தி இலக்கியங்கள் சிறப்புற்று விளங்கவில்லை. இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. இன்றைய உலகம் இதை நன்கு உணர்ந்துள்ளதை நாம் காணுகின்றோம், தமிழ் மக்கள், உலக நாகரிக வளர்ச்சிக்கு உதவியுள்ள பொருள்கள் பல. அவற்றுள் உலகப் பண்பாட்டின் கருவூலம் நிறைவு பெறுவதற்குத் தமிழ்மக்கள் வழங்கியுள்ள பக்தி இலக்கியம் தன்னிகரற்று விளங்குகிறது.

கி. பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பெருக்கெடுத்தோடிய பக்தி வெள்ளம், நிலையாகத் தன் பயனை உலகிற்கு அளித்துள்ளதைக் காணுகின்றோம். சைவ, வைணவ பக்தி இயக்கங்களினால் தமிழ்ப் பூங்காவில் மலர்ந்த முல்லை மலர்களே "பக்திப் பாடல்கள்' ஆகும். அப்பாடல்கள், முழுமுதற் பொருளைக் காண்பதற்கு மக்களினம் ஆர்வத்தோடு முயன்ற முயற்சிகளுள் தலைசிறந்த ஒன்றை அழியாது போற்றிக் காத்து வருகின்றன.

## அன்புநெறி

இத்தகைய அருள் மொழிகளை அருளிய அருளாளர்கள் 'இறைவன் அன்புமயமாக இருக்கிறான். இறைவனுடைய

அன்புதான் இப்பேரண்டம் முழுவதையும் உண்டாக்கியது. அவ்வன்பே உயிர்களிடத்திலும் நிறைந்து நிற்கிறது. அவ்வன்பைப் பாழாக்கி விடாமல் பேணிவளர்ப்பவர்கள் அன்புமயமாய், தெய்வமயமாய் ஆகிவிடுவார்கள்". என்னும் உண்மையை ஒல்லும் வகையெல்லாம் ஓயாது உலகிற்கு உணர்த்தினர். அவர்கள் உணர்த்திய நெறியே 'பக்திநெறி' என்று போற்றப்படுகிறது. "ஊன்வாடவுண்ணாது உயிர் காவலிட்டே உடலிற் பிரியாமல் புலனைந்தும் நொந்து தாம் வாடவாடத் தவம்செய்ய வேண்டா" என்பது அவர்களுடைய கொள்கையாகும். அன்பினால் உருகி அழுதால், அரற்றினால், என்பும் உருக இராப்பகல் ஏத்தினால் இறைவனைக் காணலாம் என்பது அவர்கள் அனுபத்தில் கண்ட உண்மையாகும். எனவே, அன்பைப் பேணி வளர்க்கும் பெருமைமிக்க அன்புநெறியை – பக்தி நெறியை அவ்வருட் செல்வர்கள் உலகிற்குக் காட்டிச் சென்றனர்.

## மெய்யுணர்வுக் காதல் நெறி

இறைவனை அடைவதற்குரிய நெறிகளுள் 'காதல் நெறி'யாகிய அகப்பொருள் இலக்கண நெறியை ஒன்றாகத் தமிழ்ச் சான்றோர் கொண்டனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. கடவுளைத் தலைவனாகவும், ஆன்மாவைத் தலைவியாகவும் அவர்கள் உருவகப்படுத்தியுள்ளனர். இவ்வாறு தலைவன் – தலைவியாக இறைவனையும் ஆன்மாவையும் உருவகப்படுத்திக் கூறுவது சமய மலர்ச்சிக் காலத்தில் தோன்றிய வழக்கமாகும். இறைவனுக்கும் ஆன்மாக்களுக்கும் இடையே இருந்துவரும் தொடர்பினை ஒன்பது வகையாக நம்முடைய முன்னோர்கள் வரையறுத்துள்ளனர், அவற்றுள் ஒன்று நாயகன்–நாயகித் தொடர்பு எனக்கூறுவர், உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் மகளிர் எனவும், இறைவன் ஒருவனே ஆண்மகன் எனவும் அவ்வாண்மகனை அறிவழகிகளாகிய ஆன்மாக்கள் அடைய விரும்பி அரும்பெரும் முயற்சியைச்

செய்து, அவனை அடையும் எனவும் கூறப்படும் கொள்கையே, 'நாயகன்–நாயகி' பாவம், அல்லது மெய்யுணர்வுக் காதல் நெறி எனப் போற்றப்படுகிறது.

இக்கொள்கை உயிர்களையெல்லாம் செயற்படுத்தித் தன்னிடத்தே ஆட்கொள்ளும் ஆண்மை உடையவன் இறைவன் ஒருவனே என்பதையும், தோற்றமோ, ஒடுக்கமோ இல்லாத நிலையில் தன்தொழிலை நடத்தும் தலைவன் அவன் ஒருவனே என்பதையும், வீறுமிக்க (தலைமைப் பண்பினையுடையவனுமாகிய) அவனே ஆணாக விளங்கத் தகுதியுடையவன் என்பதையும், மற்ற உயிர்களெல்லாம் அவனுக்கு அடிமைப்பட்டு, வாழ்க்கைப்பட்டாக வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. இவ்வாழ்க்கைப்படும் பெருநிலைபெண்மனத்துக்கேஉரியது.ஆண்களுள்தலைமை யானவனாகிய இறைவனே அன்றி, மற்றவரெல்லாம் ஆண்கள் என அழைக்கப்படுவது உபசார வழக்காகும். இறைவனிடத்தில் மக்களுக்கு உண்டாகும் காதலே மெய்யான காதலாகும். ஆண் பெண்களுக்கிடையே உண்டாவது போலிக் காதலாகும். நாடக மேடையில் நடிக்கும் ஆண்வேடம் பூண்ட பெண்ணின் மீது, மற்றொரு பெண்ணிற்கு உண்டாகும் காதல் போன்றதே, இம் மண்ணுலக மக்களின் காதல் என்றுமெய்யுணர்வுக் காதல் நெறியினர் கூறுவர்.

பெண் அன்பின் ஊற்று; அழகின் பிறப்பிடம் ; அமைதியின் உறைவிடம். பெண்மை எனப் போற்றப்படுவது அன்பு, அழகு, அமைதி என்னும் இம்மூன்று பண்புகளின் கலவை என்பது உலகறிந்த உண்மை. அமைதியே பேரழகு வாய்ந்தது; அமைதியே அன்பை வளர்க்கும் இயல்புடையது. ஆற்றலும் செருக்கும் உடைய உள்ளத்திலே தெளிவோ, அமைதியோ, அன்போ சிறந்து விளங்க இயலாது.ஆகையால், அமைதியை அடைய வேண்டும் என்றால் பெண்ணுள்ளம் பெற வேண்டும். செருக்குற்ற மனநிலை அழிந்தால்தான், "தான், என்னும் ஆணவம் அழியும்; ஆணவம் அழிந்தால்தான் இறைவனே

தலைவன்' எனும் மெய்யுணர்வு கைவரப் பெறும்; இத்தகைய நிலையில் 'தன்' னையே அழித்துக் கொண்டு இறைவனாகிய தலைவனுக்கு ஆட்படும் இன்ப உள்ளத்தைப் பெற வேண்டுமென்னும் வேட்கை கொண்ட தமிழ்ச் சான்றோர்கள் மெய்யுணர்வுக் காதல் நெறியைப் பெரிதும் போற்றினர்.

இக்காதல் நெறியைப் 'பிரேம பக்தி' என்றும், 'பக்தி நெறிக் காதல்' (Devotional Love) என்றும், 'மெய்யுணர்வுக் காதல்' (Erotic Mysticism) என்றும் பிறமொழியாளர்கள் பலரும் பலவாறாகக் கூறுவர். இதை, நம் தமிழகத்துப் பெரியார்கள் 'நாயக–நாயகி பாவம்' என்றும், 'பேரின்பக் காதல் நெறி' என்றும் போற்றி வருகின்றனர். இதனை, அவனே தானே யாகிய அந்நெறி' என்று மெய்கண்டார் சுட்டுவர். சிவஞான போதத்தின் பத்தாம் சூத்திரம்,

அவனே தானே யாகிய வந்நெறி
ஏக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே!

என்பதாகும்.

இந் நூற்பா,

"அதுவே, தானே யவளே தமியர் காணக் காமப் புணர்ச்சி யிருவயி னொத்தல்" எனும் இறையனார் களவியல் (2) நூற்பாவின் கருத்தினைப் பேரின்பப் பொருளில் விளக்குகிறது என்று பெரியோர்கள் கூறுவர்.

அன்பின் ஐந்திணையும் மெய்யுணர்வுக் காதல் நெறியும்

அன்பின் ஐந்திணை ஒழுக்கமாகிய 'களவு' ஒழுக்கத்தில் "தானே அவள்; அவளே தான்" என்று கூறும் வகையில், வேற்றுமையற்று தலைவனே தலைவியாகவும், தலைவியே தலைவனாகவும் அன்பினாலும், பண்பினாலும், கல்வியினாலும், உருவினாலும், திருவினாலும் வேற்றுமையில்லாமல் 'ஈருடலும் ஓர் உயிருமாய்' இரண்டறக்

கலந்த இன்ப அன்பு நிலையினை இவ்வகப்பொருள் நூற்பா குறிப்பிடுகின்றது.

இக் கருத்தினையே "ஆன்மா மெய்யுணர்வினால் கண்டறிந்த அம் முழுமுதற் பொருளாகிய இறைவன்தான். உடனாய் நின்று அறியவும், உயிர் அம்முதல்வனோடு உடனாய் நின்றறியினும் தானென வேறு காணப்படுமாறின்றி அவனோடு ஒற்றுமைப்பட்டு அவ்விறைபணியின் வழுவாது நிற்பின், மலமாயையென்னும் இரண்டனோடு வலிய கன்மமலமும் இல்லையாய் ஒழியும் என்று சிவஞான போதம் எடுத்துரைக்கின்றது.

இதை மெய்யுணர்வுக் காதல் நெறியினர் ஆன்மாவின் அடைக்கலம் எனவும் 'பரபத்தி' எனவும் கூறுவர், 'நான் ஒன்றினையும் செய்வதற்கு ஆற்றலுடையவன் அல்லேன்; என்னைக் காத்தருள வேண்டிய பாரம் இறைவனாகிய உன்னையே சார்ந்தது. ஆதலால் உன்னை எதிப்பார்த்திருப்பது தவிர என்னால் ஆவது ஒன்றும் இல்லை" என்னும் உறுதியான உள்ள உணர்வுடன், இறைவனுடைய திருவடிகளையே அடைக்கலமாக அடைதல்தான் ஆன்மாவின் அடைக்கலம் என்னும் முத்தி நெறியின் இலக்கணமாகும்.

இவ்வான்மாவின் அடைக்கலத்தையே நாயகி, நாயகனை நாடிச் சென்று அவனோடு இரண்டறக் கலக்கின்ற இன்ப அன்பு நெறியாக ஆன்றோர்கள் உருவகப்படுத்திக் கூறுவர்.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!

(தேவா. 6:25:6)

இவ்வப்பர் தேவாரப் பாடல், மெய்யுணர்வுக் காதல் நெறியினைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது. ஆன் மாவாகிய தலைவி இறைவனாகிய தலைவனைக் கண்டாள்; காதல் கொண்டாள்; மயக்குற்றாள்; அவனை அடைய வேண்டும் எனும் தீரா வேட்கையுற்றாள். எனவே. 'அவன் யார்? எந்த ஊர்?' என்பனவற்றையெல்லாம் அவள் கேட்டறிந்தாள். அவனைப் பற்றிய செய்திகளைக் கேட்குந்தோறும் அவள் அவனிடத்துக் கொண்ட காதல் அணைகடந்த வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடலாயிற்று. எனவே, அவள் அவனிடத்துத் தீராக் காதல் கொண்ட பைத்தியக்காரியானாள். அவனை அடைவதற்குரிய நெறிமுறைகளையே எந்நேரமும் எண்ணிக்கொண்டிருக்கும் அவள், பெற்றோர்களை விட்டகன்றாள்; உயிரினும் சிறந்த நாணினைத் துறந்தாள்; உலகத்தார் பெரிதாக மதித்துப் போற்றும் பழக்கவழக்கங்களைப் பற்றியெல்லாம் அவள் கவலைப்படவில்லை; அவற்றை அவள் புறக்கணித்தாள். அவள் தன்னை மறந்த நிலையில், கன்னிப் பெண்ணின் இயல்பிற்கு மாறானவகையில் தானே ஆரூருக்குச் சென்று, அங்குள்ள தலைவனின் தாள்களை அடைக்கலம் அடைந்தாள்" என்பதை இப்பாடல் தெரிவிக்கிறது.

இப்பாடல் சீவான்மாவாகிய 'அப்பர்' எனும் தலைவி, பரமான்மாவாகிய ஆரூரரைக் கண்டு காதலித்து, தன்னையும் இவ்வுலகையும் மறந்து, இறைவனாகிய பேரின்பக் கடலிலே மூழ்கித் தோய்ந்த வரலாற்றைப் பக்திநெறிக் காதல் சுவை ததும்ப எடுத்துரைக்கின்றது. இத்தகைய 'ஆன்மிகக் காதல்' நெறியினை எடுத்துரைக்கும் பாடல்களும், இலக்கியங்களும் நம் தமிழ் மொழியில் பல உள்ளன.

## அகப்பொருள் மரபும் அன்பு நெறியும்

நம்முடைய பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் பொருளினை 'அகம்' எனவும், 'புறம்' எனவும் பாகுபாடு செய்துள்ளனர். இப்பாகுபாடு உலகில் வேறெந்த மொழிகளிலும் காணமுடியாத

சிறப்புமிக்கபாகுபாடாகும். ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப்பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்தான் நுகர்ந்து இன்பம் காண்பதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார். எனவே, அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு, 'அகம்' என்றது ஓர் ஆகுபெயராகும். இதனையொழிந்தன ஒத்த அன்புடையார் தாமேயன்றி, எல்லாருந்துய்த்துணரப் படுதலாலும் இவை இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப் படுவதாலும் அவை 'புறம்' எனவே படும்.

'அகம்' என்பது தலைவனும் தலைவியும் அமுதமும் அதன்கண் கரந்த சுவையும் போல உள்ளத்தால் கலப்புடைய காரணத்தால் வேறுபாடிலர் ஆயினும், இவ்வின்பந்துய்த்தற் பொருட்டு ஓருயிரே ஈருருவெடுத்து நின்றாற்போல அவனென்றும் அவளென்றும் வேறுபட்டுத் தோன்றி அன்பின் வழிச்செல்லும் இன்ப வெள்ளத்துத் திளைக்கும் பேரழகு அதனை அனுபவிக்கின்ற அவர்களுடைய உள்ளத்தான் உணரப்படுவதேயன்றி, அவருள்ளும் ஒருவருக்கொருவர் வாயினால் இத்தன்மையது எனக்கூற இயலாத இயல்பினையுடையது என்பதனை நாம் அறிகிறோம்.

இம் மண்ணகக் காதலை விண்ணகக் காதலாக– மெய்யுணர்வுக் காதலாக மாற்றிய பெருமை நமது சைவ, வைணவ அடியார்களையே சாரும். இம்மெய்யுணர்வுக் காதல் நெறியின் கருமுதல் தொல்காப்பியத்திலேயே காணப்படுகின்றது.

காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்

(தொல்.பொருள் : 83)

இப்பாடாண்திணை நூற்பாவில், தொல்காப்பியர் தெய்விகக் காதலைக் குறிப்பிடுகிறார் என்று கொள்ள இடமுண்டு.

இந்நூற்பாவிற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர், "பக்கு நின்ற (பிரிந்து நின்ற) புணர்ச்சி வேட்கை, கட்புலனாகிய கடவுளிடத்தும் நீக்கார்" என்று கூறி, "காமப்பகுதி" என்பதனை 'அது, கடவுண்மாட்டுக் கடவுட் பெண்டிர் நயப்பனவும், அவர் மாட்டு மானிடப் பெண்டிர் நயப்பனவும் கடவுள் மானிடப் பெண்டிரை நயப்பனவும் பிறவுமாம் என்று விளக்கம் தந்துள்ளார். 'கடவுள் மாட்டு நம் மானிடப் பெண்டிர் நயப்பனவும்' என்னும் பகுதியே ஆராய்ச்சிக்குரியது. பக்திநெறியில் ஆன்மாக்கள் எல்லாம் பெண்களாகவே கருதப்படுகின்றன. ஏனெனில், ஆன்மாக்களுக்கு இல்லாத தலைமைச் சிறப்பும், பிறரை ஆட்கொள்ளும் திறமும் இறைவனுக்கே இயல்பாக உள்ளமையால், இறைவனே உண்மையான 'ஆண்மகன்' எனவும், உலகில் பிறந்து சின்னாள் பல்பிணிச் சிற்றறிவுடன் அல்லற்பட்டு அழிந்தொழியும் ஆடவரெல்லாம் ஆடவரல்லர் எனவும் கூறுவர். இக்கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு 'கடவுள் மாட்டு மானிடப்பெண்டிர் நயப்பன' என்பதனைக் 'கடவுளிடத்து மானிட வடிவிலேயுள்ள ஆன்மாக்களாகிய பெண்கள் கொள்ளும் காதல்' எனவும், கடவுள் மானிடப் பெண்டிரை நயப்பன என்பதற்கு, இறைவன் மானிடவடிவிலுள்ள 'ஆன்மாக்களாகிய பெண்டிரைக் காதலிப்பது' எனவும் பொருள் கொள்ளலாம். இவ்வாறு இச்சூத்திரத்திற்குப் பொருள் கொள்ளுவதைப் 'பேரின்பக் காதல் நெறியின்' அடிப்படைக் கருத்தினை அறிந்தவர்கள் தவறாகக் கருதார்.

சங்க இலக்கியத்துள் இக்காதல் நெறிக்குச் சான்றுகள் ஒன்றும் காணப்படவில்லை. திருக்குறளின் மூன்றாம் பகுதியாகிய "காமத்துப்பால்" மண்ணுலக மக்கள் காதலைக் கூறாது, மெய்யுணர்வுக் காதலையே சொல்லோவியமாக்கிக் காட்டுவதாகக் கூறுவோரும் உளர். கிறித்துவ சமயப் பாதிரிமார்களே இத்தகைய விளக்கத்தைக் காமத்துப்பாலிற்கு முதன்முதல் கொடுத்துள்ளனர்.

தேவார காலத்தில்தான், இந்நெநி போற்றி வளர்க்கப் பட்டதாகத் தெரிகிறது. திருஞான சம்பந்தருடைய பாடல்களிலும், திருநாவுக்கரசருடைய பாடல்களிலும் இத்தெய்விகக் காதல் மணம் கமழுவதைக் காணுகின்றோம், மணிவாசகரின் திருக்கோவையார்.

அருள்வயிற் சிறந்த அகத்திணை மருங்கின்
இருளறு நிகழ்ச்சி இவையென

மொழிவதாகக் கூறுவர்.

மணிவாசகப் பெருமான் இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு திருக்கோவையாரை அவர் இயற்றியுள்ளார். ஆன்மாவாகிய தலைவி, இறைவனாகிய தலைவன் அளிக்கும் இன்ப வெள்ளத்தில் மூழ்கித் திளைக்கும் நிலையினைச் சித்தாந்தத்தின் நெறி நின்று மணிவாசகர் விளக்கியுள்ளார். இறைவனே பரமான்மா, அப்பரமான்மாவின் ஒரு கூறே சீவான்மா. சீவான்மாவும், பரமான்மாவும் வேறுபட்டு விளங்குவதற்குக் காரணம் இன்ப வெள்ளத்துள் மூழ்கித் திளைப்பதற்காகவே யாகும் என்பதனை

ஆனந்த வெள்ளத் தழுத்துமோர் ஆருயிர் ஈருருக்கொண்(டு)
ஆனந்த வெள்ளத்திடைத் திளைத்தா லொக்கும்

என்னும் திருக்கோவையார் பாடலால் (307) அறியலாம். மேலும், தெய்வப் புணர்ச்சி புரிந்த தலைவன், புணர்ச்சி இன்பத்தின் இயல்பினை,

சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணித்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று நானிவளாம் பகுதிப்
பொற்பா ரறிவார் ....

என்றுகூறும்வகையில்அமைத்தஇக்கோவைச்செய்யுளுக்குப் (8) பேராசிரியர் தந்துள்ள உரைவிளக்கம் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

"நல்வினைத் தெய்வம் களவின்கண் கூட்ட அமுதமும் அதன்கண் கரந்துநின்ற சுவையுமென்ன என்னெஞ்சமும் இவள் – கண்ணேயொடுங்க, யானென்பதோர் தன்மைகாணா தொழிய இருவருள்ளமும் ஒருவேமாறு கரப்ப, ஒருவேமாகிய ஏகாந்தத்தின்கண் பிறந்த புணர்ச்சிப் பேரின்ப வெள்ளம் (இதனை அனுபவிக்கின்றயானே அறியினல்லது) யாவரானறியப்படுமென்று மகிழ்ந்துரைத்தான்," என்பதனால் மெய்யுணர்வுக் காதல் நெறி, அகப்பொருள் காதலை அடிப்படையாகக் கொண்டு தோன்றி வளர்ந்தமை தெளிவாகத் தோன்றுகின்றது.

இறைவனை அடைய விரும்பும் ஆன்மாக்கள் தன் காதலனாகிய தலைவனிடம், தன்அன்பிற்கும், நம்பிக்கைக்கும் உரியவரையும் அஃறிணைப் பொருள்களையும் தூது அனுப்புவதாகப் பாடும் இலக்கிய மரபும், பக்திநெறிக் காதலை வளர்க்கப் பேருதவி புரிந்தது எனலாம். தமது உள்ளத்தைக் கவர்ந்த காதலனிடம் (இறைவனிடம்), தன் மனநோயை எடுத்துரைத்து, அதனைப் போக்க அருள்புரியுமாறு தனது அன்பிற்குரிய பொருள் ஒன்றைத் தூது சென்று, கூறிவருமாறு வேண்டும் முறையில் பாடப்படும் பாடல்கள் பல மெய்யுணர்வாளர்களின் அருட்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அஃறிணைப் பொருள்கள் தூதுபோவதற்கும், செய்திகளைச் சொல்வதற்கும் உரியனவல்ல எனினும், அவற்றை விளித்துக்கூறுவதற்குத் தலைவன் தலைவியின் மனமயக்கமே காரணம் என்பர். இவ்வாறு வரும் செய்திகள் அகத்திணையிற் காமமிக்க கழிபடர் கிளவி'யின் பாற்படும். இவ்வகையில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாடியுள்ள பாடல்கள் மிகப் பலவாகும். இவற்றுள் திருவாசகத்துள் காணப்படும் 'திருக்கோத்தும்பி' என்னும் பதிகமும், குயிற் பத்து' என்னும் பதிகமும் குறிப்பிடத்தக்கனவாகும்.

## திருவாசகமும் தெய்விகக் காதலும்

மாணிக்கவாசகர் இறைவனிடம் சென்று தூதுரைக்குமாறு,

நானுமென் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத் தோம்
தானுந்தன் தையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ! (திருவா. 10 : 15)

என்று தும்பியைத் தூதுரைக்குமாறு கேட்கும் பகுதி ஓதற் கெளிதாகவும் உணர்தற்கரிதாகவும் உள்ளது.

'குயிற்பத்து' எனும் பகுதியில் உள்ள ஒவ்வொரு பாடலும் ஆன்மாவாகிய தலைவி, இறைவனாகிய தலைவனிடத்துத் தனது ஆற்றாமையை உரைக்குமாறு குயிலைத் தூதாக அனுப்புவதை உணர்த்தும் சொல்லோவியமாகத் திகழ்கின்றது.

கீதமினிய குயிலே கேட்டியே லெங்கள் பெருமான்
பாதமிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பாற்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதிகுணமொன்று மில்லான் அந்தமிலான் வரக்கூவாய்!

தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயி லேயிது கேள்நீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட வள்ளல்
ஊன்பழித் துள்ளம் புகுந்தென் உணர்வது வாயவொருத்தன்
மான்பழித் தாண்டமென் னோக்கி மணாளனை நீவரக்கூவாய்!
(திருவா. 18 : 1, 4)

எனும் பாடல்கள் மெய்யுணர்வுக் காதல் நெறியின் மென்மையை, நுண்மையை, தன்மையை நயமிகு சொற்களால் நவில்கின்றன.

## மடலேறத் துடிக்கும் மங்கை

வைணவ சமய அருளாளர்களான திருமங்கையாழ்வார் பாடியருளிய சிறிய திருமடலும், பெரிய திருமடலும், நம்மாழ்வார் இயற்றியருளிய திருவாய்மொழியும், திருவிருத்தமும்

மெய்யுணர்வுக் காதல் நெறியை வளர்த்த பேரின்ப இலக்கியங்களாகும். காதலியை அடைய இயலாத தலைவன் ஊராருக்கு உணர்த்துவதற்குப் பனைமடலால் செய்யப்பட்ட குதிரையின் மீதேறி, கையிலே தன் காதலியின் வடிவைத் தாங்கியபடத்தைப் பிடித்துக் கொண்டு நிற்பான்.அக்குதிரையை ஏவலர் இழுக்க, அவன் உடலில் பனைமடல் கருக்கு அறுப்பதால், இரத்தம் கசிய அவ்வூரை வலம் வரப் போவதாக அவன் எச்சரிக்கை செய்வான் என்பது பண்டை அகப்பொருள் இலக்கண மரபாகும் என்பர். இதனை மடலேறுதல் என்பர். திருமங்கையாழ்வாரின் ஆன்மாவாகிய தலைவி, தானே மடலேறப் போவதாக அச்சுறுத்துகிறாள்:

காரார் கடல்வண்ணன் பின்போன நெஞ்சமும்
வாராதே என்னை மறந்ததுதான், வல்வினையேன்
ஊரார் உகப்பதே யாயினேன், மற்றெனக்கிங்(கு)
ஆராய்வார் இல்லை அழல்வாய் மெழுகுபோல்
நீராய் உருகுமென் ஆவி, நெடுங்கண்கள்
ஊரார் உறங்கிலும் தாமுறங்கா, உத்தமன்றன்
பேராயினவே பிதற்றுவன் பின்னையும்
காரார் கடல்போலும் காமத்த ராயினார்
ஆரேபொல் லாமை அறிவார்?.....
பேராயிரமும் பிதற்றி பெருந்தெருவே
ஊரார் இகழிலும் ஊரா தொழியேன் நான்
வாரார்பூம் பெண்ணை மடல்!

(சிறிய திருமடல் 61–80)

மற்றும், 'பெண்கள் மடலூர்தலில் தவறில்லை. தென்தமிழ் நெறிதான் அவ்வுரிமையைப் பெண்களுக்கு அளிக்க மறுக்கிறது.ஆனால், வடநெறி ஆதரவு தருகிறது. எனவே, நான் மடலூரப் போகிறேன்' என அவள் அறைகூவல் விடுப்பதை

.....காமத்தின்
மன்னும் வழிமுறையே நிற்றும்நாம், மானோக்கின்
அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்

'மன்னும் மடலூரார்' என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவதுண்டு அதனை யாம்தெளியோம்;
மன்னும் வடநெறியே வேண்டினோம், வேண்டாதார்
தென்னன் பொதியில் செழுஞ்சந் தனக்குழம்பின்
அன்னதோர் தன்மை அறியாதார்.

(பெரிய திருமடல். 39–41)

என்னும் பாடற்பகுதி தெரிவிக்கின்றது. இப்பகுதிகள் யாவும் மெய்யுணர்வுக் காதல் நெறியின் மூலம் புதுமைக் கருத்துகள் அகப்பொருள் இலக்கியத்துள் நுழைந்துள்ளதை எடுத்தியம்புகின்றன.

## காண்பவை எல்லாம் காதலன் திருவடிவே

கார்மேக வண்ணனாகிய திருமாலிடம் தீராக் காதல் கொண்ட காரிகையொருத்தி தன் ஆற்றாமை புலப்படுமாறு

மேகங்களோ! உரை யீர்! திரு மால்திருமேனியொக்கும்
யோகங்க ளுங்களுக் கெவ்வாறு பெற்றீர்? உயிரளிப்பான்
மாகங்க ளெல்லாம் திரிந்துநன் னீர்கள் சுமந்துநுந்தம்
ஆகங்கள்நோவ, வருத்தும்தவமாம் அருள்பெற்றதே!

(நா.தி.பி 2509)

என்று மேகங்கள் திருமாலின் கரியவண்ணம் பெற்ற வரலாற்றைச் சொல்லுமாறு வினவுகிறாள். இப்பாடலில், நம்மாழ்வாரின் ஆன்மிக ஏக்கத்தின் எதிரொலியைக் கேட்கின்றோம்.

காதலனைத் தேடியலையும் தன்மகள், அவனைக் காணக்கூடிய ஊர் யாதாக இருக்கக்கூடும் என்பதை மகட் போக்கிய நற்றாய்,

உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும்வெற் றிலையுமெல்லாம்
கண்ணன், எம்பெருமா னென்றென் றேகண்கள் நீர்மல்கி.
மண்ணினுள் அவன்சீர் வளமிக் கவனூர் வினவி
திண்ணமென்னிள மான்புகு மூர்திருக் கோளூரே

(நா.தி பி.3293)

எனத் துணிவதாக நம்மாழ்வார் பாடியுள்ள பாடலும் பண்டை அகப்பொருள் மரபுவழிமலர்ந்த தெய்விகக் காதல் நெறிக்காட்சியைச் சித்திரிப்பதாகும். இதைப் போன்ற "நாயக–நாயகி' பாவ உள்ளுறைப் பொருளையுணர்த்தும் பாடல்கள் மிகப்பலவாகத் திருவாய்மொழியில் உள்ளன.

## ஆன்மாவின் எழுவகைப் பருவங்கள்

சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருக்கயிலாய ஞான உலா எனப்படும் ஆதியுலா மெய்யுணர்வுக் காதல் நெறியை முழுமையாக விளக்குவதாகும். உயிர்கள் எல்லாம் பெண்மை இயல்புடையன. இறைவன் ஒருவனே வீறார்ந்த ஆண்மைப் பண்பு வாய்க்கப் பெற்றவன்! அவ்விறைவனைக் கண்டு, அவனுடைய திருவருளைப் பெறத் துடிக்கும் ஆன்மாக்கள் படும்பாட்டினைச் சித்திரிப்பது ஆதியுலா. 'ஆன்மாக்கள் எல்லாம் பெண்மையன' எனும் உள்ளுறையை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற பொழுது, சேரமான் பெருமாள் நாயனாரே, எழுவகைப் பருவ மாதராக மாறிமாறி பாவிக்கும் மனக்காட்சியே இத்திருநூலாக வடிவம் கொண்டது எனக் கருதலாம்.

மடந்தைப் பருவத்து மாதொருத்தி இறைவன் உலா வருவதைக் கண்டு காதல்வயப்பட்ட காட்சியை மட்டும் நாம் இங்குக் காண்போம்.

தீந்தமிழின் தெய்வ வடிவாள் திருந்தியசீர்
வாய்ந்த மடந்தைப் பிராயத்தாள் – ஏய்ந்தசீர்
ஈசன் சிலையும் எழில்வான் பவளமும்
சேய்வலங்கை வேலும் திரள்முத்தும்– பாசிலைய

.....

வேல்வல்லான் வில்வல்லான் மெல்லியலார்க் கெஞ்ஞான்றும்
மால்வல்லான் ஊர்கின்ற மால்விடையின் – கோல
மணியேறு கேட்டாங்கு நோக்குவாள் சால
அணியேறு தோளானைக் கண்டாங்– கணியார்ந்த

கோட்டி ஒழிய எழுந்து குழைமுகத்தைக்
கோட்டி நுதல்சிவப்ப வாய்துலக்கி – நாட்டார்கள்
எல்லாருங் கண்டார் எனக்கடவுள் இங்காய
நல்லாய் படுமேற படுமென்று – மெல்லவே
செல்ல லுறுஞ்சரணங் கம்பிக்குந் தன்னுறுநோய்
சொல்லலுறுஞ் சொல்லி உடை செறிக்கும் – நல்லாகம்
காண லுருங்கண்கள் நீர்மல்கும் காண்பார்முன்
நாண லுறும்நெஞ்சம் ஒட்டாது – பூணாகம்
புல்லலுறும் அண்ணல்கை வாரான்என் றிவ்வகையே
அல்ல லுறும்அழுந்தும் ஆழ்துயரால்–மெல்லியலாள்
தன்னுருவம் பூங்கொன்றைத் தார்கொள்ளத் தான்கொன்றைப்
பொன்னுரு வங் கொண்டு புலம்புற்றாள்

(ஆதியுலா 112–132)

என்னும் ஆதியுலாப் பகுதி உணர்த்தும் உள்ளுறைப் பொருள்யாது? ஆன்மாக்கள் அடைந்துள்ள பரிபக்குவ நிலைக்கேற்ப, அவை எழுவகையாக வேறுபட்டு நிற்கின்றன. அவற்றுள், நான்காவது வகையாக உள்ள ஆன்மாவை 'மடந்தைப்' பருவ நிலையிலுள்ளதாகக் கூறலாம். அப்பருவ நிலையிலுள்ள ஆன்மா இறைவனை அடையத் துடிக்கும் துடிப்பே மேற்கண்ட பாடற்பகுதியில் விளக்கப் பெற்றுள்ளதைக் காணுகின்றோம்.

## அடிகள் காட்டும் ஆன்மிகக் காதல்

இந்த மெய்யுணர்வுக் காதல் நெறியின் மரபினை, பிற்கால அருளாளர்களும்,இக்காலப் புலவர்களும் போற்றி வளர்த்து வந்துள்ளனர். சென்ற நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கிய இராமலிங்க அடிகள், தெய்விகக் காதல் நெறியைக் கருத்தில் கொண்டு பாடியுள்ள பாடல்கள் மிகப்பல. மூன்றாம் திருமுறை முழுமையும் ஆறாம் திருமுறையின் சிறுபகுதியும் திருவருட்பாவில் மெய்யுணர்வுக் காதல் நெறிப் பாடல்களாகவே உள்ளன.

தலைவி தெருவிலே பவனி வரும் தியாகப் பெருமானைச் கண்டு காதல் வயப்பட்டாள்; மதி மயங்கினாள்; தன் தோழியிடம்

தென்னார் சோலைத் திருவொற்றித்
தியாகப் பெருமான் பவனிவரப்
பொன்னார் வீதி தனிற்பார்த்தேன்
புளகம் போர்த்தேன் மயல்பூத்தேன்
மின்னார் பலர்க்கு முன்னாக
மேலி யவன்ற னெழில்வேட்டு
இன்னா ரணங்கே யென்னடிநான்
இச்சை மயமாய் நின்றதுவே

(திருவருட்பா 1496)

எனத் தன் மதிமயக்கத்திற்குக் காரணத்தைத் தெரிவிக்கின்றாள்.

காதல் நோயினால் துன்புறும் தலைவி, ஆற்றாக் காதலினால் அனல்பட்ட மெழுகாக நைந்துருகுகிறாள்; தோழியிடம் செயலற்ற, தன் நிலை எடுத்துரைக்கிறாள்:

ஆரா அமுதாய் அன்புடையோர் அகத்துள் இனிக்கும் அற்புதனார்
தீரா வினையும் தீர்த்தருளும் தெய்வ மருந்தார் சிற்சபையார்
பாரார் புகழும் திருவொற்றிப் பரமர் தமது தோளணையத்
தாரார் இன்னும் என்செய்கேன் சகியே இனிநான் சகியேனே!

(திருவருட்பா 1658)

இதைப் போன்ற பாடல்கள் பலவும், வள்ளலாரின் ஆன்மா அனுபவிக்கத் துடிக்கும் இறையானுபவத்தின் இயல்பையும் ஏற்றத்தையும் குறியீட்டு மொழியால், 'நாயக–நாயகி' பாவத்தில், புலனுகர் இன்பத்தை விடப் பல்லாற்றானும், மேம்பட்ட பேரின்பப் பெருவாழ்வின் வெற்றியைத் தெரிவிக்கின்றன.

## பாரதியின் காதலி

இந்திய விடுதலைக்குக் கட்டியங்கூறிய தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாரும் மெய்யுணர்வுக் காதல் நெறி

மரபினைப் பொன்னேபோல் போற்றியுள்ளார். 'கண்ணன் பாட்டு' எனும் பகுதியில் 'கண்ணன்–என் காதலன்' எனும் தலைப்பில் அமைந்த பாடல்களும், 'கண்ணன்–என் காந்தன்' எனும் கவிதையும், கண்ணம்மா–என் காதலி' எனும் தலைப்பில் அமைந்த கவிதைகளும் அப்பண்டை மரபினைப் பின்பற்றிச் சிற்சில புதுமைப் பண்புகளைப் புகுத்தி இயற்றப்பட்டனவாகும்.

கண்ணனைக் காதலனாக அடைந்த தலைவி,
பாலுங் கசந்ததடீ!–சகியே
படுக்கை நொந்ததடீ!
கோலக் கிளிமொழியும் – செவியில்
குத்த லெடுத்ததடீ ;

எனத் தன் காதல் நோயால் உண்டான துன்பத்தைத் தோழியிடம் கூறி வருந்தும் பகுதியை நாம் நன்கு அறிவோம். கண்ணனைக் காணாது வருந்தும் தலைவி,

தேனை மறந்திருக்கும் வண்டும்–ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும்–இந்த
வைய முழுதுமில்லை தோழி!
கண்ணன் முகமறந்து போனால்– இந்தக்
கண்க ளிருந்துபய னுண்டோ?
வண்ணப் படமுமில்லை கண்டாய்–இனி
வாழும் வழியென்னடீ தோழி!

எனத் தோழியை, 'ஒரு வழிகாட்டுமாறு' வேண்டுகிறாள்.

சங்கத் தமிழின் அகப்பொருள் மரபினைத் தெய்வத் தமிழ் நெறியில் குழைத்துத் தந்த அருளாளர் யாவரும், இறைவனைத் தலைவனாகவும், இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மாவைத் தலைவியாகவும் உருவகித்துப் பாடியுள்ளதைக் கண்டோம். ஆனால், பாரதியார் கண்ணனை – பரமாத்மாவை – காதலியாகவும், தம்மை (ஆன்மாவை)க் காதலனாகவும் கருதிப் பாடியுள்ள பாடல்கள் சிந்தைக்கினியன; செந்தமிழின்பக் கவிநலம் பயப்பன.

பாயுமொளி நீயெனக்கு! பார்க்கும் விழி நானுனக்கு!
தோயுமது நீயெனக்கு! தும்பியடி நானுனக்கு!
வாயுரைக்க வருதில்லை! வாழிநின்றன் மேன்மையெல்லாம்
தூயசுடர் வானொளியே! சூறையமுதே! கண்ணம்மா!

எனத் தொடங்கும் பாடல், கண்ணனைக் காதலியாகப் போற்றும் பாரதியின் பாடல்களுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். இவ்வாறு பரமான்மாவை– இறைவனைக்– காதலியாகக் கற்பித்துப் பாடும் புதுமையைப் பாரதியார் புகுத்தியுள்ளமை ஆராய்ச்சிக்குரியதாகும். பாரசீக நாட்டு சூபிச மெய்யுணர்வாளர்கள், இறைவனைக் காதலியாகப் பாவித்துப் பாடியுள்ளனர். அதனுடைய எதிரொலியைச் சென்ற சில நூற்றாண்டுகளில் இந்திய மண்ணிலே இயற்றப்பட்ட பாரசீக, இந்தி, உருது மொழிக் கவிதைகளில் நாம் கேட்கின்றோம். அச்சூபிச மரபின் தாக்கம் பாரதியின் சிந்தனையில் ஆழப்பதிந்தது, அதனால் உண்டான அகத்தெழுச்சியால் கண்ணனைக் காதலியாகப் போற்றும் புதுநெறியைப் பாரதி பின்பற்றியுள்ளார்.

பாரதியின் மெய்யுணர்வுக் காதல்நெறிப் பாடல்களில் பண்டைய அருளாளர்களின் தெய்விகக் காதல் நெறிப்பாடல்களில் காண இயலாத அளவிற்கு இன்பச்சுவை பொங்கிவழிகின்றது. வட இந்தியாவில், சிறப்பாக வங்காளத்தில் பெருவளர்ச்சியுற்ற 'பிரேம–பக்தி' எனப்படும் இராதை–கண்ணன் வழிபாட்டு இயக்கத்தின் புலனுகர் இன்பப் போக்கு, புதுமைக் கவிஞர் பாரதியாரின் உள்ளத்தைக் கவர்ந்தமையின் விளைவாக இப்பண்பு அவருடைய கவிதைகளில் இடம் பெற்றிருத்தல் கூடும்.

இங்கு ஓர் உண்மையை நாம் கருத்தில் இருத்த வேண்டும். தமிழகத்தில் தோன்றிய 'நாயக –நாயகி' பாவமாகிய மெய்யுணர்வுக் காதல் நெறிக் கோட்பாடு, வட இந்தியாவின் பல பகுதிகளில் பக்திநெறியோடு சென்று கி பி. பத்தாம் நூற்றாண்டு

அளவில் பரவலாயிற்று. இசுலாமியர் ஊடுருவலால் வட இந்தியப் பண்பாட்டில் உண்டான புத்துயிர்ப்பு, வைணவ சமயப் பக்தி நெறிக்குப் பேரூக்கம் அளித்தது. அங்குக் 'கண்ணன்–இராதைக் காதல் நெறி' இயக்கம் மேலைக் கடற்கரை முதல் கீழைக் கடல் வரை வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், மீராவின் கண்ணன் பாடல்கள் சண்டிதாசரின் பிரேம பக்திப் பாடல்கள், வித்தியாபதியின் 'கீத கோவிந்தம்,' சைதன்யரின் பக்திப்பாடல்கள் முதலியன யாவும் இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மாவின் ஏக்கத்தை எதிரொலிக்கும் காதல் பாடல்களாக அமைந்தன. அவை வட இந்திய மக்களின் எண்ணத்தில் எழுச்சியையும், இதயத்தில் மலர்ச்சியையும் உண்டாக்கின.

# 7

## சும்மா

"சும்மா வந்தேன்
சும்மா செய்வானா
சும்மா இரு !
சும்மா இருக்கிறேன்!
சும்மா இருக்கிறதே கழுத்து!
சும்மா சொன்னேன்!
சும்மா கொடுப்பானா?
சும்மா போகலாம்!
சும்மா வருவான்!"

என்று சும்மாவை நாம் 'சும்மா' பேச்சு வழக்கில் பயன் படுத்தி வருகிறோம். எதைச் சொல்ல விரும்பினாலும், எதற்கெடுத்தாலும், இச்சொல்லைப் பாமரரும் படித்தவரும் பயன்படுத்துகின்றனர். மிக எளிதில், மக்களுடைய உள்ளத்து உணர்ச்சிகளையும் அவற்றோடு பின்னிப் பிணைந்து கிடக்கும் கருத்துகளையும் இச்சொல்லின் மூலம் உணர்த்த முடிகிறது. இதனால், இச்சொல்லினை, அதனுடைய பலவகைப் பொருளினைத் தெரிந்தோ, தெரியாமலோ எல்லாரும் பயன்படுத்தி வருகின்றனர். தமிழ்மொழியின் சொற்களஞ்சியத்தில் உள்ள ஆயிரக்கணக்கான சொற்களுள் அடிக்கடி பயன்படுத்தப்படும் சொல் 'சும்மா' என்பதாகும்.

## தமிழ்ச் சொல்லே

இச்சொல், தமிழில் மட்டும் வழங்கவில்லை. தமிழோடு நெருங்கிய தொடர்புடைய தென் திராவிட மொழிகளான மலையாளம், கன்னடம் ஆகியவற்றில் பெரிதும் திரிபின்றி இதே வடிவில் வழங்கி வருகின்றது.

'சும்மா' என்று மலையாள மொழியிலும், 'சும்மா,' 'சும்மக, ' 'சும்மென' எனக் கன்னடமொழியிலும் இச்சொல் வழங்கப்படுகிறது. திருத்தமுறாத நடு இந்தியத் திராவிட மொழியான கோலாமியில் (Kolami) 'அமைதியாக இரு என்னும் பொருளில், சிறிது வடிவம் திரிந்த முறையில், 'சுர்மி' என்னும் சொல் வழங்கி வருகிறது. நாய்க்கி (Naiki) என்னும் நடு இந்தியத் திராவிட மொழியில் மறை பொருள்' (இரகசியம்) என்னும் பொருளில், இச்சொல் "சுரும், சுருமக" என்னும் வடிவுடன் பயின்று வருகிறது. இவ் விருவடிவங்களையும் 'சும்மா' எனும் தமிழ்ச் சொல்லின்[1] திரிபுகளாகவே மொழியியல் அறிஞர் கருதுகின்றனர். எனவே, 'சும்மா' என்பது தமிழ்ச் சொல்லே என்றுநாம்துணிந்துகூறலாம்.'சுகமாக'என்னும்வடசொல்லின் இடைக்குறை யென இச்சொல்லைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுவது, பொருந்தாது, [2]

## பொருள்

அவ்வாறாயின், 'சும்மா' என்னும் சொல்லிற்குப் பகுதி என்ன? 'சும்' என்பதே அடிச்சொல்லாகும். இஃது ஓர் ஒலிக்குறிப்புச் சொல், பழைய தமிழிலக்கியத்தில், 'சும்மை' என்னும் சொல், 'ஓசை' என்னும் பொருளில், பலவிடங்களில் பயின்றுவந்துள்ளது.[3] அதற்குப் பகுதி 'சும்' என்பதேயாகும்.'மை'

---

1 T. Burrow, & Emenau, A Dravidian Etymological Dictionary, (Clarendon Press, Oxford, 1961) P. 172.

2 Tamil Lexicon, (Madras, 1928), Vol. III, P. 1520

3 தொல். 2:349; பத்து, மதுரை 264; 309; 364; அகம். 334:4 புறம் 22:9

என்னும் பண்புப் பெயர் விகுதி புணர்ந்து, 'சும்மை' என்னும் சொல், ஆக்கம் பெறுகிறது. இதைப் போன்று, 'சும்' என்னும் ஒலிக்குறிப்புச் சொற்பகுதியோடு 'ஆ' என்னும் எதிர்மறை விகுதி சேர்ந்து மகரம் இரட்டித்து, 'சும்மா' என்னும் சொல், வடிவம் பெற்றிருக்கலாம். அதற்கு "ஒலியற்ற நிலை, ஆரவாரமின்மை, அமைதியான நிலை. பேச்சற்றநிலை" எனப்பொருள் கூறலாம். இப்பொருள்கள் காலப்போக்கில் விரிந்தும், பரந்தும் வளர்ச்சியுற்றுள்ளன.

இதனால், இச்சொல்லிற்கு "வேலை வெட்டி இல்லாமல், இயல்பாக, அமைதியாய், வறிதாக (வெறுமனே) காரணம் இல்லாமல், பயனில்லாமல், அக்கறையில்லாமல், விளையாட்டாய். இலவசமாய், தடையில்லாமல். அடிக்கடி" என்னும் பல பொருள்கள் வழங்கி வருகின்றன.

## இலக்கிய வழக்கு

வேலைவெட்டி இல்லாமல் (யாதொரு தொழிலுமின்றி) என்னும் பொருளில் காளமேகப் புலவர்,

"வாகனமேறிச் சேணிற் சும்மா
திரிமூர்த்தி யல்லாமல்"

(தனிப்பாடல் 2: 246)

என்று பயன்படுத்தியுள்ளார்.

''இம்' என்னு முன்னே எழுநூறும் எண்ணூறும்
'அம்' என்றால் ஆயிரம் பாட்டு ஆகாதோ?– 'சும்மா'
இருந்தால் இருந்தேன்; எழுந்தேனே ஆயின்
பெருங்காள மேகம் பி(ள்)ளாய்

(தனிப்பாடல் 124)

என்னும் பாடலிலும், 'ஒன்றும் செய்யாமல் இருத்தல்' என்னும் பொருளில் காளமேகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இதே பொருளில்,

பெருமாளும் நல்ல பெருமாள்; அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள்; – பெருமாள்
இருந்தஇடத் தில்சும்மா இராமையினால் ஐயோ!
பருந்தெடுத்துப் போகிறதைப் பார்!

(தனிப்பாடல் 125.)

என்னும் பாடலிலும், 'சும்மா' எனும் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளதைக் காணலாம்.

இப்பாடல்களைப் பாடிய காளமேகப் புலவரின் காலம் .கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும்.[4]

## யோகிகள் உணர்த்தும் பொருள்

''அமைதியாய் இருத்தல்' என்னும் பொருளில், யோக நெறியைப் போற்றிய அருட்செல்வர்கள் இச்சொல்லைப் பெரிதும் பயன்படுத்தியுள்ளனர். அருணகிரிநாதர், தம் கந்தரலங்காரத்தில், தற்போதமும் முப்பத்தாறு தத்துவங்களும், நீங்கித் தனக்கெனச் செயலின்றி, அருளே தாரகமாய், அவ்வருளேயாய் நிற்கும் **துரியநிலை** என்னும் பொருளில்,

சொல்லுகைக் கில்லையென் றெல்லா மிழந்து
**சும்மா**விருக்கும் எல்லையுட் செல்ல எனைவிட்டவா

(கந்தர. 10.)

என்று வழங்கியுள்ளார். இவ்வாசிரியரே, 'சொல்லும் செய லும் அற்று இரு ' என்னும் பொருள்பட, யோகநெறிக்குரிய வகையில்,

சும்மா இருசொல் லறஎன் றலுமே
அம்மா பொருள்ஒன் றுமறிந் திலனே

(கந்தரனுபூதி 12)

என்று பாடியுள்ளமையும் இங்குக் கருதத்தக்கது. இப்புலவர் வாழ்ந்த காலம் கி.பி. பதினான்காம் நூற்றாண்டாகும்.

---

4 கலைச்செல்வி (பதி.), தனிப்பாடல் திரட்டு, (மீனாட்சிப் பதிப்பகம், புதுக்கோட்டை, 1690), பக்.86.

ஐம்பொறி வாயிலாக உள்ளத்தை அலைக்கழிக்கும் புலன்களை அடக்கியொடுக்கியும், புறச்செயலற்ற நிலையில் உள்ளத்தை ஒருமுகப்படுத்தி இறைவனிடத்தில் ஈடுபடுத்தினால், ஆன்மா அடையக்கூடிய இன்பவுணர்வு ஒப்புயர்வற்றதாகும். இதனைச் சமாதி நிலை என்பர். தாயுமானவர்

சும்மா விருக்கச் **சுகமேசுகம்** என்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரம் சொல்லவும்.

(தாயுமானவர் பாடல் : 436)

என்று எடுத்துரைக்கின்றார். இங்கு 'ஒன்றிய உள்ளத்தோடு இருத்தல்' என்னும் பொருளில் இச்சொல் வழங்கப்பட்டிருக்கிறது. இதே பொருளில் இச்சொல்லை, அவர் பின்வரும் பாடற்பகுதிகளிலும் பயன்படுத்தியுள்ளார்:'

ஏதுக்குச் சும்மா இரு மனமே! (தாயு.பா. 464)
சும்மா இருக்க சுகம் உதயமாகுமே (....511)
ஏதுக்கும் சும்மா இருநீ. (....538)

இவருடைய காலம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு (கி.பி. 1705–1742) என்பர்.[5]

இவ்விருவகைப் பொருளிலேயே இச்சொல் இலக்கியங்களில் வழங்கப் பெற்றுள்ளது. இச்சொல்லிற்குரிய பிறபொருள்கள் எல்லாம், பேச்சுவழக்கில், அன்றாடப் 'பழகு தமிழில்,' பெருவாழ்வு பெற்றுள்ளன.

5 வரதராசனார் மு.: தமிழ் இலக்கிய வாலாறு, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1972; பக். 206.

# 8

# தமிழ் வளர்த்த அறவோர்

நெடுங்காலமாக தமிழகத்திற்கும் சமண சமயத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. மௌரியப் பேரரசன் சந்திர குப்தன் தன் வாழ்நாளின் கடைசிப் பகுதியில் அரசைத் துறந்தான்; பத்திரபாகு என்ற சமண சமயப் பெரியாரோடு தென்னாட்டிற்கு வந்து தங்கினான். அக்காலம் முதற்கொண்டு, சமண சமயத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே நேரடியான தொடர்பு இருந்துவருகிறது. தம்முடைய சீடரான விசாகதத்தரைப் பத்திரபாகு தமிழகத்திற்கு – சோழ பாண்டிய வேந்தர்கள் ஆட்சிபுரிந்த நாட்டிற்கு அனுப்பினார். அவரைக் கொண்டு சமண சமயக் கொள்கைகளை இங்குப்பரப்பினார் என்று மைசூர் மாநிலத்திலுள்ள கல்வெட்டுகள் அறிவிக்கின்றன.

அக்காலந்தொட்டு கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரை சமண சமயம் தமிழகத்தில் செல்வாக்குற்று விளங்கியது. பின்னர் அதனுடைய அரசியல் ஆதிக்கம் குன்றியது. அந்நிலையிலும், இலக்கியத் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் சமண சமயம் ஆற்றல்மிக்க ஒரு சக்தியாகவே இயங்கலாயிற்று.

சமண சமயச் சான்றோர்கள், கிறித்துவப் பாதிரிமார்களைப் போன்று, குறிப்பிட்ட மாநிலத்தில் வாழும் மக்கள் பேசிய மொழியில், தங்களுடைய கொள்கைகளை எடுத்துரைத்தனர். அதனால், அவ்வம்மாநில மக்களுடையதாய்மொழியைவளர்த்த

பெருமையும், ஆராய்ந்த சிறப்பும் அவர்களுக்குரியவாயின, அவர்கள் பரந்துபட்ட கலை ஞானங்களைக் கற்றுத் துறை போகிய அறிஞர்களாகவும், ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்களாகவும், மதிநுட்பத்தோடு மெய்ப்பொருளைக் கண்ட மெய்யுணர் வாளர்களாகவும் விளங்கினர்.

தமிழகத்தில் சமண சமயத்தைப் பரப்புவதற்கு அவர்கள் இலக்கியப்பணியைச் சிறப்புமிக்க கருவியாகக் கொண்டனர். அவர்களுடைய இலக்கியப் பணியில் மூவகைப் போக்குகளை நாம் காண்கிறோம். தமிழைக் கற்பவருக்குப் பயன்படும் இலக்கண நூல்களை அவர்கள் எழுத முன் வந்தமை ஒருவகை இலக்கியப் பணியாகும்; கற்போர் உள்ளத்தைக் கவரும் வகையில் கதைகள் வாயிலாகச் சமணசமய தத்துவங்களையும் கொள்கைகளையும் எடுத்து விளக்கியமை மற்றொரு வகையாகும்; தங்கள் சமயக் கொள்கைகளின் அடிப்படையாக உள்ள அறத்தைச் சமண சமயத்தவர்க்கேயுரிய சிறப்பு வகையிலும், எல்லார்க்கும் பயன்படத்தக்க பொதுவகையிலும் எடுத்தியம்பியமை அவர்கள் செய்த மூன்றாவது வகை இலக்கியப் பணியாகும். இவ்வகையில் அறத்தின் ஆற்றலை உணர்த்த முன்வந்த சமண சமயச் சான்றோர்கள், நீதிநூல்கள் பலவற்றைத் தமிழில் இயற்றினர்.

### 1. அறவுணர்வு ஊட்டும் இலக்கியம்

சமணசமயத்தின் செல்வாக்குத் தமிழகத்தில் பெருகிய காலத்தில் தான் 'நீதி' என்னும் சொல் தமிழ்மொழியில் ஆட்சிக்கு வந்தது. சமணசமயத்தைத் தென்னாட்டில் பரப்ப முயன்ற சமணசமயத் துறவிகளாலேயே, பெரிதும் நீதிநூல்கள் தமிழில் இயற்றப்பட்டுள்ளன.

'அறநெறிக் கருத்துகளைச் சமணர்களைப் போன்று அழகுற எடுத்துரைப்பார் இந்திய மண்ணில், ஏன் உலகிலேயே இதுவரை தோன்றவில்லை'! என நாம் உறுதியாகக் கூறலாம். அதிலும் அறநெறிக் கருத்துகளைப் பாட்டாகப்

பாடிய பெருமை, சமணர்க்கேயுரியது எனலாம்! கருத்துச் செறிவோடு கற்பவர் உள்ளத்தைக் கவரத்தக்க கற்பனை வளத்தையும் கொண்ட, நீதிநூல்கள் பலவற்றை அவர்கள் இயற்றியுள்ளனர். அந்நீதிநூல்களை நாம் இரண்டு வகையாகப் பாகுபடுத்தியுரைக்கலாம். அவை, 'மூதுரைகள்', 'அறநூல்கள்'என்பனவாகும். மனித வாழ்க்கையின் பல்வேறு துறைகளைப்பற்றி அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்த பெரியோர்கள் கண்ட உண்மைகளைத், திட்பநுட்பமாகக் கேட்போர் உள்ளத்தில் பதியுமாறு சுருங்கச்சொல்லி, விளங்க வைப்பன மூதுரைகள். அறநூல்கள் உவமை நயமும், சுவையுணர்வும் மிக்குடையன, அவற்றுள் கவிதை அழகும், கற்பனைச் சிறப்பும் இணைந்தும் இழைந்தும் காணப்படும்.

## திருக்குறள்

தமிழில் தோன்றியுள்ள நீதிநூல்களுக்கு எல்லாம் முடி மணியாய், தலையூற்றாய் விளங்குவது திருக்குறள்.

ஒன்றாக நல்லது கொல்லாமை. ( குறள். 323)
அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. (குறள் 259)
யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் அல்ல பிற. (குறள். 300)
ஊழிற் பெருவலி யாவுள? (குறள் 380)
தலைப்பட்டார் தீரத் துறந்தார். (குறள் 348)

என்னும் குறட்பாக்களில் கொல்லாமை, புலால் உண்ணாமை, பொய்யாமை போன்ற அறங்களையும், ஊழின் பேராற்றலையும், துறவுநெறியின் முக்கியத்துவத்தையும், இவற்றைப் போன்ற வேறு பிற செய்திகளையும் திருவள்ளுவர் சிறப்பித்துப் பேசுவதால்,ஒருக்கால் வள்ளுவரும் சமணசமயத்தைச் சேர்ந்தவராக இருந்திருக்கலாம் எனக் கருதுகின்ற அறிஞர்களும் உண்டு. முப்பால் முழுமையும் முறையாக நோக்குகின்றபொழுது, பல்வேறு சமயங்களின் சிறப்புமிக்க

கருத்துகளை எல்லாம், வள்ளுவர் தம்முடைய நூலில் திறம்படப் பயன்படுத்தியுள்ளமை புலனாகிறது. எனவே, மக்களிடத்தில் பொதுநிலை அறத்தைப் புகட்டிய வள்ளுவரைச் சமணர் எனக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

**நாலடியார்**

திருக்குறளுக்குப் பின்னர்த் தோன்றிய நீதிநூல்கள் எல்லாம் திருக்குறளின் அமைப்பு முறையை ஓரளவிற்கும், பேரளவிற்கு அதன் கருத்துகளையும் போற்றிப் பின்பற்றலாயின. 'நாலடி நானூறு' என்னும் நீதிநூல், சமண சமயக் கொள்கைகளைச் சிறப்பாகவும், ஒழுக்கநெறிக் கருத்துகளைப் பொதுநிலையிலும் எடுத்துரைப்பதாகும். சமண முனிவர்கள் பலர் இயற்றிய பாடல்களுள் நானூற்றைத் தேர்ந்தெடுத்துத் தொகுக்கப்பட்ட தொகைநூல் நாலடியார் என்பது மரபுவழிச் செய்தியாகும். அறம், பொருள் காமம் என்னும் பிரிவுகளைக் கொண்டது இந்நூல். அவை முறையே பதின்மூன்று, இருபத்தாறு, பத்து அதிகாரங்களை உடையனவாக உள்ளன. பதுமனார் என்னும் புலவர் இந்நூலை வகைப்படுத்தி நல்லதோர் உரையினை எழுதியுள்ளார். இந்நூலின் அருமை பெருமைகளை நன்குணர்ந்த டாக்டர் ஜி.யூ.போப், இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

சிறப்புமிக்க கருத்துகள் பலவற்றை விளக்கும் பாடல்கள் பல, நாலடியாருள் இடம் பெற்றுள்ளன, எளிய தமிழில் இனிய நடையில் ஆழ்ந்த கருத்துகள் பலவற்றை இந்நூல் அழகுற எடுத்தியம்புகிறது. சமணக் கொள்கையின் அடிப்படையான வாழ்க்கை நுட்பங்கள் இங்கே விளங்குகின்றன. காமத்துப்பால் ஒரு சில பாக்களில் அமைந்தாலும் திருக்குறளில் போல நாடகவழக்காக அமைந்துள்ளமை இங்குக் கருதத்தக்கதாம். பெருமுத்தரையர் என்னும் குறுநில மன்னரை நாலடியாரின் இரண்டு பாடல்கள் சுட்டுகின்றன. இதனால், இந்நூல் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக அறிஞர் பலர் கருதுகின்றனர்.

## பழமொழி

பதினெண் கீழ்க்கணக்கு என்னும் பண்டைத் தமிழ் இலக்கியத் தொகுதியில் திருக்குறள், நாலடியார் ஆகிய இரு நீதி இலக்கியங்களுக்கு அடுத்த நிலையில், சிறப்புடையதாகப் பாவலரால் போற்றப்பெறுவது 'பழமொழி நானூறு, என்னும் இலக்கியமாகும் இதனை முன்றுறையரையனார் என்ற சமணப் புலவர் இயற்றியுள்ளார். ஆனால், திருவள்ளுவரைப்போலே இந்நூலாசிரியர், தமது நூலைத் திட்ட மிட்டுப் பல பாவியல்களாக வகுத்துரைக்கவில்லை. அவ்வப்போது தாம் கண்டும், கேட்டும், உய்த்துணர்ந்தும் தெளிந்த பொருள்களை ஒவ்வொரு பழமொழியோடு இயைத்து ஒவ்வொரு வெண்பாவாகப் பாடிச் சேர்த்துள்ளார்.

தமிழகத்தில் தொன்று தொட்டு வழங்கிவந்த பழமொழிகளை ஈற்றடியாகக் கொண்டும் பழைய புராணக் கதைகள், வரலாற்றுச் செய்திகள் போன்றவற்றைப் பின்னணியாகக் கொண்டும் செறிவுமிக்க கருத்துகள் சிந்தனையைத் தூண்டும் வகையில் வெண்பாக்களாக அமைக்கப் பெற்றுள்ளன.

## சிறுபஞ்சமூலம்

நீதி இலக்கியங்களுள் மூதுரை வகையைச் சேர்ந்தது இந்நூல். ஐந்து கிழங்குகளைச் சேர்த்துச் செய்யப்பட்ட மருந்தைப் போன்று, ஐந்து உண்மைகளை இந்நூலின் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. இதனால் சிறுபஞ்சமூலம் (சிறிய ஐந்து கிழங்குகள்) என்ற பெயர் இந்நூலிற்கு இடப் பெற்றுள்ளது "உடலுக்கும் உயிர்க்கும் மருந்து தரும் சமணரின் அறவழியை இங்கே நாம் காணலாம்'".

சிறுபஞ்சமூலத்தை இயற்றியவர் காரியாசான் என்னும் சமணப்புலவராவர். நூறு பாடல்கள் இந்நூலுள் உள்ளன.

## ஏலாதி

ஏலம் முதலிய ஆறு பொருள்கள் சேர்ந்த மருந்து உடலுக்கு ஊட்டம் அளிப்பதைப் போன்று உயிர்க்கு உறுதியளிக்கும் ஆறுவகையான அறநெறிக் கருத்துகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்வது ஏலாதியாகும். இந்நூலில் 81 செய்யுள்கள் உள்ளன. இதனை இயற்றியவர் கணிமேதாவியார், அறத்தையும் வீட்டு நெறியையும் இந்நூல் உலகிற்கு உணர்த்துகிறது.

## நான்மணிக்கடிகை

அடி அளவினால் நாலடியார் பெயர் பெற்றது போல பாடல்களில் கூறப்பெறும் பொருள்களின் அளவால் நான்மணிக்கடிகை பெயர் பெற்றுள்ளது, நான்கு வகையான மணிகளால் செய்யப் பெற்ற அட்டிகை எனும் கழுத்தணி கவினுற விளங்குவதைக் காணலாம். அதைப்போன்று ஒவ்வொரு பாடலிலும், ஒத்த நான்கு நீதிக்கருத்துகளாகிய மணிகளைக் கொண்டு சிறப்புற்று ஒளிர்வது நான்மணிக் கடிகை எனும் இந்நூலாகும்.

விளம்பிநாகனார் எனும் புலவர் இந்நூலை இயற்றியுள்ளார். கடவுள் வாழ்த்துச் செய்யுள்கள் இரண்டும் சேர்ந்து இந்நூலுள் மொத்தம் 101 செய்யுள்கள் உள்ளன. மனித வாழ்க்கையின் பல்வேறு துறைகளைப் பற்றி, அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்த பெரியோர்கள் கண்ட உண்மைகளைத் திட்பநுட்பமாகக், கேட்போர் உள்ளத்தில் பதியுமாறு இந்நூல் சுருங்கச் சொல்லி விளக்க வைக்கும் திறனுடையதாகும்.

## அறநெறிச்சாரம்

சமண சமயத்தினருக்கே சிறப்பாக உரிய ஒழுகலாறுகள் பலவற்றோடு அறம், ஒழுக்கம் பற்றிய பொதுவான கருத்து சுளையும் தன்னகத்தே கொண்டு இலங்குவது முனைப் பாடியார் இயற்றிய அறநெறிச்சாரமாகும். 'மூதுரை' வகையைச்

சேர்ந்த இந்நூல் கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகும். இந்நூலாசிரியர் அருக தேவனைச் 'சிவன்' என்னும் சொல்லால் குறிப்பிடுவது காலப்போக்கில் உண்டான சமயப் பொறையுணர்வை எதிரொலிக்கிறது எனலாம்.

அருங்கலச்செப்பு என்னும் மற்றோர் நீதிநூலும் சமண சமயத்தவரால் இயற்றப்பட்டதாகும். சமண சமயத்தவர்க்கே உரிய ஒழுகலாற்று நெறிமுறைகளைத் தத்துவ அடிப்படையில் இந்நூல் விளக்குகிறது.

## 2. இலக்கணப் பணி

சமண சமயத் துறவிகள் பலர், தமிழ்மொழியின் இயல்புகளை எளிதில் யாவரும் உணரும் பொருட்டு, அம்மொழியின் அமைப்பையும், அழகையும், பண்பையும் பொலிவையும் எடுத்தியம்ப முயன்றுள்ளனர். தங்களுடைய சமயக் கருத்துகளை நாட்டு மக்களிடத்தில் எடுத்துரைப்பதற்குச் செய்யுள்களை அவர்கள் கருவியாகப் பயன்படுத்தினர். அதனால், செய்யுள்களின் இலக்கணத்தை வரைவதில் அவர்கள் பேரீடுபாடு காட்டினர். அதன் விளைவாக, தமிழில் யாப்பிலக்கண நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. மற்றொரு சாரார், மொழியின் தன்மைகளைப் பகுத்துப் பகுத்து, உணர்த்தும் மொழி இலக்கணத்தை இயற்றுவதில் தங்கள் கருத்தைச் செலுத்தியுள்ளனர்.

### தொல்காப்பியம்

தமிழ் இலக்கண, இலக்கியங்களுள் மிகவும் தொன்மையானது தொல்காப்பியமாகும். தமிழின் இயல்புகளை விதி முறை வாயிலாக இது வகுத்துரைக்கிறது; எழுத்து, சொல், பொருள் எனும் மூவகை இலக்கணங்களை எடுத்துரைக்கிறது. இந்நூல் மொத்தம் 1610 நூற்பாக்களைக் கொண்டது.

இந்நூலினை இயற்றியவர் தொல்காப்பியனார் எனும் புலவராவார். அவர் பெயராலேயே, அவர் இயற்றிய நூலும்

வழங்கலாயிற்று, தொல்காப்பியன் எனும் ஆசிரியரின் பெயர் அவர் நூலுக்கு ஆகிவந்தபொழுது, தமிழ் இலக்கண மரபுப்படி தொல்காப்பியம் என்று ஈறு திரிந்தது.

தமிழியலின் வரலாற்றில் தொல்காப்பியனார் தனிச் சிறப்பு வாய்ந்த இடத்தைப் பெற்றுள்ளார். கன்னித் தமிழின் தொன்மை இயல்புகளைப் போற்றிக் காக்கும் 'தொல்பேராசான்' என அவரை அறிஞர் பாராட்டுவர். அவர் தொன்மைத் தமிழிற்கு வகுத்துத் தந்த இலக்கணம், பண்டை உலகின் இலக்கண வரலாற்றில், நூலின் அமைப்பாலும், கருத்துகளை உணர்த்தும் முறையாலும் தனித் தன்மை வாய்ந்த மொழியாராய்ச்சி நூலாகத் திகழ்கிறது. அது காலத்தால் பழமையானது எனினும், உலகின் விளக்க முறை இலக்கண (Descriptive Grammar) நூல்களுள் சிறப்பு மிக்க ஒன்றாகத் திகழ்கிறது.

தொல்காப்பியனாரைச் சமண சமயத்தவராகக் கூறுவது ஒரு மரபாகும். 'ஐந்திரம்' எனும் சமணசமயத் தொடர்பான வடமொழி இலக்கணத்தில் அவர் வல்லவராக விளங்கினார். எனவே, அவர் சமணராவார் என்பது சிலருடைய கருத்தாகும். 'படிமையோன்' எனும் சொல் சமணத் துறவிகளின் ஒழுகலாற்றையே குறிக்கும். தொல்காப்பியனாரைப் 'பல்புகழ் நிறுத்த படிமையோன்' என்று பனம்பாரனார் குறிப்பிட்டுள்ளார். இதனாலும், அவர் சமண முனிவராக இருந்திருக்கவேண்டும் என்பது புலனாகின்றது என்பர். தம் நூலுள், உயிர்களை ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் ஈறாக அவர் பாகுபாடு செய்துள்ளார். இப்பாகுபாட்டைச் சமணர்களே முதன்முதல் செய்துள்ளனர். இம்முறையை அப்படியே தம் நூலுள் அவர் ஏற்றுப் போற்றுகிறார். இவற்றால் இந்நூலாசிரியர் சமணராவார் என்பது அறிஞர் சிலருடைய நம்பிக்கை.

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூ லாகும்

என்னும் நூற்பாவில், தொல்காப்பியனார் 'வினை நீங்கலைக்' குறிப்பிட்டுள்ளார். சமண சமயத்தவரே, தங்கள்

குருநாதரை 'வினையின் நீங்கி விளங்கிய அறிவன்' எனப் போற்றுவர். எனவே, தொல்காப்பியனார் சமணரேயாவார் என அறிவுறுத்துவோரும் உளர்.

மேற்கண்ட செய்திகள் யாவும் சமண சமயத்திற்குரியன என்பதை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், அவருடைய நூலுள் வேற்றுச் சமயக் கொள்கைகளும் இடம் பெற்றுள்ளன என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். நால்வகைப் பூதங்களையே சமணர் உடன்படுவர். ஆனால், தொல்காப்பியர் நிலம், நீர், தீ, காற்று ஆகிய நான்கினோடு வானத்தையும் சேர்த்து ஐம்பெரும் பூதங்களைப் பற்றிப் பேசுகிறார். வைதிக சமயத்துத் தெய்வங்களான மாயோன், சேயோன் முதலியோரை அவர் குறிப்பிடுகிறார். இமையோர், தேவர்,தெய்வம், வானோர் ஆகியோரை, அவர் பல இடங்களில் சுட்டிச் செல்லுகிறார்.'மறையோர் தேயத்து மன்றல்' என வேதியரின் வேதங்களையும் அவர் குறிப்பிடுகிறார். இவை யாவும், அவர் வைதிக சமயச் சார்புடையவர் என்பதைத் தெரிவிக்கின்றன. இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில்,'இந்நூல் செய்தான் வைதிக முனிவன் ஆதலின், சொல் என்பது வேதம் என்று கொள்ளப்படும்' (சொல். 56) என்னும் தொல்காப்பியத்தின் உரையாசிரியருள் ஒருவரான தெய்வச்சிலையாரின் கருத்து அமைந்திருக்கிறது.

இவற்றிலிருந்து, அன்றைய தமிழ்கூறும் நல்லுலகத்தில் வழக்கிலிருந்த சமயக்கொள்கைகளையே அவர் சுட்டிச் செல்லுகிறார் என்னும் உண்மை புலனாகின்றது.

தொல்காப்பியனார் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பு வாழ்ந்தவராகக் கூறுவர்.

## யாப்பருங்கலமும் யாப்பருங்கலக்காரிகையும்

பண்டைத்தமிழ் இலக்கணத்துள், பொருளதிகாரத்தின் ஓர் உட்பிரிவாக அமைந்திருந்தது செய்யுள் இலக்கணமாகும்.

அதைச் சமண முனிவர்கள், தனியே ஆராயத் தொடங்கினர். பத்தாம் நூற்றாண்டு அளவில், தீபங்குடியில் சமண சமயத் துறவிகளின் சங்கம் ஒன்று பேரும் புகழும் பெற்றிலங்கியது. அதனை 'அருங்கலாண்வயம்' என்னும் பெயரால் குறிப்பிடுவர். அச்சங்கத்தைச் சேர்ந்த அமித சாகரர் என்ற சமணப் பெரியார் 'யாப்பருங்கலம்', 'யாப்பருங்கலக்காரிகை' என்னும் விழுமிய இரு யாப்பிலக்கண நூல்களை இயற்றியுள்ளார். யாப்பருங்கலம் முன்னைய யாப்பாராய்ச்சியையெல்லாம் மழுங்கச் செய்து, இன்று வரை தன் கொள்கையையே எல்லோரும் கற்கும் வகையில் சிறந்து விளங்குகிறது.

யாப்பருங்கலத்திற்கு அரியதொரு விருத்தியுரை எழுதப் பெற்றுள்ளது. காரிகைக்குக் குணசாகரர் என்ற சமணப் பெரியார் எளிமையும் தெளிவும் வாய்ந்த நல்லதோர் உரை யினை வரைந்துள்ளார்.

## நேமிநாதமும் வச்சணந்தி மாலையும்

சமண சமயச் சான்றோர்களுள் ஒருவரான 'நேமிநாதர்' என்பவர் பெயரால். குணவீரபண்டிதர் சொற்செறிவும் பொருள் தெளிவும் ஒருங்கே பொருந்தி விளங்குமாறு வெண்பா யாப்பில் நேமிநாதம் என்னும் இதனைப் பாடியுள்ளார். இவர் தொண்டைநாட்டுக் களத்தூரில் பிறந்தவர். திரிபுவன தேவன் என்னும் இரண்டாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1133–1150) காலத்தில் இப்புலவர் வாழ்ந்தவராவர்.

குணவீர பண்டிதரின் ஆசிரியர், வச்சணந்தி என்ற சமணப் பெரியாராவார். தம் குருநாதர் பெயரால், குணவீர பண்டிதர், 'வச்சணந்தி மாலை' என்ற பாட்டியல் நூலை இயற்றியுள்ளார். இந்நூல் வெண்பாயாப்பில் பாடப் பெற்றுள்ளமையால், 'வெண்பாப்பாட்டியல்' என்றும் வழங்கப் பெறுகிறது.

## நன்னூல்

தொல்காப்பியத்திற்குப் பிறகு, தமிழ்மொழியின் இலக்கணத்தைச் சிறந்த முறையில் பகுத்துப் பகுத்துத்

தெளிவுறுத்தும் இலக்கணமே, நன்னூலாகும். இந்நூலுள் எழுத்து, சொல் என்னும் இரண்டு அதிகாரங்கள் உள்ளன, 'தெளிவும் எளிமையும், வரையறையின் நுட்பமும், பாகுபாட்டின் சிறப்பும்' இவ்விலக்கணத்தின் சிறப்பியல்புகளாகும்.

கொங்கு நாட்டில் இருந்த சனகாபுரத்துச், சிறப்புற்றி லங்கிய பவணந்தி என்ற சமணப் பெரியாரே, இந்நூலினை இயற்றியுள்ளார். இவர் சீயகங்கன் என்ற கங்க அரசன் விருப்பத்திற்கிணங்க இந்த இலக்கணத்தை எழுதினார் இவ்வாசிரியர் மூன்றாம் குலோத்துங்க சோழ அரசன் (கி.பி. 1178–1218) காலத்தில் வாழ்ந்தவராகத் தெரிகிறது.

### அகப்பொருள் விளக்கம்

தமிழ் இலக்கணத்துள் சிறப்புமிக்கதாகப் போற்றப் பெறும் அகப்பொருள் இலக்கணத்தை நாற்கவிராச நம்பி என்ற புலவர் இயற்றியுள்ளார். இவர் நால்வகைப் பாக்களையும் பாடுவதில் வல்லவர் என்பதை, இவருக்கு வழங்கி வரும் 'நாற்கவிராசர்' என்னும் அடைமொழி அறிவிக்கிறது. இவ்வகப்பொருள் நூல் அகத்திணை இயல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்னும் ஐந்து பிரிவுகளைக் கொண்டது. இந்நூலாசிரியரே நல்லதோர் உரை ஒன்றினையும் இதற்கு எழுதியுள்ளார். இந்நூல் பன்னிரண்டாம் நூற்றாண்டில் இயற்றப் பெற்றதாகும்.

## 3. இலக்கியப் பணி

சமணசமயச் சான்றோர்களுள் பலர், தன்னிகரற்ற இலக்கணப் புலவர்களாகத் திகழ்ந்ததைக் கண்டோம். இவர்களைப் போன்றே சிலர் படைப்பு இலக்கியங்களை இயற்றி இலக்கியங்களின் கவிஞர்களாகவும் விளங்கினர். நீதி மூலம் அறம் பாடிய அறவோர்களாக மட்டும் அவர்கள் பணிபுரியவில்லை; கற்பனை வளமிக்க கதை பொதி பாட்டுகளாகிய காப்பியங்களைப் படைத்து மகிழ்வதிலும் அவர்கள் சிறப்புற்றிலங்கினர்.

சமண சமயத்தவர்கள் இயற்றிய காப்பியங்களுள் பல இன்றும் பொன்றாப் புகழுடன் விளங்குகின்றன. தமிழில் முதன்முதல் ஒரு கதையைக் கருவாகக் கொண்டு காப்பியம் இயற்றியவர்கள் சமண சமயத்தவரே எனலாம். 'ஐம்பெரும் காப்பியம்: ஐஞ்சிறு காப்பியம்' என்னும் பாகுபாட்டைச் செய்தவர்களும் சமணர்களாகவே இருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

ஐம்பெருங்காப்பியங்களுள் சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, வளையாபதி என்பன சமண சமயத்தவரால் இயற்றப்பட்டவையாகும். பெருங்கதை, சூளாமணி, நீலகேசி யசோதர காவியம் முதலிய சிறுகாப்பியங்களும் அருக தேவரின் அடியார்களால் இயற்றப் பெற்றுள்ளன. இவற்றுடன் 'புராணம்' என்னும் அடையுடன் 'மேருமந்தர புராணம்' என்னும் பெயரில் சமயக் கொள்கைகளுக்கு முதன்மையிடம் கொடுக்கும் காப்பியம் ஒன்றும் சிறப்புற்றிலங்குகிறது. இவையல்லாமல் சிற்றிலக்கியங்கள் சிலவற்றையும் அவர்கள் இயற்றியுள்ளனர்.

## அ. காப்பியங்கள்

### சிலப்பதிகாரம்

பண்டைத் தமிழரின் வாழ்வையும் வரலாற்றையும் படம்பிடித்துக் காட்டுவது சிலப்பதிகாரம், சிந்தைக்கினிய செஞ்சொற் கவிஇன்பம் நல்குவது சிலப்பதிகாரம். இயல் தமிழின் ஏற்றத்தையும், இசைத்தமிழின் இனிமையையும், நாடகத் தமிழின் நயத்தையும் நாடறிய நவில்வது முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம்.

இக்கவின்மிகு காப்பியத்தைப் படைத்துத் தந்த இளங் கோவடிகள், சேரன் செங்குட்டுவனின் இளவலாவார். இளமையிலேயே அவர் 'யான்' என்ற அகப்பற்றையும், 'எனது' என்ற புறப்பற்றையும் துறந்து குணவாயிற் கோட்டத்தில் தவநெறியில் ஈடுபட்டிருந்தார். இதனால், இளங்கோவடிகளைச் சமணர் என்பர் பலர்; சைவர் என்பர் சிலர்.

சிலப்பதிகாரம் முப்பது காதைகளைக் கொண்டது; புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்னும் முப்பெரும் பகுதிகளாகப் பகுக்கப் பெற்று விளங்குவது. இதன் காப்பிய மாந்தர்களுள் பலர் சமணசமயச் சார்புடையவர்களாகவே தோன்றுகின்றனர். "இவர் (இளங்கோ) கூறவரும் கோவலனும் கண்ணகியும் சாகும் வரை சமண வாழ்வு வாழ்கின்றனர். இவர்களுடைய குணங் குறைகளைப் பூதக்கண்ணாடியில் வைத்துப்பார்ப்பதுபோல் பார்க்கவரும் கவுந்தியடிகளும் சமண வாழ்வு வாழ்கின்றார். சாரணர்கள் நீண்டதோர் உபதேசம் செய்வதும் சமணக் கொள்கையைப் பின்பற்றியேயாம். இந்த வகையில் இஃது ஒரு சமணக் காவியம் எனலாம்." "ஊழ்வினை பேராற்றல் வாய்ந்தது; அறநெறியை அடிப்படையாகக் கொண்டதே அரசியல்; ஒருவனுக்கு ஒருத்தி," என்னும் மூன்று செய்திகளை இது உலகிற்கு வழங்குகிறது. சங்ககாலத்தின் இறுதியிலே சிலப்பதிகாரம் தோன்றியதெனக் கூறுவர். இதில் சமயப் பொதுமையும், பத்தியுணர்வும் இணைந்தும் இழைத்தும் காணப்பெறுகின்றன.

## சிந்தாமணி

ஐம்பெரும் காப்பியங்களுள் முதலில் வைத்து வழங்கப் பெறுவது சீவக சிந்தாமணி. இது விருத்தப்பாவினால் இயற்றப்பெற்ற முதல் தமிழ்க் காப்பியமாகும். 'நூலின் தன்மையால் சிந்தாமணி என்னும் பெயர் பெற்றது' என்பர் சங்கர நமச்சிவாயர். எனினும், சீவகன் பிறந்ததும், அவனுடைய தாய் "சிந்தாமணியேகிடத்தியால்" என்று அவனைப் புனைந்துரைத்துப் புலம்புதலால், அவனைப்பற்றிக் கூறும் இந்த நூலுக்கும், அப்பெயரே இடப்பெற்றது எனலாம்.

இலக்கிய நலம் அனைத்தும் நிறைந்தது சிந்தாமணி. இது கற்பனைத் திறனும், சொல்நயமும், பொருள்நயமும் பொருந்திய இலக்கியம். 'மகாபுராணம்' என்னும் வடமொழிநூலின் பிற்பகுதியே சிந்தாமணியாகத் தமிழாக்கம் செய்யப்பெற்றதாகச்

சொல்லுவர். இந்நூல் பதின்மூன்று இலம்பகங்களை (மாலை) யுடையது.

இந்நூலாசிரியர் திருத்தக்கதேவரென்னும் சமணசமயப் பெரியாராவார். இவர் சோழர் குலத்தோன்றல் என்ற ஒரு செவிவழிச் செய்தி வழங்கிவருகின்றது. கடுமையான தவநெறியில் ஈடுபட்டவர்களும், காதலின்ப வாழ்க்கையின் அனுபவங்களை எல்லாம் நுட்பமான உணர்ச்சியுடன் கற்பனைத் திறனால் கூற முடியும் என்பதற்கு இக்காப்பியம் சிறந்ததோர் எடுத்துக்காட்டு எனலாம்.

பத்தாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற யாப்பருங்கல விருத்தியுரையில் சிந்தாமணியின் செய்யுள்கள் எடுத்தாளப் பெற்றுள்ளமையால், இந்நூல் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலே இயற்றப்பட்டு இருக்கலாமெனத்தோன்றுகிறது.

"கற்பனைவளம் கொழிக்கும் சிறப்புமிக்க காதற்காப்பியம் சிந்தாமணி, தமிழ்மொழியின் இலியதும், ஒடிசியுமாக விளங்குவது. இது உலகப் பெருங்காப்பியங்களுள் ஒன்றாகப் போற்றத்தக்க பெருமைமிகு காப்பியம்" என்றுடாக்டர் ஜி.யு.போப் இதனைப் பாராட்டியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

**வளையாபதி**

வளையாபதி அய்ம்பெரும் காப்பியங்களுள் ஒன்று; நூல் முழுவதும் கிடைக்கவில்லை; நூலாசிரியர் பெயரும் தெரியவில்லை. இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், நச்சினார்க்கினியர், தக்கயாகப்பரணி உரையாசிரியர் முதலிய பண்டை உரையாசிரியர்கள் பலரால் இக்காப்பியத்தின் பாடல்கள் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளன. இந்நூலின் செய்யுள்கள் பல புறத்திரட்டில் எடுத்தாளப் பெற்றுள்ளன.

வைசிய புராணம் என்னும் நூலில், 'வளையாபதி' காப்பியத்தின் கதை கூறப்பெற்றுள்ளது. அதிலிருந்து

வளையாபதி என்னும் வணிகனது வரலாறு அறியப்படுகிறது. புறத் திரட்டில் காணப்படும் 66 வளையாபதிப் பாடல்கள் சமண சமயக் கருத்துகளையே திரும்பத் திரும்ப எடுத்துரைக்கின்றன. இளம்பூரணர் உலகம் மூன்று' எனத் தொடங்கும் பாடலை மேற்கோள் காட்டி, இது வளையாபதிச் செய்யுள் எனக் குறிப்பிடுகின்றார். எனவே, அவருடைய காலமான பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்தில் இந்நூல் இயற்றப் பெற்றிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

## பெருங்கதை

சிலப்பதிகாரம், மணிமேகலையைப் போன்று இந்நூலும் அகவற்பாவால் அமைந்தது. இதற்கு 'உதயணன் கதை என்னும் பெயரும் உண்டு. தமிழில் உள்ள பழமையான மொழி பெயர்ப்பு அல்லது தமிழாக்க நூலென இதனைக் கூறலாம். பைசாச மொழியில் குணாட்டியர் என்பவர் படைத்த 'பிரகத்கதா' என்னும் காப்பியத்தினைத் தழுவி துர்விநீதன் வடமொழியில் 'பிருகத்கதை' என்னும் காப்பியத்தை இயற்றியுள்ளான்: அந்நூலின் 'கதைக் கருவினை' அடிப்படையாகக் கொண்டே, தமிழில் 'பெருங்கதை' இயற்றப்பெற்றது என்பர்.

இதனை இயற்றியவர் கொங்குவேளிர் என்னும் சமணராவார். இந்நூல் முழுவதும் இப்பொழுது கிடைக்கவில்லை. உஞ்சைக் காண்டம், இலாவண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம் என்னும் அய்ம்பெரும்காண்டங்களைக் கொண்டது இந்நூல். பொருட் சிறப்பிலும் நடையமைப்பிலும் இந்நூலினைப் 'பெருங் காப்பியம்' என்றே நாம் போற்றலாம். இதனை 'அகலக் கவி' என்று வீரசோழிய உரையாசிரியர் பாராட்டுவது இங்குக் கருதத்தக்கது.

"இந்நூல் திணை வளங் கூறும் பகுதிகளில் வடநாட்டினையே தமிழ் மயமாக்குகின்றது. வாசவதத்தையும் உதயணனும், கம்பனுடைய இராமனும் சீதையும் போலத் தமிழ் முறைப்படி கண்டதும் காதல் கொள்கின்ற – தமிழ்ப் பண்பாடு விளங்கப் புலவர் இக்கதையைப் பாடிச் செல்கின்றார்."

துர்விநீதன் காலத்தை ஒட்டி எழுந்தது இந்நூல். எனவே, கி.பி.ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலோ, கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ இந்நூல் இயற்றப்பட்டிருக்கலாம்.

**சூளாமணி**

இக்காப்பியம் சிந்தாமணியினும் சிறந்ததாகக் கருதப்படுகிறது; விருத்தப்பாவினால் இயற்றப்பெற்றது; கண்ணன் பலராமன் போன்ற சமணசமயத் தலைவர்களான திவிட்டன், விசயன் ஆகியோர் வரலாற்றை விளக்கிக் கூறுகிறது.

இந்நூல் "தன்மையால் சூளாமணி எனப்பெயர் பெற்றது" என்று மயிலை நாதர் கூறுகிறார். திவிட்டனது தந்தை பயாபதியும் "சூளாமணி'' என்றே இந்நூலில் புகழப் பெறுகிறான்."உலகின் முடிக்கொரு சூளாமணி ஆக்கினான்" என்பது இக்காப்பியத்தின் பாடற்பகுதியாகும்.

சூளாமணியின் ஆசிரியருடைய இயற்பெயர் சீவர்த்ததேவர், அவருடைய சிறப்புப் பெயராலேயே நாம் அவரை அறிகிறோம். தம்முடைய நூலில் தோல்வியடையாத' என்னும் பொருளைத் தரும் 'தோலா' என்னும் சொல்லை அவர் பயன்படுத்தியுள்ளார்.

ஆர்க்கும் தோலாதாய் –(1473)

தோலா நாவிற்கு அச்சுதன் – (308)

என்னும் 'தோலா' என்னும் சொல்லைக் கையாண்டுள்ளமையால், இக்காப்பியப் புலவருக்குத் தோலா மொழித்தேவர் என்னும் பெயர் வழங்கி வருகிறது.

இக்காப்பியத்தின் பாயிரத்தில், "சேந்தனென்னும் தூமான் தமிழன்கிழவன்" அவையுள் இந்நூல் அரங்கேற்றப் பெற்றதாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. அரசியல் நீதிகள், தூதுசெல்லும் முறை, குடிகளின் திருவிழா, வேனில் விழா, அமைச்சரவை, சுயம்வரம், தெய்வப்போர், மாயப்போர் முதலியனவெல்லாம்

இக்காப்பியத்துள் இடம்பெற்றுள்ளன. தமிழ் முறைப்படி அய்ந்திணை வளங்கூறி, நாடு நகரச் சிறப்பினைக் கூறினாலும் வடமொழி வர்ணனைகளின் நிழலையும் இந்நூலில் நாம் காணுகின்றோம்.

இயற்கையின் அழகும், மக்கள் உள்ளத்து எழுச்சிகளும், இயற்கைக்கு முரண்படாமல் உள்ளத்தைத் தொடும் வகையில் சொல்லோவியங்களாக இந்நூலுள் தீட்டப் பெற்றுள்ளன. ஆனால், இத்தகைய இனிமை வாய்ந்த செய்யுள்கள் சிலவாகவே உள்ளன. சிந்தாமணியிலும் இத்தகைய ஓட்டமும் இனிமையும் நிறைந்த செய்யுள்கள் இல்லை எனலாம். கருத்தோட்டத்தாலும் இழுமெனும் ஒலிநயத்தாலும் இந்நூல் ஒப்புயர்வற்றதாகும்.

இந்நூலின் பகுதிகள் பத்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட யாப்பருங்கல விருத்தியுரையில் எடுத்தாளப் பெறுவதால், இந்நூல் பத்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகக் கொள்ளப்படுகிறது.

## நீலகேசி

சமண சமயக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் சிறந்ததென்று நிலைநாட்டும் சமயவாதத்தை இந்நூல் அடிப்படையாகக் கொண்டதாகும். நீலகேசி என்ற பெண்ணின் வரலாறு இதனோடு பின்னிப் பிணைந்துள்ளது. இதற்கு 'நீலகேசித் தெருட்டு' என்னும் பெயர் வழங்கி வருகிறது.

இந்நூலாசிரியரின் பெயர் தெரியவில்லை. தாம் ஒரு கனாக் கண்டு, இந்நூலைப் படைத்ததாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். உயிர்ப்பலி இடுவதைத் தடுக்கும் காட்சி ஒன்று இந்நூலுள் சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

நீலகேசியின் பெருமை உண்மையில் அதன் உரையினாலேயே விளங்குகிறது. குண்டலகேசிக்கு மறுப்பாக இக்காப்பியம் இயற்றப்பட்டமை அதன் உரையினால் தெரிவருகிறது. சமய திவாகர வாமன முனிவர் என்பவரே

இதன் உரையாசிரியர். அவர் 'ஜீனகாஞ்சி' எனப் புகழப்பெறும் திருப்பருத்திக்குன்றத்தில் வாழ்ந்தவராவர்.

அத்துவிதத்தைப் பற்றி இந்நூலில் குறிப்பொன்றும் காணப்பெறவில்லை. எனவே, இந்நூல் கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகலாம்.

## மேருமந்தர புராணம்

தமிழில் 'புராணம்' என்னும் பெயரால் வழங்கும் சமண சமய காப்பியம் இது. நீலகேசிக்கு உரையெழுதியுள்ள வாமன முனிவரே மேருமந்தர புராணத்தை இயற்றியுள்ளார். ஊழ் வினையின் சிறப்பையும் ஆற்றலையும் எடுத்தியம்புவதே இந்நூலின் குறிக்கோளாகும்.

இந்நூலாசிரியருக்கு மல்லி சேனாசாரியார் என்ற பெயரும் வழங்கியது. இவர் பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர்.

## யசோதர காவியம்

ஊழ்வினையின் பயனைக் கதையின் வாயிலாக இந்நூல் வற்புறுத்திக் கூறுகிறது. பத்தாம் நூற்றாண்டில், யசோதரன் கதை, நாடு எங்கும் வழங்கி வந்தது. இக்கதையையே வடமொழியில் மூன்று புலவர்கள் இலக்கியங்களாகப் படைத்துள்ளனர். புஷபதந்தர் என்பவர் எழுதிய வடமொழி நூலைத் தழுவியே, வெண்ணாவலுடையார்வேள் என்பவர், இதைத் தமிழில் படைத்துள்ளார்.

'இசை காமவுணர்வைத் தூண்டுவது' என்பது சமண சமயக்கொள்கை, இதனை வற்புறுத்த இந்த ஆசிரியர் இக்கதையை விரித்துரைக்கிறார். இசையில் வல்ல யானைப் பாகன்மேல், ஓர் அரசி காதல் கொள்ளுவதால் அந்நாடு சீர் குலைந்து போவதை இந்நூல் ஆசிரியர் படம்பிடித்துக் காட்டுகிறார். யானைப்பாகன் பாடிய பண் மாளவ பஞ்சமம் என்று குறிப்பிடப்படுகிறது. இப்பண், விசயநகர அரசின் காலத்திலேயே

வழக்கத்திற்கு வந்ததால், இந்நூல் கி.பி. பதினான்காம் நூற்றாண்டை ஒட்டி எழுந்ததாகலாம்.

### ஸ்ரீபுராணம்

உரைநடையில் இயற்றப்பெற்ற சமணசமயக் காப்பியம் ஸ்ரீபுராணமாகும். குணபத்திராச்சாரியர் ஒன்பதாம் நூற்றாண்டில் இயற்றிய 63 சைனப் பெரியார்களின் வரலாற்றைக் கூறும் உத்தரபுராணத்தைப் பின்பற்றி இந்நூல் எழுதப்பெற்றது. 'ஸ்ரீ' என்பது தமிழில் 'திரு' என்பதுபோலச் சிறப்பினைக் குறிக்கும் அடையாகும்.

ஸ்ரீபுராணம் மணிப்பிரவாள நடையில் இயற்றப் பெற்றுள்ளதைக் காணுகின்றோம்.

## (ஆ) சிற்றிலக்கியங்கள்

தமிழில் பரணி, அந்தாதி, உலா, பிள்ளைத்தமிழ் முதலிய சிற்றிலக்கிய வகைகள் சிறப்புமிக்கனவாம். இத்துறைகளிலும் சமணப் பெரியார்கள் சில இலக்கியங்களைப் படைத்துள்ளனர்.

### கலிங்கத்துப்பரணி

இந்நூல் 'பரணி' இலக்கிய வகையுள் சீரும் சிறப்பும் பெற்றது. "போரில் ஆயிரம் யானையை வென்ற வீரனைச் சிறப்பித்துப் பாடுவதே பரணி." குலோத்துங்க சோழனுடைய படைத் தலைவன் கருணாகரத் தொண்டைமானாவான். அவன் கலிங்கப் போரில் பெற்ற வெற்றியைப் போற்றிப்பாடுவதே கலிங்கத்துப் பரணியாகும். இந்நூல் சோழருடைய வரலாற்றை அறிவதற்குப் பெரிதும் பயன்படுகிறது; கற்பனை வளமும் கவிதைச் சிறப்பும் வாய்ந்தது. பொருளால் மட்டுமே அன்றித் தாழிசைகளை, இப்பொருளுக்கேற்ற சந்தத்தில் போர்நடை போலவும், போர் ஆரவாரம் போலவும், பொருளை ஒலியே வெளியிடுவது போலவும் வரப்பாடி இந்நூலாசிரியர் பெருவெற்றிப் பெற்றுள்ளார்.

இச்சிறப்புற்குரிய நூலைத் தீபங்குடி செயங்கொண்டார் இயற்றியுள்ளார். தீபங்குடியில் சமண சமயத் துறவிகள் பலர் சிறப்புற்றிலங்கினர். அங்கிருந்த சமணசமயச் சங்கத்தைச் சேர்ந்தவர் செயங்கொண்டார். முதலாம் குலோத்துங்க சோழனுடைய காலத்தில் (கி. பி. 1070–1120) இந்நூலாசிரியர் வாழ்ந்தவராவர். எனவே, இவருடைய காலம் கி.பி. பதினோராம் நூற்றாண்டாகும்.

**அப்பாண்டைநாதர் உலா**

தென்னார்க்காடு மாவட்டத்தில் திருநறுங்கொண்டை என்னும் சமணத்தலம் சிறப்புற்று விளங்குகிறது. இங்குள்ள பாறைகளில் சமண சமயத் தீர்த்தங்கரர் சிலருடைய திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பார்சுவநாதரின் திருவுருவமும் சந்திரநாதரின் திருவுருவறும் நேர்த்திமிக்கனவாகும். பார்சுவநாதரின் திருவுருவத்தைச் சுற்றிலும், பேரரசன் இராசராசன் காலத்தில் ஒரு கோயில் கட்டப்பட்டுள்ளது. அப்பாண்டைநாதர் என்பது பார்சுவநாதருக்கு வழங்கும் மற்றொரு பெயராகும். இத்திருக்கோயிலை 'அப்பாண்டைநாதர் கோயில்' என வழங்குவது மரபு.

இந்த அப்பாண்டைநாதர் மீது பாடப்பெற்ற சிற்றிலக்கியமே, அப்பாண்டைநாதர் உலா என்பதாகும். தலைவன் உலாவருவதைக் கண்டு எழுபருவ மகளிர் காதல் கொள்ளுவதாகக் கற்பித்துப் பாடுவதே உலா இலக்கியமாகும் தெய்வத் தலைவரின்மீதும், மானிடத் தலைவரின் மீதும் உலா இலக்கியம் பாடப்பெறும். மண்ணகத்தில் விண்ணக வாழ்வை எய்திய சமயத்தலைவரான பார்சுவநாதரைத் தலைவராகக் கொண்டது அப்பாண்டை நாதர் உலா.

இவ்வுலாவின் நோக்கிலும் போக்கிலும் புதுமையைக் காணுகின்றோம். "எழுபருவ மகளிர் உலாத் தலைவர் மீது காதல்கொண்டு தம் வயமிழந்து விரகதாப முற்றுப் பேசுவதாக உள்ள நிலைமையே, பிற நூல்களிற் காணப்

பெறும். ஆனால், இங்கே அப்பாண்டை நாதரைத் தரிசித்த பருவமங்கையர் அவருடைய தெய்வீக ஒளியில் ஈடுபட்டு அவருடைய பெருமையைப் பலவாறு போற்றித் துதிக்க முற்பட்டு விடுகிறார்கள். எனவே, இது பக்தி இலக்கியமாகப் பரிணமித்துள்ளது எனலாம். உலா இலக்கிய மரபில் இஃது ஒரு புதுமை விளைத்துள்ள இலக்கியமாகும்" என்பது இங்கு நினைவுகூர்தற்கு உரியதாகும்.

இந்நூல் கலிவெண்பாவினால் இயற்றப்பட்டது; அறு நூற்றுக்கு மேற்பட்ட கண்ணிகளைக்கொண்டுள்ளது; சொற் செட்டும் பொருளாழமும் உடையது. சமணசமயச்சார்பான சிற்சில சொற்களும் வழக்கங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

அப்பாண்டைநாதர் உலாவினை இயற்றிய ஆசிரியர் அனந்த விசயர் என்பவராவர்; முறுகிய சமணசமயப் பற்றாளர். தம் நூலில், சூடாமணி நிகண்டு இயற்றிய மண்டக புருடர் கொண்டை மலையைப் போற்றிப் பாடியுள்ள செய்தியை இவர் குறிப்பிடுகிறார். எனவே, பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த மண்டல புருடரின் காலத்தையொட்டியோ, அடுத்த நூற்றாண்டிலோ இவர் வாழ்ந்தவராதல் வேண்டும்.

### ஆதிநாதர் பிள்ளைத்தமிழ்

அருகதேவரையே ஆதிநாதர் என்பர். அரசனையோ கடவுளையோ குழந்தையாகப் பாவித்துப் பாடும் சிற்றிலக்கியமே பிள்ளைத்தமிழாகும். சமணசமயத்தின் முதற்பெருந் தலைவரான அருகக் கடவுளைப் பச்சிளங் குழந்தையாகக் கற்பனை செய்து, அவருடைய அருமை பெருமைகளைப் புலப்படுத்தும் வகையில் இந்நூல் இயற்றப்பட்டது; ஆதி நாதர் பிள்ளைத்தமிழ் அருகதேவரின் புகழ் மாலையாக அமைந்துள்ளது. சொற்சுவையும் பொருட்சுவையும் வாய்ந்த இந்நூலின் பாக்களில் பக்தி மணமும் கமழ்கிறது.

### திருக்கலம்பகம்

இந்நூல் உதீசித்தேவர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த சமண சமயத் துறவியாவார்; பௌத்த மதத்தை எதிர்த்துப் போராடியவர் இவர் எனக் கூறுவர். இவர் பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர். இந்நூல் சென்னை மயிலாப்பூரில் கோயில் கொண்டிருந்த நேமிநாத தீர்த்தங்கரரின் அருளற வாழ்வினை நயம்பட எடுத்துரைக்கின்றது. அவருடைய அருள்மொழிகளைத் தெளிவுறுத்துகின்றது.

### கொங்குமண்டல சதகம்

கொங்குநாட்டின் பெரியார்களுடைய வரலாற்றை இந்நூல் விளக்கியுரைக்கிறது. இதனைக் கார்மேகக் கவிஞன் என்னும் சமணசமயப் புலவர் இயற்றியுள்ளார். கொங்கு நாட்டில் உள்ள விசயமங்கலத்தில் இவர் பிறந்ததாகத் தெரிகிறது. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் இப்புலவர் வாழ்ந்தவராவர்.

இக்கொங்குமண்டல சதகம், கொங்கு நாட்டின் பல்வேறு பிரிவுகளையும், புலவர்கள், அரசர்கள், குறுநில மன்னர், படைத்தலைவர் முதலியோரின் வரலாறுகளையும் விரித்துரைக்கிறது; மற்றும், சமணசமயத் தலங்களைப் பற்றிய பல செய்திகளையும் எடுத்துரைக்கிறது.

இவையல்லாமல் திருமேற்றிசையந்தாதி, தரும தேவி யத்தாதி, நேமிநாதசதகம் திருநாதர் குன்றத்துப் பதிகம், மயிலாப்பூர்ப் பதிகம், மயிலாப்பூர் நேமிநாத சுவாமி பதிகம் முதலிய சிற்றிலக்கியங்களும் சமண சமயப் புலவர்களால் இயற்றப்பட்டனவாகும்.

## 4. போற்றிப் பாடல்கள்

தமிழ்மொழிக்கே ஒரு தனிப்பெருஞ்சிறப்பு உண்டு. இறைவனைப் பற்றிய போற்றிப் பாடல்கள் (தோத்திரப்

பாடல்கள்) தமிழிலே தனிச்சிறப்பு வாய்ந்தனவாக உள்ளன. அவை உலக இலக்கியத்துள் முதன்மையிடம் பெறத்தக்கன என்பர் அறிஞர். இந்திய மக்களின் சமயங்கள் அனைத்திற்கும் உரிய வழிபாட்டுப் பாடல்கள் தமிழில் உள்ளன. இவ்வகையில், சமணசமயத்தவரின் போற்றிப் பாடல்கள் தமிழ் இலக்கியத்தை வளமுறச் செய்துள்ளன.

## தோத்திரத் திரட்டு

அன்றாட வழிபாட்டின்பொழுது அருகதேவரையும், அவருடைய அடியார்களையும் போற்றி வணங்குவதற்குப் பயன்படுத்தப்படும் பக்திப்பாடல்களின் திரட்டாக இந்நூல் விளங்குகிறது. தேவாரப் பாடல்களைப் போன்று இசையமைதியும், உள்ளத்தை உருக்கும் இயல்பும் வாய்ந்தவை இப்பாடல்கள்.

நூலினைத் தொகுத்த ஆசிரியர் யாரென்பது தெரியவில்லை. இந்நூல் இன்னும் அச்சாகவில்லை.

## திருநூற்றந்தாதி

அவிரோதிநாதர் அல்லது அவிரோதி ஆழ்வார் என்னும் சான்றோர் நேமிநாதரின்மீது பாடியுள்ள அந்தாதி நூல் இது. இவ்வாசிரியர் பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர். சென்னை மயிலாப்பூரில் கோயில்கொண்டு இருந்த நேமிநாத தீர்த்தங்கரரைப் போற்றிப் பாடியுள்ள நூலே இத்திருநூற்றந்தாதியாகும்.

## திருப்பாமாலை

திருப்பாமாலை அருகதேவரைப்பற்றிய போற்றிப் பாடல்களைக் கொண்டதாகும். பல்வேறு பாவினங்களில் இயற்றப்பட்ட பாடல்களை நாம் இந்நூலில் காணுகின்றோம். உள்ளத்தை நெகிழச் செய்யும் உருக்கமான பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. நானூறு ஆண்டுகட்கு முன்னர் இந்நூல் இயற்றப்பட்டதாகத் தெரிகிறது.

## திருப்புகழ்

முருகப் பெருமான்மீது அருணகிரிநாதர் பாடியுள்ள பாடல்களின் தொகுதியைச் சைவ சமயத்தினர் 'திருப்புகழ் எனப் போற்றி வருகின்றனர். இதைப்போன்று, ரிஷப தேவரின் மெய்ப்புகழையும், மகாவீரரின் கீர்த்தியையும் எளிமையும், இனிமையும் நிறைந்த நடையில் சந்த இன்பம் தோன்றச் சமண சமயச் சான்றோர் ஒருவரால் இத்திருப்புகழ் இயற்றப்பெற்றுள்ளது. இந்நூல் இன்னும் அச்சாகவில்லை.

## திருவெம்பாவை

மாணிக்கவாசகப் பெருமான் இயற்றியருளிய திருவெம் பாவையைத் தமிழுலகம் நன்கறியும். இதைப்போன்று, சமண சமயத்தவரும் திருவெம்பாவை இயற்றியுள்ளனர். இந்நூல் இருபது பாடல்களைக் கொண்டது. முதல் பத்துப் பாடல்களும் துயில் எழுப்பும் பாடல்களாக அமைந்துள்ளன. சமணத் திருவெம்பாவைப் பாடலின் நிறைவுப்பாடலும் திருவெம்பாவையின் இறுதிப்பாடலைப் போன்றே அமைந் திருக்கிறது. இப்பாவை நூலும், பாவை நோன்பை அடிப் படையாகக் கொண்டே இயற்றப்பட்டுள்ளது. 'விடியற் காலையில் துயில் எழுந்து குளத்தில் நீராடி, வழிபடு கடவுளை வணங்குவோம் வாருங்கள்!' எனப் பாவை நோன்பு நோற்கும் பெண்களை அழைப்பது போன்று இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

இந்நூலினை அவிரோதி நாதர் என்னும் சமணசமயச் சான்றோர் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய 'திருநூற்றந்தாதி' எனும் நூலைப் பற்றி முன்னர்க் கண்டோம். இவ்வாசிரியரின் திருவெம்பாவை, "பயின்றுவரும் சொல்லாலும், பொருளாலும், தொடையாலும், நடையாலும் ஓதற்கினிய தாய் விழுமிய பயத்ததாய் விளங்குகின்றது." இப்பாவைப் பாடல் ஆண்டாளின் திருப்பாவையோடும், மாணிக்கவாசகரின் திருவெம்பாவையோடும் சொல்லாலும் பொருளாலும் மிகுந்த ஒப்புமையுடையதாகக் காணப்படுகின்றது.

வானே நிலனே பிறவே யறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்

என்னும் திருவெம்பாவையை (6) அடியொற்றி

வானே நிலனே வளியே யெறி புனலே
தானே யுணரும் தலையளித்தாட் கொண்டருளும்

என்னும் அடிகள் (5–4–5) அமைந்துள்ளதைக் குறிப்பிடலாம்.

பாவைப்பாடல்களில்மழையைவேண்டிப்பாடுவதுவழக்கம். சமணசமயத் திருவெம்பாவையும் இதற்கு விதி விலக்கன்று.

திறமுற்ற மாமுனிவன் சீரருளால் எங்கும்
நிறையப் பொழியும் மழையேலோ ரெம்பாவாய் (16)

என மழையைப் போற்றிப் பாடுந்திறம் கருதத்தக்கது.

பாவைப் பாடலின் நிறைவுப் பாடல் அருகதேவரின் திருவடிகளை வாழ்த்திப் பாடுவதாக அமைந்துள்ளது.

வாழி யருகன் மலர்த்தா மரையிரண்டும்
வாழியா மாதில மலரிணைகள் தானாகும்
வாழியா மந்த மலர்ச்சே வடியிணைகள்
வாழியெல் லாவுயிர்க்கும் வண்ண மலரடிகள்
வாழியெல் லாவுயிர்க்கும் வாழ்வா மலர்த்தாள்கள்
வாழிய வானோர்கள் வணங்குமலர்ப் பாதங்கள்
வாழியெல்லாம் ஆட்கொண் டருளுகின்ற புண்டரிகம்
வாழி மலர்க்கழல்நீ ராடேலோ ரெம்பாவாய்

இதையடுத்துள்ள தனியன் ஒன்றில்,

"இருளார்ந்த பூங்குழலீர் இசையீர் அவிரோதி' எனும் குறிப்பு காணப்படுகின்றது. இதனால், இந்நூலாசிரியர் அவிரோதிநாதர் என்பது புலனாகின்றது.

## 5. உரைவிளக்கப் பணி

### இளம்பூரணர்

சமணசமயச் சான்றோர்களுள் பலர் தமிழ் நூல்களுக்கு உரை எழுதியுள்ளனர். தொல்காப்பியத்திற்கு முதன்முதல்

செறிவு நிறைந்த உரையினை வரைந்தவர் இளம்பூரணர் என்ற பெரியவராவார். 'உரையாசிரியர்' எனப் போற்றப் பெறும் சிறப்பினைப் பெற்றவர் இவரேயாவர். இவருடைய தொல்காப்பிய உரையின் சிறப்புப் பாயிரம்,இவர் மணக்குடியைச் சேர்ந்தவர் என்றும், இளம்பூதியின் மகனார் என்றும் தெரிவிக்கிறது. இவரைத் துறவியென மயிலை நாதர் சுட்டுகின்றார்.

எழுத்தெனப்படுப அகர முதல் னகர இறுவாய் (தொல்.1) என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு, இவர் "தொல்காப்பியர் னகரத்தை ஈற்றில் அமைத்தமைக்குக் காரணம், வீடு பேற்றிற்குரிய ஆண்பால் ஈறாகும் சிறப்புடைமையே" என்று காட்டுகிறார். பெண்களுக்கு வீடுபேறு இல்லை என்ற திகம்பர சமணக் கொள்கையினராக இவர் இருந்திருக்க வேண்டும் என்பது இதனால் விளங்குகிறது. 'யாப்பருங்கலத்தின் கருத்துகளையும் கொள்கைகளையும் தம்முடைய உரையில் இளம்பூரணர் சுட்டிச் செல்லுகிறார். இதனால், இவர் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராவர்.

### அடியார்க்கு நல்லார்

சிலப்பதிகாரத்திற்குச் சிறந்ததோர் அகல உரை எழுதிய பெரியார் அடியார்க்கு நல்லாராவார். பண்டைத் தமிழருடைய இசைக்கலையின் ஏற்றத்தையும் நாடகக்கலையின் நலங்களையும் இன்று நாம் அறிவதற்கு உறுதுணையாக இருப்பது அடியார்க்கு நல்லாரின் அரிய உரைவிளக்கமே யாகும். 'இளங்கோவடிகள் சமண சமயத் துறவியாவார்' என்னும் கருத்தினை அடியார்க்கு நல்லாரே முதன்முதலாக வெளியிட்டுள்ளார். இவரைப் போற்றி ஆதரித்தவர் பொப்பண காங்கேயர் என்னும் சமணக் குறுநிலத்தலைவராவார். அவர் போசள அரசனான விஷ்ணுவர்த்தனரின் அமைச்சரும் படைத்தலைவருமாக விளங்கியவராவார். அவ்வரசன் கி பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் என்பதனால், அடியார்க்கு நல்லாரின் காலமும் அந்நூற்றாண்டேயாகும்.

**யாப்பருங்கல விருத்தியுரைகாரர்**

யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரின் பெயர் தெரிய வில்லை. அவ்வுரையாசிரியரே யாப்பருங்கலக்காரிகைக்கும் உரையெழுதியதாக ஒரு சிலர் கருதுகின்றனர். காரிகையின் உரையாசிரியர் குணசாகரர் என்பவராவர். 'சொல்லிற் சுருங்கி, பொருள் பெருகித் தொன்ஞாணம் எல்லாம்' ஒருங்கே விளக்கும் திறனுடையது இவ்வுரை. பல்வேறுபட்ட யாப்பிலக்கணக் கொள்கைகளைப் பகுத்துப் பகுத்து ஆராய்ந்து, அவற்றின் சிறப்பியல்புகளைச் சுட்டிக்காட்டும் முறை இவ்வுரையின் சிறப்பு இயல்பாகும்.

**மயிலைநாதர்**

இவர் முதன்முதலில் நன்னூலுக்கு உரைவிளக்கம் தந்தவராவர். நூலாசிரியரின் உள்ளக் கருத்தை நுட்பமாக ஆராய்ந்தறிந்து, காலத்திற்கேற்ற புதிய விளக்கங்களைக் கொடுத்த பெருமை மயிலைநாதருக்கு உரியது.

மயிலைநாதர் சமணசமயத்தைச் சேர்ந்தவர். மயிலைநாதர் என்னும் பெயர், இப்போது சென்னை நகரில் மயிலாப்பூர் என வழங்கும் மயிலையில் முன்னர் இருந்த சமணசமய மடத்தில் வழிபடப் பெற்ற இருபத்திரண்டாம் தீர்த்தங்கரரான நேமிநா தருடைய பெயராகும். அவருடைய திருப்பெயரைப் பெற்றவர் இவ்வுரையாசிரியர் என்பர் அறிஞர். தம்முடைய உரையின் இடையிடையே சமண சமயக் கருத்துகள் பலவற்றை இவர் சுட்டிச் செல்லுகின்றார்.

மயிலைநாதர் உரையினை, 'இலக்கணக் களஞ்சியம் எனலாம். இவ்வுரையால் பற்பல புதிய செய்திகள் வெளிவந்துள்ளன. 'நன்னூல் ஐந்திலக்கணம் கூறும் ஐந்து அதிகாரங்களைக் கொண்ட பெருநூல்' என்பது இவ்வுரையால் (267) தெரியவரும் செய்தியாகும். நன்னூலின் பொதுப் பாயிரம், பவணந்தி முனிவரால் இயற்றப்பெறவில்லை. என்பது மயிலைநாதர் உரையினால் (ந.51,52) புலனாகின்றது.

இவருடைய காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகும்.

### சமய திவாகர வாமன முனிவர்

நீலகேசி என்னும் சிறுகாப்பியத்திற்கு உரை இயற்றியவர் இம்முனிவர் என்பதை நாம் முன்னர்க் கண்டோம். அவ்வுரை 'நீலகேசி விருத்தி சமய திவாகரம்' என்னும் பெயரால் போற்றப்பட்டு வருகிறது. இவர் 'மேருமந்தர புராணம்' என்னும் காப்பியத்தையும் இயற்றியுள்ளார். இவருடைய உரை, மணிப்பிரவான நடையில் அமைந்ததாகும். மறைந்து போன தமிழ்நூல்கள் சிலவற்றை இவருடைய உரையினால் நாம் அறிய முடிகிறது.

### காளிங்கர்

திருக்குறளுக்குப் பண்டைக்காலத்தில் எழுதப்பெற்ற பத்து உரைகளுள் காளிங்கருடையது ஒன்று. திருவள்ளுவ மாலையில் கூறப்பெறும் இயல் பகுப்பினை அப்படியே இவர் பின்பற்றியுள்ளார். இம்முறையை மணக்குடவர், பரிப்பெருமாள், பரிமேலழகர் முதலியோர் மாற்றியமைத்துள்ளனர்.

எனவே, காளிங்கர் காலத்தால் முற்பட்டவராதல் வேண்டும்.

இவர் சமண சமயத்தைச் சேர்ந்தவராவர். 'வகுத்தான் வகுத்த வகையல்லால்' (கு. 377) என்னும் குறட்பாவில் வரும் 'வகுத்தான்' என்னும் சொல்லை, இவர் 'வகுத்தார்' எனக்கொண்டு, 'அதனால் முன்னஞ் செய்தார் செய்த வினைவகையால் துய்த்தல்' என்று தெய்வத்துக்குப் பதிலாக 'வினையைச் செய்தார்' என்று பொருள் கூறியுள்ளமை இவர் சமண சமயத்தவர் என்பதற்குப் போதிய சான்றாகும்.

காளிங்கர் இயன்றவரை தூய தமிழிலேயே உரைவிளக்கம் செய்துள்ளார். இவருடைய நடை செறிவு மிக்கது; சுருங்கச் சொல்லி விளங்கவைப்பது. இலக்கண மரபுகளைப் போற்றிப்

புதுவிளக்கம் கூறும் இலக்கிய மணம் கமழும் இனிய நடை என்பதும் குறிப்பிடத்தக்கது. திருவள்ளுவரைக் கடவுளாகவே (முனிவராகவே) இவர் போற்றியுள்ளார். அறத்துப்பாலின் இறுதியில், "வள்ளுவக் கடவுள் வதித்தமைந்துரைத்த எள்ளறு சிறப்பின் அறத்துப்பால் முற்றும்" எனக் காளிங்கர் குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

**மணக்குடவர்**

திருக்குறளுக்கு இவர் வரைந்துள்ள உரையினால் பொன்றாப் புகழ் பெற்று விளங்குகின்றார். வடமொழிக் கருத்துகளைத் தம்முரையில் புகுத்தி, மூலநூல் ஆசிரியரின் கருத்து இதுதான் என்று இவர் வற்புறுத்தவில்லை. மணக்குடி என்ற ஊரில் பிறந்தவர் என்பதைத் தவிர, இவரைப் பற்றி நாம் வேறொன்றும் அறிய இயலவில்லை. முப்பதாண்டுகளுக்கு முன்பு 'மணக்குடவரும் இளம்பூரணரும் ஒருவரே' என்ற கருத்து அறிஞரிடையே இருந்து வந்தது.

இவர் சமணசமயத்தவர் என்பது,இவருடைய உரைப் பகுதிகள் சிலவற்றால் தெரியவருகிறது. 'ஆதிபகவன்' என் பதற்கு 'ஆதியாகிய பகவன்' எனவும்' 'மலர்மிசை யேகினான்' என்பதற்கு. மலரின்மேல் நடந்தான்' எனவும், தாமரைக் கண்ணான் உலகு' என்பதற்கு 'இந்திரனது சுவர்க்கம்' எனவும், 'தன்னுயிர் தானறப் பெற்றானை' என்பதற்கு 'உயிர் என்றது சலிப்பற்ற அறிவை; தான் என்றது சீவனாகி நிற்கின்ற நிலைமையை; தானறு தலாவது அகங்காரம் அறுதல்' எனவும் உரைவிளக்கம் தந்துள்ளமையால் அறியலாம்.

தெளிவும், எளிமையும், தமிழ் மரபு பிறழாத தன்மையும் வாய்ந்தது மணக்குடவரின் உரை. இவரைப் பெரிதும் பின்பற்றியே இக்காலத்திய புத்துரைகள் எழுதப்படுகின்றன.

## 6. நிகண்டுப் பணி

ஒரு மொழியில் வழங்கும் சொற்களின் பல்வேறு பொருள்களைச் செய்யுள் நடையில் தெரிவிப்பது நிகண்டுகளாகும். ஐரோப்பியரின் தொடர்பால் 'டிக்க்ஷனரி' (Dictionary) எனும் 'அகராதி' முறையினை நம் நாட்டவர் பின்பற்றினர் . இதற்கு முன்னர் நிகண்டுகளே வழக்கில் இருந்து வந்தன.

### சூடாமணி நிகண்டு

சூடாமணி நிகண்டினை இயற்றிய மண்டலபுருடர் என்னும் சைன ஆசிரியரே முதன்முதலாக 'நிகண்டு' என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

'மன்னிய நிகண்டு சூடா மணியென'

இவருக்கு முன்னர் 'உரிச்சொல்' என்று நிகண்டுகளைச் சுட்டுவது மரபு.

தமிழிலுள்ள நிகண்டுகளுள் சூடாமணி நிகண்டு பெரும் புகழ் வாய்ந்தது; பெருவழக்காக இருந்துவருவது. இதனை இயற்றியவர் மண்டலபுருடர் என்பதை மேலே நாம் கண்டோம். இவர் தொண்டை நாட்டிலுள்ள பெருமண்டூரில் பிறந்தவராவர்.

இவர் சமண சமயத்தவராவர்; குணபத்திரர் என்ற சமணப் பெரியாரின் சீடராவர். அருகதேவரை வாழ்த்தித் தம் நூலினை இவர் தொடங்கியுள்ளார். இந்நிகண்டின் ஆசிரியர் பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராவர்.

இந்நூல், 'தேவப் பெயர்த்தொகுதி' முதல் 'பல்பெயர்க் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி' ஈறாகப் பன்னிரண்டு பகுதிகளைக் கொண்டது. இவற்றுள் பதினோராம் தொகுதி அறிஞர் பெருமக்களால் மிகச் சிறந்ததாகப் போற்றப்படுகிறது. இதற்கு 'ஒரு சொல் பல்பொருள் பெயர்த் தொகுதி' என்பது பெயர். அதாவது ஒரு சொல்லிற்குரிய பல பொருள்களையும்

இப்பகுதி எடுத்துரைக்கிறது. மேற்கு நாட்டு அகராதி முறையினைப் போன்று இப்பகுதி அமைந்துள்ளதைக் காணலாம். அகர வரிசையில் (அ முதல் ன ஈறாக) சொற்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிகண்டு ஏற்றம் பெற்றது எனலாம். இதனால்

சமண சமயத்தவரால் இயற்றப்பட்ட நிகண்டுகள் வேறு சில இன்னும் அச்சிடப் பெறவில்லை.

## 7. தருக்க நூல்கள்

சமணசமயத்தவர் நெடுங்காலமாக சமயப்பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர். தம் சமயக் கொள்கைகளே சிறந்தவை என்பதை நிலை நாட்டப் பலவகை வாதப்போர்களில் தேர்ச்சிபெற்று அவர்கள் விளங்கினர். அறிவு ஆராய்ச்சித் துறையில் சொற்போர் மூலம் பிறரை வெற்றிபெறுவதற்கு அளவைநூல் அறிவு இன்றியமையாத தேவையாகும். இத்துறையில் அவர்கள் ஒப்பற்று விளங்கியதைத் திருநாவுக்கரசு நாயனார் குறிப்பிட்டுள்ளதைத் தேவாரத்தில் காணலாம். இத்துறையில் பிங்கலகேசி, அஞ்சனகேசி, தத்துவ தரிசனம் என்னும் நூல்கள் காப்பியமாகப் போற்றப்படும். நீலகேசிக்கு அடுத்த நிலையில் இவை சிறப்புடையனவாகப் பாராட்டப் படுகின்றன.

## 8. இசை நூல்கள்

பெருங்குருகு, பெருநாரை, செயிற்றியம், சயந்தம், இசைத்தமிழ்ச் செய்யுட் கோவை, இசை நுணுக்கம், சிற்றிசை, பேரிசை என்பன மறைந்துபோன இசைத்தமிழ் நூல்களாகும். இவை பண்டைத் தமிழிசையின் இலக்கண நூல்களாக அடியார்க்கு நல்லார் முதலிய உரையாசிரியர்களால் குறிப்பிடப்படுகின்றன. இவையாவும் சமண சமயத்தவரால் இயற்றப்பெற்றனவாக அறிஞர் சிலர் கூறுவர்.'இசையும்,கூத்தும் காம உணர்வை ஊட்டுவன' என்னும் கொள்கையோடு வாழ்ந்த

சமணர்கள், இத்தகைய நூல்களை இயற்றியிருப்பார்களா என்னும் ஐயம் நமக்கு எழுகிறது.

## 9. நாடக நூல்கள்

முத்தமிழுள் நாடகத் தமிழ் தனிச்சிறப்பு வாய்ந்தது இன்றைக்குப், பழைய நாடகத் தமிழ் நூல்கள் ஒன்றுகூட நமக்குக் கிடைக்கவில்லை எனலாம். (கூத்தநூல் என ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது) ஆயினும், நாடகத் தமிழ் நூல்கள் பல அறுநூறு ஆண்டுகட்கு முன்புவரை வழக்கில் இருந்தன. அவற்றுள் பரதசேனாபதியம், குண நூல், கூத்த நூல், சயந்தம் என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றைச் சமணசமயத்தவர் இயற்றியதாகக் கூறுவர். எனினும், இசைத்தமிழ் நூல்கள்பற்றி எழக்கூடிய ஐயமே, இவற்றைப் பற்றியும் தோன்றுவது இயற்கை.

## 10. கணித நூல்கள்

அறிவியல் துறையின் பேரரசியாகக் கணிதத்தைப் போற்றுவது மரபு. தமிழ் மக்கள் கணிதத்தை நன்கு போற்றி வளர்த்தனர். சிறப்பாக ஒன்றுக்கும் கீழ்ப்பட்ட பின்னக் கணக்குத்துறையில் தமிழர் ஒப்பாருமிக்காருமின்றி விளங்கினர். இக்கலையினைக் கீழ்வாய் இலக்கம் எனப் பொதுவாகக் குறிப்பிடுவது வழக்கம்.

இத்துறையிலும் நுட்பமான அறிவாராச்சியில் வல்லுநர்களாக விளங்கிய சமண சமயத்தவர் சில நூல்களை இயற்றியுள்ளனர். அவற்றுள் கெட்டி எண்சுவடி, நல்லிக்க வாய்பாடு, சிறுகுழி வாய்பாடு, கீழ்வாய் இலக்கம், பெருக்கல் வாய்பாடு, அவினந்த மாலை, கணக்கதிகாரம் என்பன இங்குக் குறிப்பிடத்தக்கன.

### கணக்கதிகாரம்

கணக்கதிகாரம் என்னும் நூலைச் சமண சமயத்தைச் சேர்ந்தஅறிஞர்ஒருவர்இயற்றியதாகக்கூறுவர்.ஆனால்,இன்று

அச்சில் உள்ள கணக்கதிகாரம் என்னும் நூலை கொறுக்கையூர் காரிநாயனார் என்பவர் படைத்துள்ளார். அவர் விநாயகர், முருகர், திருமால், கலைமகள் என்னும் வைதிக தெய்வங்களுக்குக் காப்புச் செய்யுள் இயற்றியுள்ளதைக் காணுகின்றோம். இதனால்,சமண சமயத்தவர் இயற்றிய கணக்கதிகாரம் எனும் நூல் வேறொன்றாக இருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது.

## 11. சோதிட நூல்கள்

கணக்கியலோடு நெருங்கிய தொடர்புடையது வான நூலாகும். வானநூலினை அடிப்படையாகக் கொண்டு எழுந்தனவே சோதிட நூல்களாகும். வானத்தில் விளங்கும் நாள் (நட்சத்திரம்) கோள்களின் (கிரகங்களின்) இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சோதிடம் கணிக்கப்படுகிறது. இத்துறையினும்சமணப்பெரியோர்கள் ஈடுபட்டுள்ளனர்.அதன் விளைவாகத் தமிழில் உள்ளமுடையான், ஜினேந்திர மாலை என்னும் நூல்கள் சமண சமயத்தவரால் இயற்றப்பட்டுள்ளன.

## 12. ஓவிய நூல்கள்

ஓவியக் கலைத்துறையிலும் சமணர்கள் தொண்டாற்றி யுள்ளனர். ஓவிய நூல், நிகண்டனார் இயற்றிய கலைக் கோட்டுத் தண்டம் என்பனவற்றைச் சமண சமயத்தவர் இயற்றிய ஓவிய நூல்களாகக் கூறுவர். 'நிகண்டனார் இயற்றிய' என்பதைத் தவறாகப் புரிந்து கொண்டசிலர், கலைக் கோட்டுத்தண்டம் என்பது 'நிகண்டு நூலே' என வாதிடுவர். 'நிகண்டன்' என்பது அருகதேவரின் திருப்பெயரேயாகும்.

## தொகுப்புரை

அறவோராகத் தமிழகத்திற்குச் சமண சமயத் துறவிகள் வந்தனர்; தங்கள் சமயத்தைப் பரப்பினர். தமிழர் பலர் சமணராயினர், அவர்கள் தமிழ் வளர்த்த வரலாறு சீரும் சிறப்பு மிக்கதாகும். தமிழின் பல்வேறு துறைகளிலும் அவர்கள்

அரும்பணியாற்றியுள்ளனர். பல்வேறு சமயத்தவர் தமிழிற்குத் தொண்டாற்றியுள்ளனர். எனினும், சமண சமயத்தவரே அத்திருப்பணியில் முதன்மையிடம் பெறுகின்றனர். தமிழ் வளர்த்த அறவோராகிய சமயத்தவரின் தொண்டு அளவில் விரிந்தது ! சிறந்தது! தகுதியில் உயர்ந்தது!

# 9

# மண்டோதரி

இந்தியப் பெண்களின் இயல்பினை இருசொற்களில் கவியரசர் இரவீந்திரநாத தாகூர் படம்பிடித்துக் காட்டியுள்ளார். அவை 'கண்ணீர்' 'தியாகம்' எனும் இரு சொற்களாகும். கண்ணீரின் ஊற்றாகவும் தியாகத்தின் திருவுருவமாகவும் விளங்கியவர்கள் – விளங்குபவர்கள் நம்முடைய பெண்மணிகள், இந்த அரிய செய்தியைக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் இரு பெண் பாத்திரப்படைப்புகளின் மூலம் உலகிற்கு உணர்த்தியுள்ளான். ஆயினும், காப்பியத் தலைவியை மிகைபடப் போற்றும் அறிஞர் பெருமக்கள், நல்லியல்புகள் வாய்ந்த சிறப்புமிக்க பெண்ணாகவும் மாவீரன் மனைவியாகவும் விளங்கிய மண்டோதரியைப் பற்றி நினைப்பதும் இல்லை!

## அறிமுகம்

தேவதச்சன் மயனுடைய மாண்புமிகு மகள் மண்டோதரி. முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும், முதல்வன் முன்னாள் எக்கோடி யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த வரமும், ஏனைத்திக்கோடும் உலகு அனைத்தும் செருக்கடந்த புயவலியும்' வாய்ந்த

இராவணேசுவரனின் பட்டத்தரசி! தேவர் கோமான் இந்திரனின் செருக்கறுத்த செம்மல் இந்திரசித்தை ஈன்றெடுத்த பெருமைக்குரிய பெருமாட்டி மண்டோதரி! குலம் செய்த பாவத்தாலே கொடும்பகை தேடிக்கொண்ட அரக்கர் குடியின் பொன்றாப் புகழ்மிக்க கற்பின் கொழுந்து மண்டோதரி!

அம்மங்கை நல்லாளை நமக்குக் கம்பன் அறிமுகப்படுத்தும் முறையைக் காணுகின்றபொழுது நம்மை அறியாமலேயே அவளிடத்து ஒருவகைப் பரிவுணர்ச்சி உண்டாகிறது.

சீதையைத் தேடி இலங்கை மா நகரில் அனுமன் அலைந்து திரிகின்றான். அப்பொழுது இரவுநேரம். ஒரு மாளிகையில் உறங்கும் பெண்மணியைக் கண்டு, அவன் மனத்தடுமாற்றம் அடைகிறான்.

.....எழில்மணி விளக்கங்கள்
இயல்கெடப் பொலிகின்ற
தன்னது இன்னொளி தழைவுறத் துயில் கொள்ளும் தையலை

(சுந்தர. 294)

அனுமன் காணுகின்றான். "எங்கள் நாயகன் மார்பினின் மணியொத்த மலர்மங்கையோ இவள்" என அவன் ஐயுறுகிறான் என்று கம்பன், மண்டோதரியை நமக்கு முதன் முதல் அறிமுகப்படுத்துகிறான். அறிமுகமே அவளைப்பற்றி நல்லதோர் எண்ணத்தை ஊட்டுவதாக அமைந்துள்ளமை ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்.

உத்தமப் பெண்ணிற்குரிய இலக்கணங்கள் யாவும் அமைந்தவளாக உறங்குகின்ற நிலையில், அவளை அனுமன் காணுகின்றான்

## நல்ல பெண்மணி

இல்லறத்திற்குத் தக்க நல்ல பண்பு உடையவளாக மண்டோதரி வாழ்ந்தாள், நிறை என்னும் பண்பினால் தன் நெஞ்சத்தை நன்னெறியில் நிறுத்திக் காத்துக் கொள்ளுவதில்

தலைசிறந்து விளங்கினாள்! இந்தப் பண்பினால் தன்னையும் காத்துக் கொண்டாள். தன்னைத் துணையாகக் கொண்ட கணவனையும் போற்றிக் காத்தாள்; ஒருமனத்தோடு நடத்தும் இல்வாழ்க்கையின் நலம் நிறைந்த புகழையும் காத்தாள். அதனால் மனச்சோர்வு இல்லாமல் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தாள்! திருவள்ளுவர் காட்டும் இலட்சியப் பெண்மணியின் இலக்கணமும் ஈதேயாகும்.

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் (குறள் 57)

இந்த இலக்கணத்திற்குச் சிறந்த இலக்கியமாக மண்டோதரி விளங்கியதைக் கம்பன் தன் காப்பியத்தில் கோடி காட்டியுள்ளான். இந்நிலையில், 'தன் கணவன் செய்த மாபெருந் தவற்றை இவள் ஏன் கண்டிக்கவில்லை?" எனும் எண்ணம் எழலாம். 'தன்னைவிட அறிவிலும், ஆற்றலிலும் தன் கணவன் சிறந்தவன்' எனும் எண்ணத்தை இயல்பாகவுடையவர் நம் நாட்டின் பெண்மணிகள்.

கண்டார் இகழ்வனவே காதலன்றான் செய்திடினும்
கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்
(திவ்.பிர.689)

என்பது ஆழ்வாரின் அருண்மொழியன்றோ? எனவே, கணவனுடைய தவற்றை உணர்ந்தும், அவனை மண்டோதரி வெறுத்தொதுக்கவில்லை எனலாம்.

### தாயுள்ளம்

அன்பின் பிழம்பாக விளங்குபவள் தாய். தன் மகனைச் 'சான்றோன்' எனப் பிறர் புகழ்வதைக் கேட்கும்பொழுது ஒரு தாய் அடையும் மகிழ்ச்சி, அவள் அம்மகனைப் பெற்றெடுத்த காலத்து அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெரிதாகும். இவ்வகையில் மண்டோதரி அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. தன் அரும்பெறல் அடலேறனைய அட்சகுமரனையும், 'சினத்தொடு கொற்ற முற்றி இந்திரன் செல்வ மேவி

நினைத்தது முடித்து நின்று, இராவணனுக்குப் பெரும்புகழ் சேர்த்த மாவீரன் இந்திரசித்தையும் கண்டு ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனள் மண்டோதரி!' எப்பொழுது? அவர்களுடைய வெற்றிச் சிறப்பையும் வீர தீரச் செயல்களையும் கேட்டபொழுது, என்பதைக் கம்பன் கவினுறக் காட்டுகிறான்.

இரண்டாவது முறையாக நாம் அவளைக் காணும் இடம் அனுமனும் அட்சகுமரனும் பொருத இடமாகும். அனுமனை எதிர்த்துப் போரிட்ட தன் மகன், போர்க் களத்தில் இறந்த செய்தி கேட்டு, அவள் பதைபதைத்துப்போனாள். அவளுடைய பெற்ற வயிறு பற்றி எரிகிறது! அவள் தன் வயிற்றில் அறைந்து கொண்டு கதறியழுது சோர்ந்து விழும் தாய்ப் பாசத்தைக் கம்பர்

கயல்மகிழ் கண்மலர் கலுழி கான்றிடப்
புயல்மகிழ் புரிகுழல் பொடிய ளாவுற
அயன்மகன் மகன்மகன் அடியில் வீழ்ந்தனள்
மயன்மகள் வயிறுஅலைத்து அழுது மாழ்கினாள்!

(சுந்தர.978)

என்று அவளுடைய மெய்ப்பாடுகள் மூலம் தெளிவுறுத்துகிறார்.

ஒரு மாதத்திற்குள், அவளுக்கு மற்றொரு மாபெரும் அதிர்ச்சி தரும் செய்தி கிடைக்கிறது. அவளுடைய எண்ணக் கோட்டைகள் சுக்கு நூறாகத் தகர்ந்து போகின்றன. இந்திரசித்து மாண்ட செய்தியை அவளால் நம்ப முடிய வில்லை. போர்க்களத்தில் மகனுடைய உடலைக் கண்டு அதன் மீது வீழ்ந்து புலம்புகிறாள். கைகளின் மீது தலையைச் சாய்த்து, நெருப்பினை மிதித்தவள்போல் நிலையாக உள்ள தரைமீது பதைபதைக்கும் பாதங்களோடு நின்று ஏக்கம் நிறைந்த நெஞ்சினளாகத் தன் மகன்மீது வீழ்ந்து மயங்குகிறாள். கொலையில் வல்ல வேட்டுவன் எய்த கூரிய அம்பு தன் உயிரை வாங்க, ஒரு மயில் மலையின்மேல் மயங்கி வீழ்ந்ததைப் போல் மண்டோதரி மயங்கி வீழ்ந்தாள் எனக் கவி அவளுடைய மன

நிலையைச் சித்திரித்துள்ளார்[1] 'உயிர் நீங்கிய மயில் போல' என்னும் உவமை இந்திரசித்தைத் தன் உயிராகக் கருதி வாழ்ந்தவள் மண்டோதரி என்பதை உணர்த்துகிறது.

மயங்கிய மண்டோதரி நெடுநேரம் உணர்ச்சியற்றவளாகப் பிணம்போல் கிடந்தாள். இதனை,

உயிர்த்திலள்; உணர்வும் இல்லள்;
'உயிர்இலள் கொல்லோ?' என்னப்
பெயர்த்திலள் யாக்கை; ஒன்றும்
பேசலள்; பில்கி யாதும்
வியர்த்திலள்; நெடிது போது
விம்மலள்; மெல்ல, மெல்ல
அயர்த்திலள்.....[2]

என்று உணர்ச்சித் துடிப்புமிக்க சொற்களால் கவிச் சக்கரவர்த்தி தாயுள்ளத்தின் அதிர்ச்சியைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுகிறார்.

பின்னர் உணர்வு பெறுகிறாள் மண்டோதரி. 'தாங்க இயலாத துன்பம் நெஞ்சை அடைக்கிறது; வாய்விட்டுக் கதறி அழுகிறாள். அவளுடைய மனத்திரையில் இனிக்கும் நினைவுகள்' எழில்மிகு காட்சிகளாகத் திரைப்படம் போல் ஓடி மறைகின்றன. அக்காலத்தில், இந்திர சித்தன் சாதித்த மாபெரும் சாதனைகள் அவள் மனக்கண்முன் நிழலாடுகின்றன. அவற்றுள் அவன் இந்திரனை வெற்றிகொண்ட நிகழ்ச்சி முன்வந்து நிற்கிறது.

கலையினால் திங்கள் என்ன
வளர்கின்ற காலத்தே உன்
சிலையினால் அரியை வெல்லக்
காண்பதோர் தவமுன் செய்தேன்[3]

என நீடு நினைந்து, தேம்பியழுகிறாள்.

---

1 கம்ப, 9367.
2 கம்ப. 9368
3 அரி –இந்திரன்

திடீரென்று அவளுக்கு இந்திரசித்து, தத்தித் தத்தித் தளர்நடையிட்டு நடைபயின்ற காலத்தில், இரண்டு சிங்கங்களைப் பிடித்து வந்து, மாளிகையின் வாயிலில் கட்டி விளையாடிய வீர விளையாட்டு நினைவிற்கு வருகிறது. அத்தகைய இனிய காட்சியை இனி எப்பொழுது நான் காணப் போகிறேன்? என்று அவள் கூறி, அழுவது நம்உள்ளத்தை உருக்குவதாகும். அடுத்து, அவன் அம்புலியைப் பிடித்து, அதிலுள்ள மறுவை முயல் எனக் கருதி, பற்றி எடுக்க முயன்ற நிகழ்ச்சி அவள் நினைவிற்கு வருகிறது. அந்நினைவு தாயுள்ளத்தைத் தணலில் பட்ட மெழுகாக நெகிழ்ந்து உருகச் செய்கிறது.

அம்புலி அம்மவா!' என்று
அழைத்தலும் அவிர்வெண் திங்கள்
இம்பர் வந்தானை 'அஞ்சல்!'
என இரு கரத்தின் ஏந்தி
வம்புஉறும் மறுவைப் பற்றி
முயல்என வாங்கும் வண்ணம்
எம்பெருங் களிறே! காண
வேசற்றேன்; எழுந்தி ராயோ![4]

என்னும் பாடல், நிகழ்ந்ததை மீண்டும் நினைவுபடுத்திப் பார்த்து, 'அந்த நாளும் வந்திடாதோ?, என எண்ணியேங்கும் தாய் உள்ளத்தின் – அன்பால் கனிந்த பெண்மையின் அருள் உள்ளத்தை நம் மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்துகின்றதன்றோ? 'முக்கண் படைத்த சிவபெருமான் முதலாய தேவர்களை வெற்றிகொண்ட என் மகன் இறந்து விட்டானா? என்னால் நம்பமுடியவில்லையே? அதிலும் மனிதருள் ஒருவன் கொல்ல, என் மகன் இறப்பவனா? இல்லையே!' என்று மண்டோதரி புலம்புகிறாள்: அன்பின் ஊற்றாக விளங்கும் தாயுள்ளம், தன் கண் முன்னால் காணும்

4. கம்ப. 9372

மெய்ம்மையை உண்மையென ஒப்புக்கொள்ள மறுக்கிறது!? ஏன்? தன் மகனின் வீர வரலாறு, அவனுக்கு இத்தகைய ஒரு நிலை எக்காலத்திலும் வாராது எனும் திடமான எண்ணத்தை அவள் உள்ளத்தில் ஆழப்பதியுமாறு செய்துள்ளது. இதனால்தான், இன்று பழங்கதையாய்ப்' போன பெருமையை– வீரதீரச் செயல்களை எண்ணியெண்ணி மனம் நொந்து அவள் நெஞ்சம் குமுறுகிறாள்!

## உணர்ச்சிப் பிழம்பு

இந்நிலையில் அவளுடைய உள்ளத்தில் ஓர் எண்ணம் பளிச்சென மின்னலிடுகிறது. 'கடல்போன்ற அரக்கர் படை அனைத்தும் போர்க்களத்தே வெஞ்சினமுற்ற மனிதரால் கொல்லப்பட்டனவே அன்றி, உயிருடன் மீளவில்லை! இதற்குக் காரணம் யாது?" என்று அவள் எண்ணுகிறாள். உடனே அவள் அலறுகிறாள்! 'சீதை என்ற அமிழ்தால் செய்த நஞ்சினால் அன்றோ இக்கேடுகள் எல்லாம் வந்தன!' என்னும் எண்ணம் அவளை அஞ்சி நடுங்கச் செய்கிறது. "ஐயகோ" என்று அவள் அலறித் துடிக்கிறாள்! நாளை, இந்த 'அமிழ்தினால் செய்த நஞ்சு நம் இலங்கை வேந்தனை விட்டு வைக்குமா? அவனையும் அழித்து விடுமே! என்று எண்ணும் பொழுதே மண்டோதரியின் மனம் நடுங்குகிறது.

இங்கு மண்டோதரி முழுநிறைவான பண்புடைய வளாகத் தோன்றுகிறாள். மதியை மயக்கும் தன் மகனு டைய இளமைப் பருவ அருஞ்செயல்களை எண்ணியெண்ணி நினைந்து நினைந்து மகிழ்ந்த அவள் அடுத்த நொடியே அம்மகிழ்ச்சியெல்லாம் மறைய, 'இனி எப்பொழுது இப்பெருமிதக் காட்சிகளை எல்லாம் கண்டு மகிழப் போகிறேன் எல்லாம் அவனோடு போய்விட்டதே! என்று ஏக்கப் பெருமூச்சு விடுகிறாள். 'இந்திரனை வெற்றி கொண்டது எளிய செயலா? முக்கணான் முதலிய தேவர்களை வெற்றி கொண்டவன் என் மகன்தானே? அவனுக்கா இக்கதி உண்டாயிற்று? என்று

மண்டோதரி மதிமயங்குகிறாள்.மகனுக்குஉண்டானஇவ்வவல நிலை, நாளைக்குத் தன் கணவனுக்கும் உண்டாகிவிடுமே' என அவள் அஞ்சுகிறாள். இங்கே அவள் அன்பும் பண்பும் நிறைந்த தாயாக மட்டும் காட்சி தரவில்லை! கொண்ட கொழுநனின் எதிர்காலத்தை– முடிவினை முன்கூட்டியே உணர்ந்தவளாகவும் தோன்றுகிறாள். அதை நேரடியாகத் தன் கணவனிடம் கூறும் துணிச்சல் அவளுக்கு இல்லை! ஆயினும் தன் மகனுடைய பிணத்தின் முன்னிலையில், மகனுடைய பிரிவால் மனக்கலக்க முற்றுள்ள தன் கணவனுக்கு நயமாக எச்சரிக்கை செய்கிறாள்!

சீதையென்ற அமிழ்தாற்செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன்
நாளை இத் தகையன் அன்றோ.[5]

என்று புலம்புவதன் மூலம் அறிவுறுத்துகிறாள். இதைக் கேட்ட இராவணன், தன் தவற்றை உணர்ந்து, திருந்துவான் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால், இதற்கு நேர்மாறாக அவன் சீதையின் மீது சீற்றம் கொள்கிறான். 'வஞ்சகத்தாளை வாளால் கொன்றிட' அவன் ஓடியதைக் காணுகிறோம். அவன் அறிவிழந்த நிலையில், அவளுடைய முயற்சி பயன் தராமல் போய்விடுகிறது.

## அவலத்தின் கொடுமுடி

இந்திரசித்தன் இறந்தமை, வாழ்க்கையைப் பெரிதாக மதித்திருந்த மண்டோதரியின் மனநிலையைப் பெரிதும் மாற்றி விடுகிறது.

நிலையிலா வாழ்வை யின்னும்!
நினைவெனோ நினைவி லாதேன்?[6]

---

5. கம்ப, 9375;

6. கம்ப. 9369

என்று அவள் அழுகையினூடே அரற்றுவதைக் காணலாம். இத்தகைய மாறியமனநிலையோடு புலத்தியன் மரபில் வந்து, புண்ணிய விரதம் பூண்டு முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் முதல்வன் முன்னாள் எக்கோடி யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த வரமும் ஏனைத் திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த புயவலியும் வாய்ந்த இராவணன் மண்மேல் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு, மனம் உடைகிறாள்; அவன்மேல் விழுந்து மண்டோதரி புலம்புகிறாள். மண்டோதரியை நாம் காணும் நான்காவது காட்சி, என் இறுதிக்காட்சி இவ்வவலக் காட்சியாகும். 'மலைகளும் மரங்களும் உருகுமாறு வாய் திறந்து' அவள் அழுதாள் எனக் கம்பர் கூறுகிறார்.

> "அண்ணலே! அண்ணலே! நான் கொடியவள்! எனக்கு இத்தகைய துன்பம் உண்டாகலாமா? தங்களுக்கு முன் அன்றோ நான் செத்து மடிந்திருக்க வேண்டும்? என் எண்ணம் பழுதாயிற்றே! தங்களுடைய முடிவு இப்படியா அமையவேண்டும்? இதுவா பாவத்தின் விளைவு?"

என்று மண்டோதரி புலம்புகிறாள். இப்புலம்பலில் அவளுடைய எண்ணப்போக்கும் இலட்சியமும் வெளிப்படுகின்றன. கணவன் உயிரோடு இருக்கின்றபொழுதே தான் பூவோடும் பொட்டோடும் வாழ்வரசியாக–மங்கல மகளாக இறந்து விட வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டு, தன் உள்ளத்தே அவ்வெண்ணத்தை அவள் போற்றி வந்தாள். ஆனால், தன் குறிக்கோளைத் தான் அடைய முடியாமல் போய்விட்டதைக் கண்டு அவள் ஏமாற்றம் அடைகிறாள்! அதைப்பற்றி எண்ணியெண்ணி ஏங்குகிறாள். தன் கணவனை – அரக்கர் கோமானை– இழந்தமையால் உண்டான ஆற்றொணாத் துன்பமுற்ற மண்டோதரி, தன் எண்ணம் ஈடேறாமல் போய்விட்டதே என்பதை நினைந்து மனமுடைந்து போய் விடுகிறாள். இங்கே, நல்லியல் மகளிர்க்குரிய நற்பண்பை– கணவன் இறப்பதற்கு முன்னரே தான் இறக்க வேண்டும்

எனும் எண்ணத்தை – மனைவியிடம் நாம் காணுகின்றோம். இந்த இலட்சியமும் மண்டோதரியின் மாவீரனுடைய மனப்பான்மையில் தன் குறிக்கோளைத் தான் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது.

இராவணனுடைய உடம்பில் எள்ளளவும் இடமில்லாத படி, இராமனின் அம்பு துளைத்திருப்பதை மண்டோதரி காணுகின்றாள். "இராவணனது உயிர் இருக்கும் இடத்தைத் தேடித்தான் இராமனுடைய அம்பு இவ்வாறு துளை செய்ததா? அல்லது இதயமாஞ் சிறையில் சீதையை வைத்த இராவணனது காதல் உள்ளே ஒளித்திருக்கும் என்று கருதி அதனைப் போக்க அவன் உடலில் புகுந்து துளை பல செய்து தேடியதோ?" எனக் கேட்டு அவள் அழுது அரற்றுவது அவளுடைய உள்ளப் பண்பினை உணர்த்துவதாகும்.

இராவணனுடைய பேராற்றலும் பெருமையும் அவள் மனத்தில் நிழலாடுகின்றன. 'வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி' அன்றோ அவனுடைய திருமேனி? ஆனால், இன்று அது போர்க்களத்தே, யாரோ ஒருவன் வாளியால் துளைக்கப்பட்டு வீழ்ந்து கிடக்கின்றதே! இக்கதி இராவணேசுவரனுக்கு வரலாமா? என நெடிது நினைந்து, எண்ணி யேங்குகிறாள். இதனை,

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்புஎடுத்த
திருமேனி, மேலும்கீழும்
எள்இருக்கும் இடனின்றி, உயிர்இருக்கும்
இடன்நாடி இழைத்த வாறோ!
'கள் இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்இருக்கும் "எனக் கருதி, உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி!*[7]

என்னும் பாடல் அறிவிக்கிறது.

---

7 கம்ப. 10081

அவள் எண்ணத்திரையில் எண்ணற்ற எண்ணங்கள் அலையலையாக எழுந்து மறைகின்றன. அவற்றுள் மங்கையர்திலகமான சானகியின் பேரழகு பளிச்சிடுகிறது! உடனே அவளுடைய கற்பும் அதன் ஆற்றலும் மின்னி மறைகின்றன. சீதையின் கற்பு அவன் சாதலுக்கு காரணமாக அமைந்துவிட்டதை எண்ணி அவள் நைந்துருகுகிறாள். பிறன் மனைவியை அழகு காரணமாக விரும்பியதன் விளைவாகத், தன் கணவன் அந்தப் பெண்ணின் கற்புத்தீயினுக்கு இரையானாள் என்பதை மண்டோதரி மறந்துவிடவில்லை! தன் கணவன் தனக்குத் தானே அழிவைத் தேடிக் கொண்டான் என்பதை அவள் நன்கு புரிந்துகொண்டுள்ளமை புலனாகின்றது."

"தேவர்க்கும், எண்திசைக் கரிகளுக்கும், சிவனார்க்கும், அயனார்க்கும், செங்கண்மாற்கும் மற்றுமுள்ள ஏனையோர்க்கும் மிக்க வலிமையுடைய என் கணவனுக்கு, 'என்றும் இறுதி உண்டாகாது' என்று எண்ணி இறுமாந்திருந்தேன் அவர் ஆவலோடு வருந்திச் செய்த அரிய தவமாகிய பெரிய கடலுக்கும், அத்தவத்தினால் பெற்ற வரம் என்று அமைந்த காவலுக்கும் அழிவை உண்டாக்கும் ஆற்றல்மிகு மனிதன் ஒருவன் உளன் என எண்ணவில்லையே" என்று மண்டோதரி கூறுவதிலிருந்து அவளுடைய பெண்மை உள்ளத்தில் உண்மை இயல்பு இனிது வெளிப்படுகின்றது.

இவ்வாறெல்லாம் அழுது அரற்றிய மண்டோதரி, 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்' என்னும் ஆன்றோர் வாய்மொழியை நன்கு உணர்ந்தவளாகக் காணப்படுகிறாள். எனவே, ''ஏக்கங் கொண்டு எழுந்து அந்த இராவணனது பொன்னணி கலன்கள் பொருந்தியுள்ள ஒப்பற்ற மார்பினைத் தன் தளிர்போன்ற கைகளால் தழுவிக்கொண்டாள்! தனித்தன்மையோடு நின்று 'அண்ணலே!' என்று உரத்த குரலில் அழைத்தாள்! பெருமூச்சுவிட்டாள்! அந்நிலையில்

உயிரையும் விட்டாள்! "தன்னுயிர் கொண்டு தன் கணவன் இன்னுயிரைத் தேடப் புறப்பட்டுவிட்டாள்!"

மண்டோதரியின் சீரும் சிறப்புமிக்க வாழ்க்கை முடிந்து விட்டது! அரக்கர் கோமானின் மனைவிளக்கு அணைந்து விட்டது! மயன் பெற்ற மங்கை நல்லாள் மண்ணக வாழ்வை நீத்து விண்ணக வாழ்வை நாடிச் சென்று விட்டாள். கணவனை இழந்த கற்புடைப் பெண்டிர் உடன்கட்டை ஏறுவர்! ஆனால், மண்டோதரியோ உடன்கட்டை ஏறாமலேயே உயிரை விட்டுவிட்டாள்! அவளுடைய முறுகிய அன்பிற்கும் பண்பட்ட உள்ளத்திற்கும் முடிமணியாய் விளங்குவது அவள் உயிர்விட்ட பான்மையேயாகும்!

இந்தியப் பெண்கள் ஆன்மிகப் பண்பாட்டின் காவலர்கள் என்பர். மண்டோதரி மணவாழ்வில் ஈடுபட்டு நன் மனைவியாய் இல்லறத்தை இனிது நடத்தினாள்; மக்களைப் பெற்றுத் தாய்மையின் புனிதத் தன்மையை உலகிற்கு உணர்த்தும் நற்றாயாக விளங்கினாள்; கணவன் வாழ்வு முடிந்தவுடன் தன்னுடைய வாழ்க்கையை முடித்துக் கொண்டாள்; இவையாவும் அவள் பெற்றிருந்த ஆன்மிகப் பண்பாட்டின் ஆற்றலையே அறிவிக்கின்றன! அவள் என்றுமே தன்னுரிமையை நிலைநாட்ட முயன்றது இல்லை! ஆனால், அவள் 'தன்னைத்தானே' அறிய முயன்றாள்! அம்முயற்சியில் வெற்றியும் பெற்றாள்! என்றும் பெண்மையின் முழுநிறை வடிவமாக அவள் விளங்கினாள்! உரிமைகளுக்காகத் தன் கணவனிடம் போரிடாமல், தொண்டுள்ளத்தோடு இல்லறத்தை அவள் ஏற்றமுறச் செய்தாள்! 'இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கர்' கோமானின் பெயர், இவளுடைய கணவன் எனும் காரணத்தினாலும் பொன்றாப் புகழ் பெறலாயிற்று! சிறப்புவாய்ந்த மண்டோதரியை மாணிக்கவாசகர் போன்ற அருளாளர்களும் வியந்து போற்றியுள்ளனர்:

ஏர்தரும் ஏழுல கேத்த
எவ்வுரு வுந்தன் னுருவாய்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை
அழகமர் வண்டோ தரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த
பெருந்துறை மேய பிரானை
சீரிய வாயாற் குயிலே
தென்பாண்டி நாடனைக் கூவாய்

என்பது திருவாசகம்.[8]

இவ்வாய்வினால் கம்பன் படைத்த பெண் பாத்திரங்களுள் மண்டோதரிக்கு ஒரு தனியிடம்–சிறப்பிடம் உண்டென்பதை நாம் உணர்கிறோம். சீதை இளமைப் பண்புகளுக்காட்பட்ட துடிப்புமிகு இளம் பெண்ணாகத் தோன்றுகிறாள். மண்டோதரி மகளிரின் கடமைகளை உணர்ந்தவளாய் ஊழோடு போராடுகிறாள். 'இப்படித்தான் வாழ வேண்டும்' எனும் உயர்ந்த குறிக்கோளோடு வாழ்ந்து காட்டுகிறாள் மண்டோதரி அவளுடைய வாழ்வின் ஒளி அணைந்தவுடன் அவள் தன் வாழ்க்கையை முடித்துக் கொள்ளுகிறாள். இவ்வகையில் அவள் கற்புக்கரசியாகக் காட்சி தருகிறாள்.

8 திருவா. 347

# 10

# பழமையில் பூத்த புதுமை

மக்கள் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு வழிகாட்டும் வகையில் நீதிநூல்கள் இயற்றப்பட்டுள்ளன. மனிதன் நலமாக வாழவும், மனவமைதியோடு வாழவும் கடைப்பிடிக்கத்தக்க நெறிமுறைகளை – ஒழுகலாற்று நெறிமுறைகளை, உடன்பாட்டு வகையான் 'இதைச் செய்க! போற்றுக!' எனும் வாய்பாட்டு வகையானும், எதிர்மறை முகத்தான், 'இதைச் செய்யற்க! வேண்டற்க!' எனும் வாய்பாட்டு முறையானும் வாழ்வியல் கருத்துகளை அறிவுறுத்துவது நீதிநூல்களின் இயல்பாகும்.

தொன்றுதொட்டு இன்றுவரை காலத்தின் போக்கிற்கும், மக்கள் வாழ்க்கையின் இயல்பிற்கும் ஏற்றவகையில் பல்வேறு நீதிநூல்கள் தமிழில் இயற்றப்பட்டுள்ளன. அவற்றை நீதிநூல்கள், நீதி இலக்கியங்கள் என இருவகையாகப் பாகுபடுத்தலாம். அவற்றுள் 'நீதிநூல்கள்' பலவகையான அமைப்பும் அழகும் உடையன.

## உணர்த்தும் முறை

முதுமொழிகள், பழமொழிகள், நீதிநெறிகள், அறிவுரைகள், அறவுரைகள் எனப்பலவாறாக நீதிநூல்களை வகைப்படுத்தலாம். இவற்றுள் பாரதியாரின் 'புதிய ஆத்திசூடி, முதுமொழிகளும் அறிவுரைகளும் இணைந்த நீதிநூலாக விளங்குவதைக்

காணுகின்றோம். 'முதுமொழிகள்' நெடுங்காலமாகக் குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் அனுபவத்தில் கண்டுணர்ந்த உண்மைகளை, அன்றாடப் பேச்சுமொழியில் தெளிவும் செறிவும் பொருந்திய சொற்கள் சிலவற்றால் எடுத்துரைப்பனவாகும். வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி உயர்த்தும் நோக்கத்தோடு, ஓர் ஆசிரியர் சிறுசிறு தொடர்களில் வாழ்வியல் உண்மைகளைப் பிறருக்கு அறிவுறுத்துவது 'அறிவுரை வகையைச் சேர்ந்த நீதிநூலாகும்.

எண்ணுவது உயர்வு (பா.ஆ.7)
ஒற்றுமை வலிமையாம் (10)
மந்திரம் வலிமை (75)
லௌகிகம் ஆற்று (102)

என்பன போன்றவை, பாரயாரின் ஆத்திசூடியில் காணப்படும் முதுமொழிகளாகும்.

அச்சந் தவிர் (பா.ஆ.1)
கொடுமையை எதிர்த்து நில் (22)
நீதிநூல் பயில் (57)
வையத் தலைமைகொள் (100)

என்பன போன்ற செய்யுள்கள் 'அறிவுரை' வகையைச் சேர்ந்தனவாகும். இவ்விருவகை நீதிநூல்களும் கருத்துகளை உணர்த்தும் முறையில் வேறுபடுகின்றன. இவ்விரு முறைகளையும் ஒருங்கு இணைத்து ஔவையாரும் பாரதியாரும். பாரதிதாசனும் தங்கள் 'ஆத்திசூடி'களை இயற்றியுள்ளனர். இதனால், அவற்றின் உணர்த்தும் முறை வலிவும் பொலிவும் பெற்றுள்ளது.

## பழமையில் கண்ட சிறப்பு

'புதுமையைப் போற்றும் புரட்சிக்கவியாகிய பாரதியார் ஏன் 'ஆத்திசூடி' எனும் பழைய பெயரைத் தம்முடைய நூலுக்கு இடவேண்டும்?' எனும் ஐயம் எழலாம். ஔவையாரின் 'ஆத்திசூடி' இடைக்காலத் தமிழகத்தில், பெருவாழ்வு

பெற்றதோடு, இன்றும் சிறுவர்க்குப் பயன்படும் சிறப்புமிகு நீதிநூலாகப் பொன்றாப்புகழ் பெற்றுவிளங்கிவருவதுகண்கூடு. தம்முடைய நூலும் இந்த முறையில் அமைந்தால், மக்கள் மன்றத்தில் எளிதில் குறுகிய காலத்தில் செல்வாக்கினைப் பெற இயலும் என்று பாரதியார் எண்ணி இருக்கலாம்.

### பாரதியாரைக் கவர்ந்த ஔவை

மற்றும், தமிழ்ப் புலவர்களுள் பாரதியாரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தவர் ஔவையார் என்பதை, அவருடைய கட்டுரைகள் பலவற்றால் அறிகிறோம்.

> ஜன சமூக நீதிகளின் விஷயத்தில் தமிழ்நாட்டில் எப்போதும் பிரமாணமாக இயன்று வருவது ஔவையின் நீதிவாக்கியங்களும் நீதிநூல்களுமேயாம். அதிகப் படிப்பில்லாதவர்களும், படிப்பே தெரியாதவர்களுமாகிய ஜனங்கள் ஆண் பெண் அனைவருக்கும் ஔவையாரின் நீதியே வழிகாட்டி.
>
> ஔவையார் வெறுமனே நூலாசிரியர் மட்டுமல்லர். அவர் காலத்திலேயே அவர் ராஜநீதியில் மிகவும் வல்லவரென்று தமிழ்நாட்டு மன்னர்களால் நன்கு மதிக்கப் பெற்றுள்ளார்.

"தமிழ் நாட்டின் மற்றச் செல்வங்களையெல்லாம் இழந்து விடப் பிரியமா?" என்று நம்மிடம் யாரேனும் கேட்பார்களாயின், " மற்றச் செல்வங்களையெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ்நாடு மீண்டும் அமைத்துக் கொள்ளவல்லது. ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதிக்கமாட்டோம். அது மீண்டும் சமைத்துக்கொள்ள முடியாத தனிப் பெருஞ்செல்வம்" என்று நாம் மறுமொழி உரைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.[1]

---

1. மகாகவி பாரதியார் கட்டுரைகள், மாதர், (அருணா பதிப்பகம், மதுரை, 1962), பக். 37–38

என்னும் சுப்பிரமணிய பாரதியாரின் கருத்துரை, ஔவையைப்பற்றிஅவர்கொண்டிருந்தவிழுமியஎண்ணத்தை வெளிப்படுத்துகிறது. இக்காரணத்தாலும், ஔவையின் 'ஆத்திசூடியை'ப் பொன்னே போல் போற்றிப் பெயரிடுவதிலும் பாரதியார் இதனைப் பின்பற்றி இருக்கலாம்.

மேலும், ஔவையின் ஆத்திசூடி,' முதன்முதல் தமிழ் நெடுங்கணக்கைக் கற்கும் சிறுவர்களுக்குத், தமிழ் எழுத்தை அறிமுகப்படுத்தும் முறையில் அகரவரிசையில் அமைந்திருக்கிறது. 'இந்த அகரவரிசைப் பட்டியல்' முறையைப் பின்பற்ற விரும்பிய பாரதியார், அம்முறையில் அமைந்து பெரும் புகழ்பெற்றுள்ள ஔவையாருடைய நூலின் பெயரினையே தம்முடைய நூலிற்கும் பெயராகச் சூட்டி இருக்கலாம்.

## புதுமையைப் போற்றும் முறை

இவ்வகையில் ஔவை முன்னோடி. எனவே, அவருடைய நூல் முதல் நூல். பாரதியார், அம்முறையைப் பின்பற்றி வழிநூல் ஒன்று இயற்றியுள்ளார் எனலாம். ஆனால், அவ்வழிநூலில், பாரதியார் பலவகையான புதுமைப் போக்குகளைப் புகுத்தியுள்ளார்; புதுவகைக் கருத்துகளைப் பொலிவுறச் செய்துள்ளார். எடுத்த எடுப்பிலேயே இப்புதுமைப் போக்கினை, புரட்சி எண்ணத்தினை இனிது, அவர் எடுத்தியம்பியுள்ளார். ஔவையாரின் 'ஆத்திசூடி,

ஆத்தி சூடி அமர்ந்த .தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே

எனத் தொடங்குகிறது. தேசிய கவியின் 'புதிய' ஆத்திசூடியோ

ஆத்திசூடி இளம்பிறை அணிந்து
மோனத்து இருக்கு முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன் ;
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்;
உருவகத் தாலே உணர்ந்து, உணராது

பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே! அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்!

(பா.4.ஆ, காப்பு)

எனத்தொடங்குகிறது. இக்கடவுள் வாழ்த்தில் 'பழமையிலே புதுமைநினைவு' பாய்ந்தோடுவதைக் காணலாம்.

ஔவையாரின் பாடல், 'ஆத்திமாலை சூடிய சிவபெருமானால் பெரிதும் விரும்பப்படுகின்ற விநாயகக் கடவுளைப் போற்றி வணங்குவோம் வாரீர்!' என நம்மை அழைக்கின்றது. ஆனால், பாரதியாரின் பாடலோ, 'ஆத்திசூடி இளம்பிறை அணிந்து, மோனத்து இருக்கும் முழுவெண் மேனியோனாகிய' சிவபெருமானை– முழுமுதற் பொருளாகிய இறைவனை – வாழ்த்தி வணங்குவோம் வாரீர்!' என்று நம்மை அழைக்கின்றது. 'விநாயகக் கடவுளைப் பல பாடல்களில் தனியாகப் போற்றி வணங்கியுள்ள சுப்பிரமணிய பாரதியார், இங்கு ஔவையைப் பின்பற்றாமல், சிவபெருமானையே சுட்டுவதற்குரிய காரணம் யாது?" எனும் எண்ணம் நம்மிடையே சிலருக்காகிலும் எழாமல் போகாது.

## ஒன்று பரம்பொருள்

உலக சமயங்கள் பலவற்றிலும் 'பரம்பொருள்' நிலையில் வைத்துப் போற்றப்படும் இறைவனையே இங்குப் பாரதியார் போற்றிவணங்குகிறார். 'மகமது நபிக்கு மறையருள் புரிந்தோனாகிய இறைவன், 'ஏசுவின் தந்தை'யாகிய இறைவன் ஆகியோரைச் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் அடுத்து அவர், வாழ்த்தி வணங்குகின்றார். எனவே, சைவ சமயத்தினர் முழுமுதற்பொருளாகப் போற்றி வணங்கும் 'மோனத்திருக்கும் முழுவெண்மேனியொனை'ப்பாரதியார்பரம்பொருள்நிலையில் வைத்துச் சிறப்பித்துள்ளமை இதனால் புலனாகின்றது.

புதிய பாரதத்தைக் காண விரும்பிய புத்துலகச் சிற்பியான பாரதியார்–சாதிவெறியும் சமயவெறியும் அற்ற புதிய உலகைப் படைத்துக் காட்டத் துடிக்கிறார். அந்த உந்துதல் சக்தியினால், புதிய ஆத்திசூடியின் காப்புச் செய்யுள்,' 'சர்வ சமய சமரச கீதமாக' வெளிப்பட்டிருக்கிறது. உலகப் பெருஞ்சமயங்களான சைவ, வைணவ (பொதுவாக 'இந்து' சமயம் எனப்படும்) சமயங்களின் கடவுளரும், இசுலாம் சமயத்தினைத் தோற்றுவித்த மகமதுநபிக்கு மறையருள் புரிந்த 'ஒரு நாமம் ஓர் உருவம்" இல்லாப் பரம்பொருளும், ஏசுபெருமானின் திருத்தந்தையாகிய 'பரமண்டலத்தில் உள்ள பரமபிதாவும்' ஒருவரே என்பதைப் பாரதியார் தமிழ் நாட்டுச் சிறுவர்களின் பிஞ்சு உள்ளங்களில் ஆழப்பதியுமாறு செய்வதற்கு இப்பாடலின் மூலம் முயன்றுள்ளார். இதனை,

உருவகத் தாலே உணர்ந்து உணராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்

என்று அழுத்தம் திருத்தமாக அறிவித்துள்ளமையால் அறியலாம்.

இத்தகைய 'சமயப் பொதுநோக்கு'ப் பாரதியாருக்கு முன்பே தமிழகத்தில் நிலவி வந்துள்ளது. இந்திய நாட்டுச் சமயங்களிடையே சமரசத்தைக் காணத் தாயுமானவரும் இராமலிங்க அடிகளும் முயன்றனர்; மாயூரம் வேத நாயகம் பிள்ளை, இந்தியச் சமயங்களுக்கும், வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்குள் நுழைந்த புதிய சமயங்களுக்கும் இடையே உள்ள ஒருமைபாட்டைத் தம் 'சர்வசமய சமரசக்கீர்த்தனை'கள் மூலம், உலகிற்கு உணர்த்த முயன்றார். இசுலாமிய சமயத்தவரையும் இந்துசமயத்தவரையும் இயக்கும் | இறைவன் ஒருவனே' எனும் கருத்தை – உண்மையை–மல்தான் சாகிபு, தம்முடைய திருப்பாடல்களின் மூலம் தெளிவுறுத்தி உள்ளார்.

இந்த சமரசப் பின்னணி பாரதியாருக்கு இயல்பாக அமைந்த ஒன்றாகும். வட இந்தியாவில் உள்ள காசியில்

வாழ்ந்த காலத்து, அவர் கற்ற தத்துவஞானமும், பெற்ற அனுபவ அறிவும் இவ்வுண்மையில் அவருக்கு அழுத்தமான நம்பிக்கையை ஊட்டியிருக்க வேண்டும். மற்றும், பிற்காலத்தில் காந்தியடிகளால் வழிபாட்டுப் பாடலாக நன்கு நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட 'வைஷ்ணவ ஜனதோ' ('வைணவன் என்பான்.) எனத் தொடங்கும் பாடலினை அறியும் வாய்ப்பு பாரதியாருக்குக் கிடைத்து இருக்கிறது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு சக்தி உபாசகராகிய பாரதியார், இந்தக் காப்புச் செய்யுளைப் பாடியுள்ளமை புலனாகின்றது. சைவ, வைணவ, இசுலாமிய, கிறித்தவ சமயங்களைச் சேர்ந்த இந்திய மக்கள் அனைவரும் 'ஒன்று பரம்பொருள்; நாம் அதன் மக்கள்' எனும் உள்ளுணர்வோடு ஒன்றுபட்டு இந்திய தேசிய உணர்வைப் போற்றி வளர்க்க வேண்டும் எனும் எண்ணத்தோடும், நாடு, மொழி, இன எல்லையைக் கடந்த நிலையில், 'உலக மக்கள் அனைவரும் நம் சகோதரர்களே!' எனும் விழுமிய உண்மையை உணர்ந்து போற்ற வேண்டும் எனும் உள்ளார்ந்த வேட்கையோடும் பாரதியார் இந்தக் கடவுள் வாழ்த்தினை அமைத்து இருக்கிறார் என்பது எளிதில் புலனாகின்றது.

## விடுதலைப் போருக்கு உரமூட்டத்தக்கன

பாரதியாரின் 'புதிய ஆத்திசூடி' இவ்வாறு பலவகைப் புதுமைப் பண்புகளைக் கொண்டு விளங்குகிறது. எடுத்த எடுப்பிலேயே 'அச்சம் தவிர்' என்று அறிவுறுத்துகிறார். 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்பது வள்ளுவர் வாய்மொழி. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில், பாரதநாட்டு மக்கள் இருந்த நிலையைக் கண்டு உள்ளம் குமுறிய பாரதியார்,

நெஞ்சு பொறுக்கு தில்லையே –இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார் – இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே!

(பாரதி பா. பாரத மக்கள் 1)

என்று தெரிவித்துள்ள கருத்து இங்கு நினைவு கூர்தற்குரியதாகும். பாரதத் தாயின் அடிமை விலங்கை உடைத்தெறிய வேண்டிய நம் மக்கள், தன்னம்பிக்கை அற்றவர்களாக ஆங்கிலேய அரசைக் கண்டு, அஞ்சியஞ்சி நடுங்கிச் செத்தமை பாரதியாருக்கு அதிர்ச்சியைத் தந்தது. அஞ்சி யஞ்சி வாழ்பவன் எங்கே அறத்தைச் செய்யப்போகிறான் என்று அவர் எண்ணினார். அன்றைய சூழலில், உடனடியாகத் தேவைப்பட்டது அச்சமற்ற மனநிலையே. 'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை' என்று முழங்கும் அஞ்சா நெஞ்சம் படைத்த இந்திய மக்களை உருவாக்கப் பாரதியார் விரும்பினார். அதனால், 'அச்சம் தவிர்!' எனும் வீரமுழக்கத்தோடு தம்முடைய "ஆத்தி சூடியை' அவர் தொடங்கியுள்ளார் 'சாவதற்கு அஞ்சேல்' (பு.ஆ.26) எனும் முதுமொழியும் இவ்வடிப்படையில் எழுந்ததேயாகும்.

'புதிய பாரத'த்தில் வாழப்போகும் எதிர்கால இந்தியக் குடிமக்கள் ஒற்றுமையுணர்வு உடையவர்களாக வாழவேண்டும் எனும் எண்ணத்தில், 'ஒற்றுமை வலிமையாம்' (பு. ஆ.10),'கூடித் தொழில் செய்' (18) எனும் அறிவுரைகளைக் கூறிச் செல்லுகிறார் பாரதியார்.

நாட்டுப்பற்று இல்லையானால், இந்திய மக்கள் விடுதலைப் போரில் ஈடுபட்டுப் போரிட இயலாது. நாட்டுப் பற்றினை மக்களுக்கு ஊட்டுவதற்குரிய சிறந்தவழி, நம் நாட்டு வரலாற்றினைப்பற்றிய அறிவினை மக்களுக்கு இளமையிலேயே ஊட்டவேண்டும். பொதுவாக 'இந்தியருக்கு வரலாற்று உணர்வே கிடையாது' எனும் குறை உலக அரங்கில் இருந்துவருகிறது. இவற்றை நன்குணர்ந்த பாரதியார்,

சரித்திரத் தேர்ச்சி கொள் (25)

என்று அறிவுறுத்துகிறார். வரலாற்று நாயகர்களாகிய மாவீரர்களைப் போற்றுவதன் மூலம், உள்ள உரமும்

அகத்தெழுச்சியும் தமிழ் மக்கள் பெறமுடியும் என்று நம்பிய பாரதியார்,

சூரரைப் போற்று (30)

என்று தெரிவிக்கிறார். அடுத்து நாட்டைக்காக்கும் நல்லுணர்வு வேண்டும் என்பதை,

'தேசத்தைக் காத்தல் செய்' (49)

என்று அவர் அறிவுறுத்துகிறார்.

"'பழமை பசும்பொன்னுக்குச் சமம்' என்பது முற்றிலும் உண்மையாகாது; 'தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா' என்பதை உணர்தல் வேண்டும்" என்னும் எண்ணத்தில் 'பழமையைக் கண்டு அஞ்சாதே!' எனும் கருத்தில்

'தொன்மைக்கு அஞ்சேல்!" (51)

என்று பாரதியார் அறிவிக்கின்றார். பயனற்ற பழமையைப் போற்றுவதில் பயனில்லை. அதைக் கைவிட்டு விடுவதில் எத்தகைய இழப்பும் உண்டாகாது என்பதைப் பிணத்தைப் போற்றேல்!' (67) என்பதன் மூலம் அவர் தெளிவுறுத்தியுள்ளார்.

## புதிய உலகிற்குத் தேவை

இவ்வுலக வாழ்வில் வெற்றிபெற, அமைதியான இன்ப வாழ்வினை எய்துவதற்குப் பல புதிய நெறிமுறைகளை வகுத்து அளித்துள்ளார்.

நீதி நூல் பயில்! (57)

என்று அறிவிக்கும் பாரதியார், 'நூலினைப் பகுத்துணர்' (59) எனவும், 'பாட்டினில் அன்பு செய்' (66), 'யவனரைப் போல் முயற்சி கொள்' (86), 'நீதி தவறேல்' (91) எனவும் அறிவுறுத்தியுள்ளமை இங்கு ஆழ்ந்து சிந்தித்தற்குரியதாகும்.

இவற்றுள் 'யவனரைப் போல் முயற்சி செய்' என்பது கிரேக்க ரோமானியர்களுடைய அயராத முயற்சியிடத்து, தேசிய

கவிஞருக்கு இருந்த மதிப்பினைக் காட்டுகிறது.[2]

இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனும் உலகில் சிறப்புற்று விளங்க வேண்டும் என்னும் துடிப்பு மிக்கவராகப் பாரதியார் விளங்கினார். பிரிட்டானியப் பேரரசு அன்றைய உலகில் தலைமை இடத்தைப் பெற்றிருந்ததை அவர் எண்ணியெண்ணிப் பார்த்துள்ளார்; அடிமை இந்தியா, உரிமையுடன் தலை நிமிர்ந்து நிற்பதற்குரிய வழிவகைகளை அவர் ஆராய்ந்து பார்த்துள்ளார். உலகிற்கு வழிகாட்டும் – உலகை நெறிப்படுத்தும் தலைமைப் பொறுப்பு இந்தியர் பெற்றால், நம் நாடு உலகில் முதன்மை இடம் பெறும் என்னும் துணிவு,

வையத் தலைமை கொள்! (109)

எனும் மூதுரையாக வெளிப்பட்டுள்ளதைக் காணலாம்.[3]

இத்தகைய நோக்கிலேயே,

கைத்தொழில் போற்று (21)

செய்வது துணிந்து செய் (31)

தெய்வம் நீ என்றுணர் (48)

தேசத்தைக் காத்தல் செய் (49)

பணத்தினைப் பெருக்கு (65)

முதலிய அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

---

2 பாரதியாருக்கு யவனரிடத்தில் பேரீடுபாடு இருந்தமை பின்வரும் சான்றுகளாலும் புலனாகின்றது.
'சரசுவதி தேவியின் புகழ்' என்னும் பாடற்பகுதியில் 'யவனர் தந்தேசம். கல்வித் தேவியினொளி மிகுந்தோங்க' (வெள்ளை.7) எனவும். 'வெண்ணிலா' எனும் பாடற்பகுதியில் *நல்லிய லார்யவனத்தியர் மேனியை, வெண்ணிலாவே–மூடு நல்திரை மேனி நயமிகக் காட்டிடும் (வெண்.5) எனவும், யவன நாட்டையும், யவனப் பெண்களின் எழிலார்ந்த மேனியையும் பாரதியார் சுட்டியுள்ளார்.

3 'யோக சித்தி' எனும் பாடற்பகுதியில், தேவியை நோக்கி,

. ..... ..... ..... இனி

வையத் தலைமை யெனக் கருள்வாய்" (யோக . 10)

என்று பாரதியார் வேண்டியுள்ளமை இங்கு ஒப்புநோக்கத் தக்கநாகும்.

## ஒற்றுமைக்கு இடையே வேற்றுமை

இத்தகைய புதுமைக் கருத்துகளை – இன்றைய புத்துலக வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களை வழங்கும் பாரதியார், புகழ்மிக்க ஔவையாரின் 'ஆத்திசூடி' அறவுரைக்கு மாறான கருத்துகள் சிலவற்றைத் தம்முடைய "புதிய ஆத்திசூடி"யில் புகுத்தியுள்ளதில் வியப்பிற்கு இடமில்லை!

| பாரதியார் | ஔவையார் |
|---|---|
| ரௌத்திரம் பழகு | ஆறுவது சினம் |
| கிளை பல தாங்கேல் | ஈப் போல் வளை |
| தையலை உயர்வு செய் | தையல் சொற் கேளேல் |
| தொன்மைக்கு அஞ்சேல் | தொன்மை மறவேல் |
| திருவினை வென்று வாழ் | பொருள்தனைப் போற்றிவாழ் |
| போர்த்தொழில் பழகு | போர்த்தொழில் புரியேல் |
| ஊண்மிக விரும்பு | மீதூண் விரும்பேல் |
| முனை முகத்து நில் | முனை முகத்து நில்லேல் |
| வெடிப்புறப் பேசு | வெட்டெனப் பேசேல் |

இவை யாவும் வீரசுதந்திரத்தின் வீறார்ந்த சிறப்பினை யுணராது, மறைவாகத் தமக்குள்ளே பழங்கதைகள் சொல்லி, மானமிழந்து, மதிகெட்டு வாழுகின்ற இந்திய மக்கள் எழுச்சி பெற்று, விடுதலைப் போர்ப்பரணி பாடவேண்டும் எனும் எண்ணத்தில் பாடப்பட்டனவாகும். 'சிறுவர் சிறுமியர்களுடைய உள்ளத்திலே இத்தகைய புரட்சிக் கருத்துகள் – புதுமைக் கருத்துகள் ஆழப் பதியுமானால், நாளடைவில் தேசபக்தியெனும் உணர்வு பெருக்கெடுத்து, வீரமும் தீரமும் வாய்ந்தவர்களாக வளர்ச்சியுற்று, இந்திய விடுதலைப் போரினை விரைவுபடுத்தி, சுதந்திர இந்தியாவை அவர்கள் உருவாக்குவர் என்று, சுப்பிரமணிய பாரதியார் எண்ணினார் என்பது இதனால் புலனாகின்றது. எனவே, மரபுவழிப்பட்ட ஔவையின் இம்முதுமொழிகளை இவர் மறுத்துள்ளார்

எனக்கொள்ளலாம். ஔவையை வானளாவப் போற்றிய பாரதியார், 'ஔவையின் முதுமொழிகள் புதிய பாரதத்தை உருவாக்கப் போகும் இளைஞர்களுக்குப் பயன்படாது' என்று மனமாரத் தாம் உணர்ந்தமையாலேயே, இவ்வாறு ஔவையின் கருத்துகளிலிருந்து வேறுபட்டுள்ளார் எனத் தோன்றுகிறது. மற்றும் ஔவையார், தனிமனிதன் விடுதலை பெறுவதற்கு – வீடுபேறு அடைவதற்குத் தம் நூலின் மூலம் வழிகாட்டுகிறார். பாரதியாரோ தம் புதிய ஆத்திசூடியின் மூலம், நாட்டு விடுதலைக்கு வழிகாட்டுகிறார்.

தேசியகவி பாரதியாரின் 'புதிய ஆத்திசூடி' உலக சகோதரத்துவத்தை உணர்த்துகிறது; சமயங்களிடையே சமரசத்தைக் காணத் தூண்டுகிறது; புதிய பாரதத்தை உருவாக்க வழிகாட்டுகிறது; அப்புதிய பாரதத்தில் வாழப் போகும் உரிமைபெற்ற இந்தியர்கள் எவ்வாறு தங்களைத் தகுதியுடையவர்களாக்கிக் கொள்ளவேண்டும் என்பதை அறிவிக்கிறது.

பாரதியாரின் புதிய ஆத்திசூடி காலத்துக்கேற்ற நீதி நூல்! முதுமொழிகளை எளிமையாக எடுத்துரைப்பது! மனிதகுலம் மாண்புற வழிகாட்டும் நல்லதொரு நீதிநூல்! இவ்வகையில் பாரதியாரின் 'புதிய ஆத்திசூடி' பழமையில் பூத்த புதுமையாக விளங்குகிறது.

# 11

# மனிதம்

மனிதம் என்பது என்ன? நமக்கு இது ஒரு புதிய சொல் தான் ஆனால், இச்சொல் உணர்த்தும் கருத்து நமது இந்தியப் பண்பாட்டில் ஊறித் திளைத்த பழைய கருத்தாகும். மனிதம் என்பது ஒருவகை வாழ்க்கைநெறி. அதைத் தோற்றுவித்தவர் ஒருவர் அல்லர். "அது ஒருவருடைய கொள்கையா? ஒரு சாராருடைய கொள்கையா? ஒரு மதத் தாருடைய கொள்கையா? அல்லது ஒரு நாட்டாருடைய கொள்கையா?" எனக் கேட்டால்' 'அன்று' என்றே நாம் கூறலாம்.

## மனிதம் – விளக்கம்

மனிதம் என்பது மனிதப் பண்புகளை மதித்துப் போற்றுகின்ற ஒரு நெறி; மனித உரிமைகளைப் போற்றிக் காக்கின்ற ஒரு நெறி. 'தன்னுயிர், மன்னுயிர்; மன்னுயிர் தன்னுயிர்' என்னும் உண்மையை உணர்த்துவது மனிதம். 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பது' மனிதம். பிறருக்குத் தொண்டு செய்து அவர்களுடைய துன்பத்தைத் துடைப்பதே மனிதம். தன்னைச் சிறிதளவாவது மறந்து, மற்றவர்களுக்காக வாழுமாறு தூண்டுகின்றநெறி மனித மாகும். சுருங்கக்கூறின், மனித இனத்தின் நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்ட வாழ்க்கைநெறியே மனிதமாகும்.

'மனித இனநலக் கோட்பாட்டினையே' நாம், 'மனிதம்' என்னும் சொல்லால் குறிப்பிடுகிறோம். ஆங்கிலத்தில் 'யூமனிசம்' (Humanism) என்றும்; பிரஞ்சு மொழியில் 'எகாலிடேரியனிசம்' (Egalitarianism) என்றும் வழங்கப்படுகின்ற சொற்கள் உணர்த்தும் பொருளையே, நம் தமிழ்மொழி 'மனிதம்' எனும் சொல்லால் உணர்த்துகிறது.

'மனிதம்' எனும் நெறியினைப் பேணுகின்றவர்கள் மனித இனத்தின் நல்வாழ்வில் நாட்டம் கொண்டவர்களாவர். மனித இனத்தின் நல்வாழ்வு, மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் வயிறார உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் பெறுவதையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. மனித இனத்தின் இன்றியமையாத தேவைகளைத் தேடித் தருவதே இன்றைய மக்களாட்சியின் குறிக்கோளாக இருந்து வருகிறது. இக்குறிக்கோள் தோன்றி வளர்ந்த வரலாறு தான், மனிதத்தின் வரலாறாகும்.

## அசோகன் கண்ட மனிதம்

புத்தருடைய அன்புநெறி மனிதஇனத்தின் சோர்ந்த உள்ளத்திற்குப் புத்துணர்ச்சி ஊட்டியது; போரிலே வெற்றி கண்ட மன்னன் தேவனாம்பிரியனை மீண்டும் போர்க் களத்தில் காலெடுத்து வைக்காதவாறு தடுத்து, மன்னுயிரைத் தன்னுயிர்போல நேசிக்குமாறு செய்தது! அவனுக்குப் பிறகு 'மனிதம்' எனும் கோட்பாடு இந்திய நாட்டுச் சமய தத்துவங்களிலும், இலக்கியங்களிலும் நிலையான இடத்தைப் பெறலாயிற்று.

## தமிழன் போற்றிய மனிதம்

தமிழ்நாட்டில் 'மனிதம்' என்னும் வாழ்க்கை நெறியின் கருத்துகள் பல தொன்றுதொட்டு இலை மறை காய் போல இலக்கியங்களிலும், அருளாளர்களின் அருண்மொழிகளிலும் ஆழ வேரூன்றி வளர்ந்து வந்திருக்கின்றன, சங்க

இலக்கியம் எனச் சிறப்பித்துப் போற்றப்படும். பத்துப் பாட்டும், எட்டுத்தொகையும், திருக்குறளும் மனிதம் எனும் கொள்கையை விளக்கும் சிறப்புமிக்க இலக்கியங்களாகும்.

மனித இனத்தின் தீராச் சிக்கலாக இருந்து வருவது வயிற்றுப் பசியாகும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் வாழப் பிறந்தவன்; வளமாகவும் நலமாகவும் வாழப் பிறந்தவன். அப்படி வாழ வேண்டியவர்களுள் பலர் அன்றாட வயிற்றுப் பிழைப்பிற்கு அல்லற்பட வேண்டியிருக்கிறது! போதிய அளவிற்கு உணவினைப் பெற முடியாமற் பட்டினி கிடந்து இறப்பவர்கள் மனித சமுதாயத்தில் கணிசமான அளவிற்கு அன்றும் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர். அவர்களுடைய வயிற்றுக் கவலையைப் போக்குவதற்குரிய வழிவகைகளைப் பற்றி அன்றைய சான்றோர்கள் பலர் சிந்தித்து இருக்கின்றனர். இன்று அப்பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், அன்று அப்பொறுப்பைச் சமுதாயத் தலைவர்களே ஏற்றுக் கொண்டிருந்தனர். எனவே, வளமாகவும், நலமாகவும், சீருடனும், சிறப்புடனும் வாழ்கின்றவர்களைக் காணும் பொழுது அச்சான்றோர்கள்.

மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

(மணி, 11:95–96)

என்று எடுத்துரைத்தனர். மண் திணிந்த இவ்வுலகத்து வாழ்கின்றவர்களுக்கு உண்டி கொடுத்து உதவுகின்றவர்கள் உயிர் கொடுத்தவர்களாகப் போற்றப்படுவர் என்பது இதன் கருத்தாகும். இவ்வடிகளில் மனித இன நலக் கோட்பாட் டின் உயிர்த் துடிப்பை நாம் காணமுடிகிறது.

சமுதாயத்தில் மனிதருக்குள்ளே ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. அவ்வேற்றத் தாழ்விற்குப் பொருளாதாரச் சீர்கேடு மட்டும் காரணமாகாது. சமுதாய அமைப்பு முதற்கொண்டு அரசியல் அமைப்பு வரையிலுள்ள பலவற்றிலும்

அவ்வேற்றத் தாழ்விற்குரிய காரணங்கள் பரந்து கிடக்கின்றன. இவ்வேற்றத் தாழ்வுகளுக்கு நிலைக்களனாக இருக்கும் மனிதனை எடுத்துக் கொண்டு ஆராய்வோமானால்– வேற்றுமைகளுக்கு இடையே ஓரொற்றுமை காண முயலுவோமானால்– ஒவ்வொரு மனிதனும் உயிர் வாழ ஒரு நாளைக்குத் தேவைப்படுவது நாழி (ஒரு லிட்டர்) அரிசிச் சோறுதான். சிலர் வேண்டுமானால் இதைவிடச் சிறிது குறைவாகவோ, கூடுதலாகவோ உண்ணக்கூடியவர்களாக இருக்கலாம். பொதுவாக யாரும் ஒரு நாளைக்கு ஒரு படியரிசிச் சோற்றுக்குமேல் உண்ணுவது கிடையாது. எனவே, ஒரு லிட்டர் அரிசிச்சோறு மனிதனாகப்பிறந்த எல்லாருக்கும் இன்றியமையாது தேவைப்படுகிறது. அடுத்து மனிதனுக்கு உடலை மறைப்பதற்குத் தேவைப்படுவது உடை. அதுவும் இரண்டிருந்தால் போதும். அவற்றைக்கொண்டு மானத்தை காத்துக் கொள்ளலாம். மேலாடை ஒன்றும், கீழாடை ஒன்றும் ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாது தேவைப்படுகின்றன. மற்ற ஆடை அலங்காரங்கள் எல்லாம் இந்த இரண்டு ஆடைகளுக்கு மேல் அணியத் தேவைப்படுவன. அவை மிகையெனில் தவறாகாது. ஆகவே, மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் "உண்பது நாழி; உடுப்பவை இரண்டே" என்பதில் ஐயமில்லை. எனவே, மனிதர்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் புறச்சார்புடையன; போலியானவை. இச்சீரிய கருத்தினைச் சோசலிச சமுதாயத்தை உருவாக்கும் பாரதத்தில் வாழும் நாமெல்லாம் நன்குணருவோமானால், நம்மில்பலர்தாழ்ந்தவர்கள்என்றுகருதுவதற்குஇடமேயில்லை. ஆனால், நம்மில் பலர் இதைப் பற்றியெல்லாம் சிந்திப்பதே கிடையாது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய நாட்டில் வாழ்ந்த ஒரு சிந்தனையாளர்–நக்கீரர் என்னும் நற்றமிழ்ப் புலவர்– தீர்க்க முடியாத இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முனைந்ததை,

"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே!
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே!
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே"'! (புறம். 189)

என்னும் அவரது புறநானூற்றுப் பாடல் தெரிவிக்கின்றது.

இவ்வுலகம் முழுவதையும் தன்னுடைய வெண்கொற்றக் குடையின்கீழ்க் கொண்டு வந்து ஆட்சிபுரியும் மாரெும் வேந்தனுக்கும், இரவும் பகலும் கண்ணுறங்காது விலங்குகளை வேட்டையாடும் வேடனுக்கும் இடையே உண்ணுவதற்குத் தேவைப்படுவது ஒரு லிட்டர் அரிசிச்சோறு: உடுக்கத் தேவைப்படுவன இரண்டே உடைகள்; இதைப் போன்றே மற்றவை அனைத்தும் ஒப்புமையுடையனவாகும். ஆகவே, செல்வத்தால் பெறும் பயன், பிறருக்கு உதவி செய்தலேயாகும். நாமே செல்வத்தைச் சேர்த்து வைத்து, அதன் பயனை நெடுங்காலத்திற்கு அனுபவிக்கலாம் என்றால், அதுவரையில் செல்வம் நம்மிடையே நிலைத்து நிற்காமல் பல வழிகளில் நம்மைவிட்டுப் பிரிந்து சென்று விடும். எனவே, "செல்வத்தைப் பெற்றோர் தம் செல்வத்தைப் பிறருக்குப் பயன்படுமாறு உதவி வாழ்க!" என்பது நக்கீரர் பொதுவாக உலகிற்கும், சிறப்பாகச் செல்வருக்கும் வழங்கும் அறிவுரையாகும்.

பண்டைத் தமிழ்ச் சான்றோரான நக்கீரர் உலகிற்கு எடுத்துணர்த்திய இவ்வுண்மைகளில் உள்ளார்ந்த பண்பாக உள்ள உயிர்ப்பண்பு மனித இனநலக் கோட்பாடாகும். மக்களாகப் பிறந்தவர்களுக்குள்ளே, அவர்கள் செய்கின்ற தொழிலால் சிறப்புடையவர்களாகப் போற்றப்படுவது பொருந்தாது. அவர்களிடையே காணப்படும் ஏற்றத் தாழ்வுகள்

செயற்கையானவை; புறச்சார்புடையன. அப் புறப்போர்வையைக் கழற்றி எறிவோமானால், உள்ளே ஒருமைப்பாட்டைக் காணலாம் என்பதே நம்முடைய முன்னோர்கள் கண்ட உண்மையாகும். எனவே, வேற்றுமைகளுக்கு இடையே ஒற்றுமை காணுமாறு தூண்டுவதும், மனிதனை மனிதனாக வாழுமாறு தூண்டுவதும், எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவுமாகிய மனித இன நலக்கோட்பாட்டின் கூறுகள் இப்பழந்தமிழ்ப் பாடலில் ஒருங்கே அமைந்திருப்பது, பண்டைத் தமிழ் மக்கள், மக்களினத்தின் நல்வாழ்வில் ஆர்வம் காட்டி வந்தமைக்குச் சிறந்ததொரு சான்றாகும்.

# 12

# தமிழ் நிலவு

நம் நாடு இயற்கை வளமிக்கது; இதைப் போன்றே அறிவு வளமும் பண்பாட்டு நலனும் வாய்ந்த சான்றோர்கள் பலரைப் பெற்ற பெருமைக்குரியது. கடந்த ஈராயிரம் ஆண்டுகளில் மாபெரும் மனிதர்கள், அறிஞர்கள், புலவர்கள், கலைஞர்கள் பலர், நம் நாட்டில் தோன்றியுள்ளனர். காலந் தோறும் கருத்து வளமிக்க கவின்மிகு இலக்கியங்களைப் படைத்து, தமிழ் அன்னைக்குப் புத்தம் புதிய அணிகளை அணிவித்து மகிழ்ந்த புலவர்கள் பலராவர். அவர்களுள் இந்நூற்றாண்டில், நம் கன்னித் தமிழிற்குப் பல்வேறு துறைகளில், புது வாழ்வு அளித்த அறிஞர் சிலரேயாவர். அச்சிலருள் தமிழ் மலையாகிய மறைமலையடிகளார் முன்னணியில் நிற்பவராவர்.

மறைமலையடிகளார் ஒரு முதுபெரும் புலவர்; தமிழ்ப் பெருங்கடல்; செம்பொருள் கண்ட செம்மலார்; சம்ஸ்கிருத மொழிக்கடலில் நீந்தி விளையாடிய தமிழ்ச் சான்றோர்! ஆங்கிலப் பேராற்றில் புனல்விளையாட்டு ஆடிய புலவரேறு! தமிழக மறுமலர்ச்சியின் விடிவெள்ளி! அவருடைய வாழ்வு, 'இடைக்கால உறக்கத்தில்' ஆழ்ந்து கிடந்த தமிழகம் விழித் தெழுந்த வரலாற்றை உணர்த்துவதாகும்.

## வாழ்வும் தொண்டும்

நாகப்பட்டினத்திற்கு அருகில் 1876–ஆம் ஆண்டில், ஜூலை 15–ஆம் நாள் திரு. சொக்கநாதப் பிள்ளைக்கும்

திருமதி சின்னம்மைக்கும் பிறந்த திருமகனாரே, நம் மறை மலையடிகளாராவர். 'வேதாசலம்' என்பது அவருக்குப்பெற் றோர்கள் இட்டழைத்த பெயராகும். தமிழறிந்த பெரியோர்கள் சிலரிடம், அவர் தமிழை முறையாகக் கற்றுத் தேர்ந்தார். சம்ஸ்கிருத மொழியைக் கற்க வேண்டும் எனும் ஆர்வ மேலீட்டால், அவரே அம்மொழியின் தொடக்க நூல்களைப் பயின்றும், கற்றறிந்தோர் பலரிடம் பாடங்கேட்டும் சிறந்த புலமையினைப் பெற்றார். அறிவுக் களஞ்சியமாம் ஆங்கிலத்தை அரும்பாடுபட்டு, அரிதின் முயன்று அவர் கற்றுத் தேர்ந்தார். இவ்வாறு மும்மொழிப் புலவராகச் சிறப்புற்று விளங்கிய வேதாசலம் அவர்கள், கல்லூரியில் படித்தவர் அல்லர்! அவருடைய தமிழ்ப் புலமையை நாடு நன்கறியும்! அவருடைய ஆங்கில மொழிப் புலமையைத், தம்முடைய நூல்களுக்கு ஆங்கிலத்தில் அவர் எழுதியுள்ள முன்னுரைகளும், ஆங்கிலத்தில் அவர் படைத்துள்ள இரு நூல்களும் எடுத்துரைக்கின்றன. அவருடைய சம்ஸ்கிருத மொழி அறிவின் ஆழத்தைப் பல்வேறு ஆராய்ச்சி நூல்களின் இடையே வேதங்களிலிருந்தும் உபநிடதங்களிலிருந்தும், பிற சம்ஸ்கிருத இலக்கியங்களிலிருந்தும் பல பாக்களை அவர் மொழி பெயர்த்துத் தந்துள்ளமையும், காளிதாசரின் சாகுந்தல நாடகத்தைத் தமிழாக்கம் செய்துள்ளமையும் தெரிவிக்கின்றன. யாவராலும் அசைக்க முடியாத தன்னம்பிக்கையும், தளராத உழைப்புமே அவருடைய முன்னேற்றத்திற்குரிய முதலீடாகும்.

இளமையிலிருந்தே சைவ சமயத்தில் அவர் பேரீடுபாடு கொண்டிருந்தார்; சைவ சமயத்தின் மீது படிந்திருந்த மாசினை அகற்றி, அதனைப் புத்தொளி பெறச்செய்தார். அவருக்கு 1896–இல், திருவனந்தபுரம் ஆங்கிலக்கல்விக்கழகத்தில் தமிழாசிரியர் வேலை கிடைத்தது. பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளையின் உதவியால் அடிகள் இப்பணியைப் பெற்றார். பின்னர், சென்னையில் இருந்த, இப்பொழுது தாம்பரத்தில் உள்ள கிறித்தவக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக அவர்

பணிபுரிந்தார். அப்பொழுது வேதாசலம்' எனும் தம்பெயரை 'மறைமலை' எனும் தமிழ்ப் பெயராக அவர் மாற்றிக் கொண்டார். 1911–ஆம் ஆண்டு அளவில் கல்லூரிப் பணியிலிருந்து அவர் விலகினார்; இல்லறத்தில் இருந்து கொண்டே துறவினை மேற்கொண்டார். ஆரவாரம் நிறைந்த நகர வாழ்க்கையில் அவருக்கு வெறுப்புண்டாயிற்று. அதனால், அமைதி மிக்கதும் சிந்தனைக்கேற்ற இயற்கைச் சூழல் வாய்ந்ததுமான பல்லாவரத்திற்கு அடிகளார் குடியேறினார். அங்கு, அயராது தம் ஆராய்ச்சிப் பணியையும் எழுத்துப் பணியையும் தொடர்ந்து அவர் ஆற்றி வந்தார். 1950–ஆம் ஆண்டு, செப்டம்பர் 15–ஆம் நாள், தம்முடைய தமிழ்ப் பணியை அவர் முடிவுறச் செய்தார்.

## சிவநேசச் செல்வர்

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிர்க்கும் அருள் தாங்கித், தில்லைச் சிற்றம்பலத்தே திருநடனம் புரிந்தருளும் அம்பலவாணரின் திருவடிகளை, என்றும் இடையறாது சிந்தை செய்யும் சிவநேசச் செல்வராக அடிகளார் வாழ்ந்தார். அவர் சைவ சித்தாந்தத்தை ஐயந்திரிபறக் கற்றார். அதன் உட்பொருளையும், சிவநெறியின் சிறப்பியல்பையும் பல கட்டுரைகளாகவும் நூல்களாகவும் அவர் உலகிற்குத் தந்தார். மற்றும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள ஊர்களுக்குச் சென்று சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துகளை எளிய, இனிய தமிழில் சொற்பொழிவுகளின் மூலம் அவர் பரப்பி வந்தார். அச்சொற்பொழிவுகள் பலவற்றை நூல்களாகத் தொகுத்தும் அவர் வெளியிட்டார்.

## தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை

கல்லூரியில் பணிபுரிந்த காலத்தில், தமிழ்மொழியின் எதிர்காலம் ஏற்றமிக்கதாக விளங்குவதற்குரிய வழி வகைகள் பலவற்றை அவர் வகுத்தார். அத்திட்டங்களின் பயனாகத் தனித் தமிழ் இயக்கத்தை அவர் தொடங்கினார். அக்காலத்தில்

தமிழிலே பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசுவதும் எழுதுவதுமே, தங்களுக்குப் பெருமையும் மதிப்பும் தரும் என்று கருதிய மக்கள் மிகப் பலராக இருந்தனர். அக்காலத்தில் தனித்தமிழில் பேசவும், எழுதவும் முடியும் என்பதை உலகம் கண்டு வியக்குமாறு செய்தவர் மறைமலையடிகளாராவார். தமிழ் மொழி, பிறமொழிகளின் துணை இன்றித் தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்தது என்பதைச் சொல்லிலும், செயலிலும் செய்து காட்டிய செயல்வீரர் மறைமறையடிகளார். 'தனித்தமிழில் ஏன் எழுதவேண்டும்? பேச வேண்டும்?' என்பதற்கு அவர் கூறும் காரணங்கள் இங்குக் குறிப்பிடத்தக்கன:

"வட (சமஸ்கிருத) சொற்களை நாம் இப்போதே தடை செய்யாவிடின், தமிழ் தன்னிலை கெட்டு, வேறுமொழி போலாகிவிடக் கூடும். தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதால், தமிழ், தன் இனிமையை இழந்து போவதோடு பல தமிழ்ச் சொற்களும் வழக்கில் பயிலாது, இறந்து போகும். ஆதலின் தமிழர்கள், தமிழ் மொழியினைப் பேணிக்காக்க வேண்டும்" என்பது அவருடைய அறிவுரையாகும். அடிகளாரின் இக்கருத்து, தமிழகத்தில் ஒரு விழிப்பு உணர்ச்சியை உண்டாக்கிற்று. இதன் விளைவாக, நல்ல தமிழில் பேசவும், எழுதவும் அறிஞர் பலர் முன்வந்தனர். தேவையற்ற இடங்களில் பிறமொழிச் சொற்களைப் பயன் படுத்தும் வழக்கம் மறையலாயிற்று. இன்றைய 'புதிய தமிழ் நடை' பையப் பைய வளர்ந்து, வளம் பெறலாயிற்று. இவ்வகையில், மறைமலையடிகளார் தனித்தமிழ் இயக்கத்தின் தந்தையாகப் பொன்றாப் புகழ் பெற்றார்.

காலத்தின் தேவையை அறிந்து, அதற்கேற்ற வகையில் மறைமலையடிகளார் தமிழ்த் தொண்டாற்றியுள்ளார். அவரால் தமிழ் வளர்ந்தது; தமிழால் அவர் வளர்ந்தார். தமிழ் வலிவும் பொலிவும் பெற்றது! அவர் வளமார்ந்த வாழ்வும் வான்புகழும் பெற்றார்! அவருடைய தமிழ்ப் பணியை நாம் பதினைந்து வகையாகப் பாகுபடுத்திக் கூறலாம்.

## (1) இலக்கியப் படைப்புகள்

அடிகளார் தமிழ்ப்பெரும் புலவராவார். அவர் இயற்றிய கவிதை நூல்கள் இரண்டாகும். திருவொற்றி முருகர் மும் மணிக்கோவை என்னும் நூல் சிறப்புமிகுந்ததாகும். திரு வொற்றியூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகரின் மீது மூவகைப் பாக்களால் இயற்றப் பெற்ற கோவை நூலாகும் இது. இது பழைய சங்கத் தமிழ்ப்பாடல்களைப் போன்று சொற்செறிவும், பொருட்செறிவும் வாய்ந்தது இந்நூல். திருமுருகாற்றுப்படையினைப் பெரிதும் அடியொற்றி இயற்றப்பட்டுள்ளது இந்நூல் எனக் கூறினால், அது தவறாகாது. இந்நூலின் மையப் பகுதியாக உள்ள 'புலவராற்றுப்படை' (41–49) கருத்துச் செறிவும் கற்பனை வளமுமிக்கது; அடிகளாரின் கவித்திறனிற்குச் சிறந்ததோர் உரைகல்லாக விளங்குவது. மற்றும் அகப்பொருள் நலங் கனிந்த பாடல்கள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அவை இந்நூலினை மேலும் சிறப்புறச் செய்கின்றன. கிளியைத் தூது செல்லுமாறு தோழி வேண்டும் பாடல் ஒன்றைக் காண்போம்.

மொழியுங் குழற குழுவுடம்பும் பைத்து
விழியுந் துயில்கூடா வெய்யோள்– பழியைத்
திருவொற்றிச் சேயோற் குரையாய்! கிளியே!
யுருவுன்னை யொப்ப துணர்ந்து (20)

இப்பாடல் அகநானூறு, நற்றிணை முதலிய சங்கத் தொகை நூல்களின் செய்யுள்களையும் மணிவாசகரின் திருச்சிற்றம்பலக் கோவையாரின் பாடல்களையும் நினைவூட்டுகின்றது.

'சோமசுந்தரக் காஞ்சி யாக்கம்' என்பது அடிகளாரின் சமய குருவான சைவ சித்தாந்த சண்ட மாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரின் மறைவினைக் குறித்து இயற்றப் பெற்ற சிற்றிலக்கியமாகும்.

## (2) இலக்கிய உரை

'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது பழமொழி. இச்சிறப்புமிகு திருவாசகத்தின்

பொருளைத் தெரிந்து கொள்ளுவது எளிய செயலன்று. அத்திருமறைக்கு உரை விளக்கம் காண்பதற்குரிய தகுதியும், திறமையும் வாய்ந்த மனிதர் யாருமிலர் என்று கருதப்பட்ட காலம் ஒன்று இருந்தது. அக்காலத்தில் மறைமலை அடிகளார் திருவாசகத்தின் முதல்நான்கு பகுதிகளுக்கு மிகவும் விரிவான உரையினைத் தெளிவாக எழுதி, மணிவாசகரின் திருவுள்ளத்தை யாவரும் புரிந்துகொள்ளுமாறு செய்தார். இவ்வுரைவிளக்கத்துள் அறுவகை இந்தியத் தத்துவங்களின் கோட்பாடுகளை நல்ல தமிழில் அடிகளார் தெளிவுறுத்தியுள்ள திறம் போற்றத்தக்கதாகும்,

### (3)இலக்கிய ஆராய்ச்சி

தமிழ் ஆராய்ச்சி உலகின் தலைஞாயிறாக விளங்கியவர் மறைமலை யடிகளாராவார். தமிழிலே முதன் முதலாக இலக்கிய ஆராய்ச்சியைத் தொடங்கி வைத்த சிறப்பு அடிகளாரையே சாரும். பழந்தமிழ்ப் பாடல்களான– பத்துப் பாட்டின் சிறப்புமிக்க செய்யுள்களான – முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய இரண்டிற்கும் அடிகளார் வரைந் துள்ள ஆராய்ச்சி விளக்கங்கள் அவருடைய ஆழ்ந்தகன்ற புலமையினையும், ஆராய்ச்சித் திறனையும் உலகிற்கு எடுத்துரைக்கின்றன.மற்றும், பாநலன் வியந்து பாராட்டும் இலக்கியத் திறனாய்வு நூல்களாகவும் அவை விளங்குகின்றன. 'திருக்குறள் ஆராய்ச்சி' எனும் நூல் முற்றுப் பெறாத ஒன்று. ஆயினும், வள்ளுவரின் வரலாறு, காலம், சமயம், மெய்யுணர்வுக் கோட்பாடு ஆகியவற்றை நடுவு நிலை நின்று, ஆசிரியர் இந்நூலில் ஆராய்ந்துள்ளார்.

திருவள்ளுவருடையகாலத்தை ஆராய்ந்துதமிழருக்கென ஒரு சகாப்தத்தை அவர் வரையறுத்துத் தந்துள்ளார். "எனவே, திருவள்ளுவனார் காலம் இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்பது எளிதில் பெறப்படும், கிறித்துப் பிறப்பதற்கு 30 ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது யாம் ஆராய்ந்து கண்ட முடிவாகும்". (அறி. கோ. 85) என்பதனால்

திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கின் தொடக்கத்தை அறிகின்றோம். 'முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவர்கள்' எனும் நூல், பண்டைத் தமிழ் இலக்கியப் போக்குகளையும் இடைக்காலப் பிற்காலத் தமிழ் இலக்கியங்களின் நோக்கையும் போக்கையும் விரிந்துரைக்கிறது.

சம்ஸ்கிருதப் பெரும்புலவரான காளிதாசர் இயற்றிய சாகுந்தல நாடகம், அடிகளாரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்ததாகும். அந்நாடகத்தைப் பற்றி 'சாகுந்தல நாடக ஆராய்ச்சி' எனும் நூலினை அடிகளார் படைத்துள்ளார். அவர் நாடகத்தின் அருமை பெருமைகளையும், காளிதாசரின் நல்லிசைப் புலமையையும் முதன்முதல், தமிழ் மக்களுக்கு, மிகச் சிறந்த முறையில் அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர் நம் அடிகளாரேயாவர்.

### (4) கட்டுரை நூல்கள்

தமிழில் உரைநடை வளர்ச்சிக்குக் கட்டுரைகள் பேருதவி புரிந்து வருகின்றன. உள்ளத்து உணர்ச்சிகளையும் சிந்தனைச் சிதறல்களையும் யாவரும் எளிதில் புரிந்து கொள்ளுமாறு எடுத்துரைப்பதற்குப் பயன்படும் சிறந்த இலக்கியவகை 'கட்டுரை' யாகும். அக்கட்டுரை பலவகைப்படும். அவற்றுள் சிந்தனைக் கட்டுரை, கருத்து விளக்கக் கட்டுரை என்பன சிறப்புமிக்கவை. அவ்வப்போது அடிகளார் இத்தகைய கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். அவை வார, திங்கள் இதழ்களில் எழுதியனவாகும். கட்டுரைகள் பல, நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. அவை "அறிவுரைக் கோவை'', "உரைமணிக் கோவை". சிந்தனைக் கட்டுரைகள்" என்பன. அவற்றுள், ஆங்கில மொழியில் சிறப்புமிகு கட்டுரையாளராகப் பெரும் புகழ்பெற்ற அடிசனின் கட்டுரைகள் சில தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. பொதுவாக அடிகளாரின் கட்டுரைகள், கருத்துச் செறிவும், கவின்மிகு நடை நயமும் வாய்ந்தனவாகும்.

### (5) நாடகம்

தமிழில் போதிய அளவிற்கு நாடகக் கலை வளர்ச்சியுறாததை அடிகள் நன்குணர்ந்தார். அக்குறையைப் போக்க அவர் இயன்ற வரையில் முயன்றுள்ளார். தமிழகத்தின் "அமர காதலர்களான" அம்பிகாவதி – அமராவதியின் இலட்சியக் காதல் வாழ்க்கையைச், சிறப்புமிக்க நாடகமாக அடிகள் படைத்துள்ளார். இந்நாடகம் படிப்பதற்கு மட்டும் அல்லாமல், நடிப்பதற்கும் உரியதாகவும் உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

### (6) வரலாறு

அடிகளார் சிறப்புமிக்க வரலாற்றாசிரியராவர்; பண்டை இந்திய வரலாற்றில் நுட்பமான அறிவு பெற்றவர். தமிழினத்தின் தொன்மைச் சிறப்பைப் பண்டைத் தமிழரும் ஆரியரும்' என்னும் நூல் வாயிலாக அவர் தெளிவுறுத்தியுள்ளார். பண்டைத் தமிழகத்து மருதநில நாகரிகத்தின் மாட்சியை 'வேளாளர் நாகரிகம்' என்னும் வரலாற்று ஆய்வு நூலின் மூலம் அவர் வெளிப்படுத்தியுள்ளார். மறைமலை அடிகளாரின் மாபெரும் படைப்பு, 'மாணிக்க வாசகரின் வரலாறும் காலமும்" எனும் வரலாற்று ஆராய்ச்சி நூலாகும். இந்நூல் இருபெரும் தொகுதிகளாக 900 பக்க அளவில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல், பண்டைத் தமிழகத்தின் அரசியல், சமுதாயம்,சமயம் மெய்ப்பொருள், கலை, இலக்கிய வரலாற்று ஆராய்ச்சிப் பெட்டகமாகப் போற்றப்படுகிறது.

### (7) வாழ்க்கை வரலாறு

வாழ்க்கை வரலாறு தமிழிற்குப் புதியதோர் இலக்கியத் துறை. அத்துறையில் தம் குருநாதரான சோமசுந்தர நாயகரின் வாழ்க்கை வரலாற்றைப் பக்திச் சுவையும் இலக்கிய இன்பமும் கலந்த ஒன்றாக 'சோமசுந்தர நாயகர் வரலாறு' எனும் நூலாக அடிகளார் படைத்துள்ளார்.

### (8) புதினங்கள்

தமிழ் இலக்கியத்தின் புதிய துறையாகத் தோன்றி வளர்ந்து வருவது புதினத் துறையாகும். புனைகதை மூலம் வாசகரை மகிழ்வித்து, அவர்தம் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த அடிகள் முயன்றுள்ளார். ஆங்கிலத்தில் ரேனால்ட்ஸ் என்னும் நாவலாசிரியர் படைத்த 'லைலா' என்னும் புதினத்தைத் தழுவி, 'குமுதவல்லி அல்லது நாக நாட்டரசி' என்னும் தமிழ்ப் புதினத்தை அடிகளார் இயற்றியுள்ளார். மற்றும் 'கோகிலம்பாள் கடிதங்கள்' எனும் புதினத்தின் மூலம், சாதிக் கொடுமை ஒழிப்பு, கலப்பு மணம், விதவைத் திருமணம் போன்ற பல புரட்சிக் கருத்துகளை அறுபது ஆண்டுகளுக்கு முன்பே ஆசிரியர் அறிவுறுத்தியுள்ளார்.

### (9) சமய விளக்க நூல்கள்

சைவ சமயத்தின் அடிப்படை உண்மைகளை எளிய முறையில் எடுத்துரைப்பதை, ஆசிரியர் தன் நோன்பாகக் கொண்டு வாழ்ந்தார். அச்சமயத்தின் மீது காலப் போக்கில் பதிந்த தூசிகளைத் துடைத்து, காலத்திற்கேற்ற வகையில் 'மக்களுக்குப் பயன் தரும் சமயமாக', அதை மாற்றும் பணியில் அவர் ஈடுபட்டிருந்தார். இதனால், 'சமயச் சீர்திருத்தவாதியாக' அவர் விளங்கினார். தம் கருத்துகளைச் 'சைவம்' எனும் தெவிட்டாத தெள்ளமுதத்தில் குழைத்து அரிய பல நூல்களை அடிகளார் நமக்கு அளித்துள்ளார். 'கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா; 'பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்; 'தமிழர் மதம்', 'சைவ சித்தாந்த ஞானபோதம்', சிவஞான போத ஆராய்ச்சி' எனும் நூல்கள் சைவ சமயத்தின் அருமை பெருமைகளைத் தெளிவுறுத்துவன வாகும்.

### (10) வாழ்வியல் நூல்

மக்கள் மண்ணில் நல்லவண்ணம் வாழ வழிகாட்டும் வாழ்வியல் நூல் ஒன்றினை மறைமலையடிகளார்

இயற்றியுள்ளார். 'மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை' எனும், இரு தொகுதிகளைக் கொண்ட பெருநூலின் மூலம் ஆசிரியர் மனித வாழ்க்கையின் மாட்சியைத் தெளிவுறுத்தியுள்ளார். நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே, இந்நூலில் குடும்பக் கட்டுப்பாடு செய்வது பாவமாகாது என்பதைப் பல வகையாக ஆசிரியர் ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

### (11) மெய்யுணர்வியல் நூல்கள்

ஆன்மிக உணர்வினைப் பெற்றோர் அடையும் மெய்யுணர்வு பற்றிய ஆராய்ச்சியிலும் அடிகளார் ஈடுபட்டுள்ளார். மெய்யுணர்வு பெற விரும்புவோருக்கு முதற்படியாக உள்ளது சித்தியல் என்பதாகும். அதை "யோக நித்திரை அல்லது அறிதுயில்" "தொலைவிலுணர்தல் எனும் மறை பொருளுணர்ச்சி," "மனிதவசியம் அல்லது மனக்கவர்ச்சி" "மரணத்தின் பின் மனிதர் நிலை" எனும் நூல்கள் வாயிலாக அடிகளார் விளக்கியுள்ளார்.

### (12) சிறுவர்க்குரிய நூல்கள்

சிறுபிள்ளைகளின் பிஞ்சு உள்ளங்களில், நல்ல எண்ணங்கள் எழுமாறு தூண்டும் நூல்கள் சிலவற்றை மறைமலையடிகளார் படைத்துள்ளார். முதுபெரும் புலவரான அடிகளார் – ஆராய்ச்சிப் பேரறிஞரான அடிகளார் பள்ளிப் பிள்ளைகள் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க வகையில், அவர்கள் நலங்கருதி சிறு நூல்கள் சிலவற்றை இயற்றியுள்ளமை நமக்கு வியப்பூட்டுகிறது. 'இளைஞர்க்கான இன்றமிழ், சிறுவர்க்கான செந்தமிழ், அறிவுரைக் கோவை என்னும் சிறுவர் நூல்கள் சிறப்புமிக்கனவாகும்.

### (13) மொழி பெயர்ப்பு நூல்கள்

சம்ஸ்கிருத மொழியில் தலைசிறந்து விளங்கும் நாடக "மாகிய சாகுந்தலத்தை, 'சாகுந்தல நாடகம்' எனும் நூலாக

அடிகளார் தமிழாக்கம் செய்துள்ளார். இதுவரை சாகுந்தல நாடகத்தை நான்கு பேர் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். இவற்றுள் 'மூல நூலோடு பெரிதும் ஒத்துச் செல்வதாகவும், சொல் நயமும் பொருள் நயமும் வாய்ந்ததாகவும் உள்ளது, மறைமலையடிகளாரின் மொழிபெயர்ப்பே' என்று தவத்திரு சங்கராசாரியார் கூறியுள்ளமை அடிகளின் மொழி பெயர்ப்புத் திறத்திற்கும் வடமொழிப் புலமைக்கும் சூட்டப்பட்ட மணிமுடியாகும்.

### (14) ஆங்கில நூல்கள்

தமிழ்ப் பண்பாட்டின் சீரையும் சிறப்பையும், சைவ சித்தாந்தத்தின் எழிலையும் ஏற்றத்தையும் பிறமொழியாளருக்கு எடுத்துரைப்பதற்காக இரு நூல்களை அடிகளார் ஆங்கிலத்தில் படைத்துள்ளார். அவை 'Ancient and Modern Tamil Poets: 'Saiva Siddhanta as a Philosophy of Practical Knowledge' என்பனவாகும்.

### (15) பதிப்புப் பணியும், பத்திரிகைப் பணியும்

சைவ சித்தாந்த நூல்கள் பலவற்றைச் சிறந்தமுறையில் அடிகளார் பதிப்பித்துள்ளார்; சிலவற்றிற்கு உரையினை எழுதியும் பதிப்பித்துள்ளார். 'துகளறு போதம்' 'சதமணிக் கோவை', 'ஞான சாகர வெண்பா' 'பஞ்சாக்கர மாலை ' என்பன அவர் பதிப்பித்த நூல்களுள் சிறப்பு வாய்ந்தனவாகும்.

அடிகளார் அவ்வப்போது வெளியிட்ட துண்டு வெளியீடுகள் மிகப்பலவாகும். 1897 முதல் 1900 வரை 'சித்தாந்த தீபிகை' (Siddhanta Dipika) எனும் ஆங்கில ஆராய்ச்சி இதழிற்கு அடிகளார் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர், 'ஞான சாகரம்' (அறிவுக் கடல்) எனும் திங்கள் ஆய் வேட்டை நம் அடிகளார் நடத்தினார். பிறமொழியாளருக்குப் பயன்படும் வகையில் 'The Mystic Myna' எனும் ஆங்கில முத்திங்கள் இதழையும் நம் தமிழ்ப் பெரியார் நடத்தியுள்ளார்.

நாடெங்கும் 'உபந்நியாசங்களும், 'கதா காலட்சேபங்களும்' நடைபெற்று வந்த அக்காலத்தில், எடுத்துக்கொண்ட பொருள் பற்றித் தெளிவாகவும், இனிமையாகவும் கேட்போர் உள்ளத்தில் பதியுமாறும் மணிக்கணக்காகச் சொற்பொழிவாற்றுவதில் வல்லவராக அடிகளார் விளங்கினார். இன்றைய மேடைப் பேச்சு தோன்றுவதற்கு வழிகாட்டியவர்களுள் மறைமலையடிகளார் சிறப்புமிக்கவராவார்.

## முற்போக்காளர்

அடிகளார், நம் மக்கள் கல்வி பெற வாய்ப்பு இல்லாமல் 'அறியாமை' இருளில் மூழ்கிக் கிடப்பதைக் கண்டு பெரிதும் மன வருத்தம் அடைந்துள்ளார். உடனடியாக அவர்களுக்கு உதவுவதற்குரிய வழிவகைகளை ஐம்பதாண்டுகளுக்கு முன்னரே கோடி காட்டியுள்ளார்.

> நம் செந்தமிழ் மக்களில் நூறாயிரம் பேர்க்கு இரண்டு மூன்று பேரே சிறிது கற்றவர்களாயிருக்கின்றார்கள் மற்றவர்கள் எல்லாரும் கல்வியறிவு இல்லாதவாகளாயும், அறியாமைச் சேற்றிற் புதைந்து கிடப்பவர்களாயும் இருக்கின்றார்கள். உலகத்தில் இவ்விந்திய நாட்டைத் தவிர மற்றைப் பெரும்பாகங்களில் இருப்பவர்கள் எல்லாருங் கல்வியிலும் மெய்யுணர்விலும் உழவிலுங் கைத்தொழிலிலும் வாணிகத்திலும் நாளுக்கு நாள் மேம்பட்டு வர, நமது நாட்டிலுள்ளவர்களோ அவர்களிலும் தமிழர்களோ, இவற்றில் மிகவுந் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறார்கள்! இவர்களை இனிக்கல்விச்சாலைகளுக்கு அனுப்பிக்கல்வி கற்பித்தல் இயலாதாதலின், ஊர்கள்தோறும் கழகங்கள் வைப்பித்து அவற்றின் வாயிலாகத் தமிழுஞ் சைவமும் உணர்ந்த அறிஞரைப் பல இடங்கட்கும் அனுப்பித் தமிழ்நூற் பொருளையுஞ் சைவ நூற்பொருளையும் விளக்கமாக அறிவுறுத்தி வருதல் இப்போது உடனே செயற்பாலதான நன் முயற்சியாகும்.

அறிஞர்கள் "பொன் மாளிகைக்குள்" வாழ்பவர்கள்: தங்களைச் சூழ்ந்து வாழும் மக்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாதவர்கள்" என்று குறை கூறுவது வழக்கம். ஆனால், அக்காலத்திலேயே நமது அடிகளார் 'சமுதாய உணர்வு' மிக்குடையவராய் விளங்கியதை மேற்கண்ட பரிவும் பாசமும் வாய்ந்த ஆக்கப் பணித்திட்டம் அறிவிக்கிறது. சமுதாயத் தொண்டிற்காக அவர் 1910–ஆம் ஆண்டு பொது நிலைக் கழகம் எனும் அமைப்பு ஒன்றினை நிறுவினார். அதனுடைய நோக்கங்கள் யாவும் முற்போக்கியல்பு வாய்ந்தவை. சாதிவேற்றுமையையும் தீண்டாமைக் கொடுமையையும் ஒழிப்பதற்கு நடைமுறையில் பின்பற்றத்தக்க நல்ல பல வழிகளை வகுத்து, அவற்றை மக்களிடையே பரப்ப அவர் முயன்றார்; தாமே அவ்வாறு வாழ்ந்தும் காட்டினார்.

"சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்' எனும் ஆய்வு நூலில், சாதிகளின் தோற்றம் பற்றிய வரலாற்றை வரைந்து, சாதி வேற்றுமையினால் உண்டான கொடுமைகளைப் புலப்படுத்தி, இக்காலத்தில் மனிதன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்குக் 'கலப்பு மணமே ' தலைசிறந்த வழி என்பதை அவர் தெளிவுறுத்தியுள்ளார். இக்கருத்தினை, தம்முடைய புதினங்களில், சிறப்பாகக் 'கோகிலாம்பாள் கடிதங்கள்' எனும் நூலில் மிகுந்த சீர்த்திருத்த வேகத்தோடு எடுத்துரைத்துள்ளார். சாதி வேற்றுமை பாராட்டுவதும் தீண்டாமையைப் போற்றுவதும் நம்முடைய சமயக் கொள்கைகளுக்கே பெரிதும் முரண்பட்ட செயல் என்பதை ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் அவர் பல்வேறு வகையாக அறிவுறுத்தியுள்ளார்.

அறிவிற்குப் பொருந்தாத, ஆராய்ச்சிக்குப் புலனாகாத செய்திகளையும், கட்டுக்கதைகளையும், புராண மரபுகளையும் 'தேவையற்றவை, பயன்தராதவை, மனிதனை மீண்டும் விலங்கு நிலைக்கு இழுத்துச் செல்பவை' என்று அஞ்சா நெஞ்சத்தோடும், பகுத்தறிவு மனப்பான்மையோடும் அவர் வெறுத்து ஒதுக்கியுள்ளார்.

மறைமலையடிகளார் பழைய தமிழ் இலக்கியக் கடலைக் கடைந்து, 'தமிழ் அமுதத்தை' இன்றைய தமிழருக்கு வழங்கியதோடு அமையவில்லை. இன்றைய உலகப்போக்கை உணர்ந்து, புத்தம் புதிய துறைகளில் தமிழை வளர்ப்பதற்கு வழிகாட்டியாகவும் அமைந்தார்; புதினங்களைப் படைத்தார்; அறிவியல் சார்பான வாழ்வியல் நூல்களை வரைந்தார்; உளவியல் சார்பான கருத்துகளை விளக்கும் சிந்தனைக் கட்டுரைகளையும், நூல்களையும் பலரும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க வகையில் எழுதியுள்ளார். இம்முயற்சியில் ஈடுபட்ட பொழுது, பல புதிய சொற்களைப் படைத்துத் தமிழ்ச் சொற்களஞ்சியத்தை அவர் வளமுறச்செய்துள்ளார். அவற்றுள், உயிர்த்துகள் (Protoplasm), முதலுரை (Protein), (Fats), 2 (Carbo–Hydrates), உப்புரை (salts), உய்வுரை (Vitamins), மெருகெண்ணெய் (Varnish) முதலிய சொற்கள் சிலவாகும்.

புத்தம் புதிய கலைகளைத் தமிழில் எடுத்துரைப்பதற்கு முயன்றவர் நம் அடிகளார். அம்முயற்சிக்கு உண்டாகும் இடையூறுகளையும் இன்னல்களையும் அவர் நன்குணர்ந்தவர் .கலைச் சொற்களைத் தமிழில் படைத்துத் தருகிறபொழுது தோன்றும் செயல்முறைச் சிக்கல்களையும் அவர் நன்கு அறிந்தவராவார். இப்பணியில் ஈடுபடுகின்றவர் இடையூறுகளைக் கண்டு திகைப்போ, மனச்சோர்வோ அடையாமல், ஒல்லும் வகையெல்லாம் ஓயாமல் பொறுமையாக முயன்றால், நல்ல கலைச் சொற்களைப் படைக்க இயலும் என்பதில் அவர் அசைக்க வியலாத நம்பிக்கை கொண்டிருந்தார். இதனை,

> முயற்சியும் அறிவும் உடையவர்கள் கருத்து வைத்தால், எத்தகைய புதுப்பொருள்கட்கும் தமிழிலேயே பெயரமைக்கலாமென்பதே நமது கொள்கை. உயிரோடுலவி வரும் மொழிகள் எவையாயிருப்பினும், அவை எத்துணை ஏழைமை யுடையவாயினும் அவற்றிற்குரியோர் உண்மைப் பற்றுடையவராய்

> அங்ஙனம் வளம்பெறச் செய்து வருவாராயின் அதனால் அவர் உரமான அறிவும் நன்முயற்சியும் மேன்மேல் மிகப் பெற்றுத் தாமுந் தம்மினத்தாரும் உயர்வர் (தமிழில் பிறமொழிக் கலப்பு, பக். 13)

என்பதனால் தெளியலாம்.

தூயதமிழில்,எளியசொற்களைக்கொண்டுபல்வகைப்பட்ட அறிவுக் கலைகளைத் தமிழில் எடுத்துரைத்த புதுமைப் புலவர் மறைமலையடிகளாராவர். அவருடைய தமிழ்த் தொண்டால் தமிழ் உரைநடை, செறிவுமிக்க பெருமித நடையாக வளர்ந்தது; ஆராய்ச்சிச் சிந்தனைகள் தமிழிலக்கிய வானில் சிறகடித்து வானுறவுயர்ந்து பறக்கலாயின; திறனாய்வுக் கலையெனும் தென்றல் வீசத் தொடங்கியது; பண்டை வரலாற்றுச் செய்திகள் பேரொளி மிக்க விண்மீன்களாக ஒளிரத் தொடங்கின; மாசு படிந்த சமய உண்மை, மேகத்திரையை விலக்கியெழும் வான்மதியாக வாழ்வு பெற்றது; "தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவற்கொரு குணமுண்டு" என்னும் உணர்வைப் பெற்றான் தமிழன்; அவனுடைய எண்ணத்தில் எழுச்சியையும் இதயத்தில் மலர்ச்சியையும் உண்டாக்கிய பெருமை மறைமலையடிகளாருக்கும் உரியதாகும்.

அவருடைய தொண்டின் சிறப்பை நன்குணர்ந்த தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள்,

> மறைமலை ஒரு பெரும் அறிவுச்சுடர்! தமிழ் நிலவு! அவர் தம் தமிழ்ப் புலமையும் ஆராய்ச்சிப் பேச்சும், எழுத்தும், தொண்டும் தென்னாட்டை விழிக்கச் செய்தன! அடிகளார் பேச்சு பல பேச்சாளர்களைப் படைத்தது! எழுத்து பல எழுத்தாளர்களை ஈன்றது!

என்று போற்றிப் பாராட்டியுள்ளதை, நாமும் 'உண்மை; வெறும் புகழ்ச்சியிலை!' என்று மகிழ்ந்து போற்றுவோமாக!

●●●●●●●●●●●●

# நூலாசிரியரின் நூல்கள்

தமிழ் இணையக் கல்விக்கழக மின்நூலகம் – தமிழிணையம் – இணையத் தளத்தில் [ https://www.tamil/digitallibrary.in ] புத்தகங்களைக் காணலாம்.

**(அ) வரலாற்று நூல்கள்:**

1. சிந்துவெளி தரும் ஒளி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1959.
2. வரலாறும் வாழ்வும், மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
3. தமிழர் நாகரிக வரலாறு முதல் பகுதி –"விடி வெள்ளி" தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1962.
4. முதலாம் இராசராசன், தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.
5. இனமரபு வரலாறு (தொல் பழங்கால வரலாறு) தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1975,
6. வரலாற்று வஞ்சி, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1976.
7. இலங்கையில் தமிழ்ப் பண்பாடு, சேகர் பதிப்பகம், சென்னை, 1979.
8. சிந்துவெளி எழுத்து வடிவங்கள், மணியகம், சென்னை, 1981.
9. குறுநில மன்னர் வரலாறு – தமிழ்நாட்டு வரலாறு. சங்கக் காலம், பண்டைய அரசியல், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1983.
10. Rajaraja, the Great, Madras Publications, 1984.
11. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1987.
12. Chieftains of the Sangam Age, 2001.
13. தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1994.
14. தமிழ்நாட்டு வரலாறு சங்கக்காலம்–வாழ்வியல் (நாகரிகமும், பண்பாடும்), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983.
15. History of Tamilnadu (A Birds Eye View) Authors Guild of India, 1986.

### (ஆ) ஓரங்க நாடகம் :

16. அடிமை விலங்கு (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1979.
17. பொற்கொடி (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1981.

### (இ) திறனாய்வும் ஆராய்ச்சியும்:

18. திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக் கழகம், 1971 (சாகித்திய அகாதெமி பரிசினை 1974–இல் பெற்ற நூல்)
19. திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும், சென்னைப் பல்கலைக்கழகம், 1973.
20. வாழ்வும் இலக்கியமும், மணியகம், சென்னை, 1978.
21. திருக்குறளும் இந்திய அறநூல்களும், மணியகம், சென்னை, 1979.
22. அறிஞர் அறவாழி, மணியகம், சென்னை, 1978.
23. சான்றோர் கண்ட திருவள்ளுவர், மணியகம், சென்னை, 1979.
24. ஒளிவிளக்கு (திருக்குறள் ஆய்வு)) பாரி நிலையம், சென்னை, 1979.
25. தமிழ் நிலவு, மணியகம், சென்னை, 1981.

26. மு.வரதராசனாரின் படைப்பு இலக்கியம், பாரி நிலையம்,1984.
27. தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம், தமிழ்க் கடல் பதிப்பகம், சென்னை, 1984.
28. தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல், சென்னை பல்கலைகழகம், 2001.
29. திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியாரின் வாழ்க்கை வரலாறு, மணியகம், சென்னை, 1982.

### (ஈ) உரையும் பதிப்பும்:

30. தனிப்பாடல் திரட்டு (உரையுடன்), மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
31. திருக்குறள் (கையடக்கப் பதிப்பு), வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
32. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி–3, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977.
33. Historical Heritage of the Tamils, Vol. I. International Institute of Tamil Studies, Madras, 1983.

34. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி–1 (பதினெண் கீழ்க்கணக்கு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
35. திறனாய்வு அணுகுமுறைகள் (க.த.திருநாவுக்கரசு மற்றும் கு.பகவதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

## (உ) தொகுப்பும் பதிப்பும்:

36. தொல்காப்பிய நூலடைவு, சென்னைப் பல்கலைக் கழகம், 1971.
37. திருக்குறள் நூலடைவு, சென்னைப் பல்கலைக் கழகம், 1972.
38. Tributes and Translations of Tirukkural, 1986.
39. Historical Heritag of the Tamils
Dr.S.V. Subramaniyan & Dr.K.D. Thirunavukkarasu IITS, Tharamani, 1985

## (ஊ) தமிழாக்க நூல்கள்:

40. ஜி.எம். டிரெவெலியனின் இங்கிலாந்தின் வரலாறு, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1965,
41. வின்செண்ட் ஸ்மித்தின் ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு–3, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.
42. இலட்சுமிநாத பெஸ்பரூவா, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.
43. இராசாராம் மோகன்ராய், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.
44. ஜீவனானந்த தாஸ், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.

## (எ) இலக்கணம்

45. எட்டாம் வகுப்பு தமிழ் இலக்கணம், பாடநூல் நிறுவனம், 1978.

# தமிழில் வெளியிட்ட கட்டுரைகள்

## 1950 – 51

1. பனைமர நிழலில், விவேகா, சென்னை, 1950.
2. பசிப்பிணி, விவேகா, சென்னை, 1951.

## 1952 – 53

### இலக்கியம் காட்டும் எழிலோவியம்:–

3. முல்லை சிரித்தது
4. பெண்ணா? பேயா?
5. மின்னிகரிடையான்
6. கள்வன் மகன்
7. உயிரும் உடலும் கலைமன்றம், சென்னை, 1952–53.
8. ஆன்ம நேயம்
9. மருந்து
10. பெரும்பிணி
11. பொய்யும் மெய்யும்
12. வெண்ணிலவு

## 1953 – 1954

13. தமிழ்நெறி, விந்தியா, பூனா, 1953
14. வள்ளைப்பாட்டு, கலைக்கதிர், கோவை, 1954.

15. போரும் காதல் வாழ்வும், விந்தியா, 1954.

16. பாரதிகண்ட தமிழ்ச் சமுதாயம், விந்தியா, பம்பாய், 1954

17. ஓங்குக நல்லது எது? திருவள்ளுவர், திருச்சி, 1954.

18. வள்ளுவர் கண்ட மகளிர், திருவள்ளுவர், திருச்சி 1954

19. திருக்குறளின் ஆசிரியர் ஒருவரா? பலரா? திருவள்ளுவர், திருச்சி, 1954.

## 1955 – 56

20. தமிழக வரலாற்றில் சில புதிர்கள், குருகுலம், வாலாஜாபாத், 1955.

21. மெய்ப்பாடுகளும் ஒன்பான் சுவையும், குமரி மலர், சென்னை, 1955

22. புரட்சிக் கவிஞரின் "புரட்சிக் கவி" – ஒரு திறனாய்வு, குமரி மலர், 1956

23. தமிழ்த் தென்றல், விந்தியா, பூனா, 1956.

24. வீரகாப்பியமும் கலைக் காப்பியமும், கம்பன் மலர், காரைக்குடி, 1956

## 1957

25. முதியோர் கல்வியும் சோசலிச சமுதாயமும், ஆதாரக் கல்வி, 1957.

26. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் யவனரா? (மூன்றுக் கட்டுரைகள்), எழில், காரைக்குடி, 1957.

27. திருக்கோவையாரின் திறம், ஞானசம்பந்தம், தருமை, 1957.

28. தமிழ் நிலவு, தமிழ்நாடு, மதுரை, 1957.

## 1958

29. இசுலாமியர் வளர்த்த தமிழ், சீதக்காதி தமிழ்ச் சங்க மலர், கீழக்கரை, 1958.

30. தமிழகதில் ஒரு ஹோமர், கம்பன்மலர், காரைக்குடி, 1958.

31. ரோமானியர் கண்ட தமிழகம், எழில், காரைக்குடி, 1958 (5 கட்டுரைகள்)

32. மருதனாரின் காப்பியநெறி, எழில், காரைக்குடி, 1958.

## 1959

33. புதுக்கோட்டை தொண்டைமான்களின் தோற்றம், அரசர் கல்லூரி மலர், புதுக்கோட்டை, 1959.

34. மனிதனும், மனச்சான்றும், எழில், காரைக்குடி, 1959

35. அறம்பிறழ்ந்த ஆட்சியாளன், கலைக்கதிர், கோவை, 1959

36. கிரேக்க நாகரிகமும் தமிழ் நாகரிகமும் (6 கட்டுரைகள்), கலைஞன் 1959.

37. தமிழகத்தின் மண்ணியல் அமைப்பு, அண்ணல் சுப்பிரமணியனார் மணி மலர், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை 1959.

## 1960

38. மனிதன் – அன்றும் இன்றும், தருமச் சக்கரம், சென்னை, 1960.

39. சங்கக் காலத்தில் ஒரு வரலாற்றுப் பேராசிரியர், எழில், 1960.

40. சான்றோர் யார்?, நண்பன், திருச்சி, 1960.

41. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (10 கட்டுரைகள்) தமிழ்ச்செல்வி, புதுவை, 1960.

42. மனிதம், புதுமை, திருச்சி, 1960.

43. தமிழகத்தில் விடிவெள்ளி, குருகுலம், வாலாஜாபாத் 1960.

44. கவிஞனின் மூன்று குரல்கள், குருகுலம், வாலாஜாபாத், 1960.

## 1961

45. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், காளிதாசரின் குமார சம்பவமும், குமர குருபரன், சீவைகுண்டம், 1961

46. வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி, திருவள்ளுவர், திருச்சி, 1961.

47. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (1960 வரை) தமிழ்ச்செல்வி, சிலம்பு 1, முத்து 8 முதல் 12 வரை 1961.

## 1962

48. பிளேட்டோ கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

49. அரிஸ்டாட்டில் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

50. கன்பூசியசு கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை 1962.

51. தமிழன் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

## 1963

52. வள்ளலார் காட்டிய வழி, குருகுலம், வாலாஜாபாத், 1963.

53. இலக்கியமும் வாழ்க்கையும், முக்கனி, சென்னை 1963.

54. முருகனும், முத்தமிழும், முக்கனி, சென்னை, 1963.

55. அடிகளின் அறைகூவல், குருகுலம், வாலாஜாபாத், 1963.

56. பிள்ளைத்தமிழின் அமைப்பும் அழகும், குமரகுருபரன், சீவைகுண்டம், 1963.

57. தென்னிந்தியாவும் இலங்கையும், கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1963. (நான்கு கட்டுரைகள்)

## 1964

58. நாகரிகமும் பண்பாடும் (5 கட்டுரைகள்), புதுமை, திருச்சி, 1964.

59. தென்னிந்தியாவும் இலங்கையும் (தொடர்ச்சி –5 கட்டுரைகள்), கலைச்செல்வி, யாழ்ப்பானம், 1964.

60. உலக நாகரிகத்தில் தமிழ்ப்பண்பாடு, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964. (3 கட்டுரைகள்)

61. பொய்தீர் ஒழுக்கநெறி, சென்னை மாநகரத் தமிழாசிரியர் கழக மாநாட்டு மலர், சென்னை, 1964.

## 1965

62. தன்னுணர்ச்சிப் பாட்டு, அறுவடை, காஞ்சி, 1965.

63. நெடுநல்வாடை – திறனாய்வு: தமிழ்ச்செல்வி, புதுவை, 1965.

64. தாய்மொழியும் பிறமொழி ஆதிக்கமும், காஞ்சி, 1965.

65. சோழர் காலத்திய சமுதாய நிலை, கல்வெட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள், சென்னை, 1965.

## 1966

66. திருநெறி, சுத்த சன்மார்க்கம், வேலூர், 1966.

67. மெய்யுணர்வுக்காதல் நெறி, சத்தியஞான சபை, நூற்றாண்டு விழா மலர், வேலூர், 1966.

68. இன்பம், கல்வி, சென்னை, 1966.

69. தமிழ்மொழியின் நெடுங்கணக்கு, நக்கீரர் கழக ஆண்டு மலர், சென்னை, 1966.

70. திருக்குறளின் மொழியியல்புகள், பச்சையப்பன் கல்லூரி 125 ஆவது விழா மலர், சென்னை, 1966.

## 1967

71. தமிழக வரலாற்றின் படிப்பினைகள், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

72. சிந்தாதிரிப்பேட்டை, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

73. பரணியின் பல்சுவை – இன்பச்சுவை, கலைஞன், திருச்சி, 1967.

74. மும்மணிகள், கலைஞன், திருச்சி, 1967.

## 1968

75. அச்சுப்புத்தகத்தின் தோற்றம், ஆரம்பக்கல்வி, சென்னை, 1968.

76. இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், தமிழக அரசின் வெளியீடு, சென்னை, 1968.

77. இளங்கோ கண்ட இயற்கை, தமிழகம், சென்னை, 1968.

78. வால்ட்விட்மனும் புதிய கவிமரபும், கவிதை, சென்னை, 1968.

79. இன்றைய தமிழ்க் கவிதைகளும், புதுமைப் போக்குகளும், கவிதை, சென்னை 1968.

80. கவிஞர் தமிழ் ஒளியின் புரட்சிப் படைப்பு, கவிதை, சென்னை, 1968.

81. ஆராய்ச்சி அறிஞர் சிவராசபிள்ளை, குமரிநாடு, நாகர்கோயில், 1968.

82. எல்லிஸ் கலைக்களஞ்சியம் தொகுதி 10, தமிழ்வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை, 1968

83. கல்வெட்டுகளால் அறியப்படும் சோழர் காலத்திய சமுதாய அமைப்பு, கல்வெட்டுக் கருத்தரங்கு, புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை – 1, 1968.

## 1969

84. உலகில் தோன்றிய முதல் நாவல், குமுதம், சென்னை, 1969.

85. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர் நாகரிகம், மதுரை வரலாற்றுப் பேரவை மலர், மதுரை, 1969.

86. தமிழகத்தின் இசைக் கருவிகள், குழந்தை வீணை காயத்ரி பாராட்டுவிழா மலர், சென்னை, 1969.

87. வரலாற்று வஞ்சி, மறைமலையடிகள் நினைவுமலர், நாகப்பட்டினம், 1969.

88. திருக்குறளின் தனிச்சிறப்புகள், Annals of Oriental Research சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1969.

89. நிலமும், நீரும், தமிழ் உறவு மகளிர், சென்னை, 1969.

90. திருக்குறளின் மாட்சி, மன்றம், சென்னை, 1969.

91. மன்னரை அணுகும் முறை, குறள் மலர், திருச்சி, 1969.

92. அவையும் அறிஞனும், குறள்மலர், திருச்சி, 1969.

93. திருவள்ளுவர் ஆண்டு ஈராயிரம், திருவள்ளுவர் சபை, சிந்தாரிப்பேட்டை, 1969.

94. வள்ளுவர் உலகிற்கு வழங்கும் செய்தி, திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழா மலர், சென்னை, 1969.

95. திருக்குறளும் சங்க இலக்கியங்களும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969 (மலர்)

96. குறளோவியம், திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழா மலர், புதுக்கோட்டை, 1969.

97. அடிகள் கண்ட அம்பலவாணர், அருட்பெருஞ் சோதி, சென்னை, 1969.

98. சீவகசிந்தாமணி கு. மதுரை முதலியார் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர், மாருதி பிரஸ், இராயப்பேட்டை, 1969.

## 1970

99. திருக்குறளும் சமண ஆகமங்களும், நல்லறம், சென்னை, 1970.

100. இந்திய நாடகக் கலையின் தந்தை டி.கே. சண்முகம் மணிவிழா மலர், சென்னை, 1970.

101. வள்ளுவர் காட்டும் பொருளியியல், இராசபாளையம் திருவள்ளுவர் மன்ற மலர் 1970.

102. சமணமும் தமிழும், தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா மலர், தில்லி, 1970.

103. பண்டைத் தமிழ் மகளிரும் கச்சணிதலும், இரண்டாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருச்சி 1970.

104. நான்கு நாணல்கள் ஒரு மதிப்பீடு – திறனாய்வு, தமிழுறவு மலர், சென்னை, 1970.

105. தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை, நண்பர் வட்ட மலர், சென்னை, 1970.

106. நெஞ்சுக்கு நீதி (குறள் விளக்கம்), நல்லறம், சென்னை, 1970.

107. திறந்த புத்தகம், காந்தியடிகள் நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1970.

108. திருக்குறளுக்கு உரைகள் வேண்டுமா? (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

109. காமத்துப்பாலின் கருத்தோவியங்கள், (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

110. புண்ணும் வடுவும் (குறளாய்வு), ஆரம்பக் கல்வி, சென்னை, 1970.

111. சங்க இலக்கியங்களில் திருக்குறள், கழகப் பொன்விழா மலர், கழகம் சென்னை –1, 1970

112. நாவலர் நற்றமிழின் காவலர், நாவலர் நெடுஞ்செழியன் பொன்விழா மலர், சென்னை –7, 1970.

## 1971

113. பண்டைத் தமிழ்ச் சமுதாயமும், நல்லறமும், சென்னை

## 1971

114. தமிழகத்தின் ஆண்டுக் கணக்குமறை, மூன்றாவது இந்தியப் பல்லைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், அண்ணாமலை நகர், 1971.

115. வரலாற்றின் எச்சரிக்கை விசய்நகர பாமினி அரசுகள், தமிழரசு, சென்னை, 1971.

116. தாய்மொழிவழிக் கல்வியே தாயகத்திற்குத் தேவை, முரசொலி, சென்னை, 08.01.1971

117. தமிழறிஞர் வி. கனகசபை பிள்ளை, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1971.

118. பழமொழிகள் உணர்த்தும் கடவுட்கொள்கை, சிதம்பரம் சிவகாசி அம்மை கும்பாபிஷேக மலர், சிதம்பரம், 1971.

119. பழமொழிகள் காட்டும் மகளிர் இயல்பு, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சென்னை, 1971.

## 1972

120. வள்ளுவர் கண்ட மனிதன் – 1, தமிழியல்(JOTS) சென்னை, 1972.

121. திருக்குறளும் தம்மபதமும், தருமச்சக்கரம், சென்னை, 1972.

122. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன், நான்காவது இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருவனந்தபுரம், 1972.

123. முப்பாலுள் முதுமொழிகள், கி.ஆ.பெ.வி. மலர், கோவை, 1972.

124. இலக்கியம் உணர்த்தும் வரலாறு, தமிழுறவு, சென்னை, 1972.

125. அறங்கூறும் அவையம், தமிழ்ப்பணி, சென்னை 1972.

126. பழமொழிகளில் பழந்தொழில், நிலவளம், சென்னை, 1972.

127. பைந்தமிழ்ப் பாவலர்: கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், 1972.

128. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் கொள்கை, திருக்கும்பாபிஷேக மலர், சபாநாயகர் கோயில், சிதம்பரம் 1972.

129. தமிழர் திருநாள், சமயம், 1972.

## 1973

130. கற்பனைக்கு ஒரு கவிஞரேறு, தமிழ்ப்பணி, சென்னை, 1973.

131. மூவகை மனிதர், கனகசபைப்பிள்ளை மணிவிழாமலர், சிதம்பரம், 1973.

132. மனிதனாக வாழ வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி, 1973.

133. வள்ளலாரின் வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி 1973.

134. சீவகசிந்தாமணி ஒரு காப்பியமாகுமா? திருக்கோயில், சென்னை, 1973.

135. ஊன்றுகோல் (குறள் வழிக்கதை), கரும்பு, திருச்சி, 1973

136. அழுக்காறு வேண்டாம் (குறளமுதம்), சி.ப. மலர், சென்னை, 1973.

137. பெண்வழிச் சேறல், கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சிந்தாதிரிப்பேட்டை, 1973.

138. வள்ளுவர் கண்ட மனிதன் –2, தமிழியல், சென்னை, 1973.

139. பாரதியாரின் இலக்கியக் கொள்கை, ஐந்தாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், சென்னை, 1973.

140. திராவிட இனத்தின் தோற்றம் (ஒரு மறு ஆய்வு), தமிழாய்வு தொகுதி 2, சென்னைப் பல்கலைக்கழகம் வெளியீடு – 1973.

141. பாரதியின் இலக்கியக் கொள்கை, ஆய்வுக்கோவை தொகுதி 5, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, 1973.

## 1974

142. சும்மா, மலைச்சாரல், சோளிங்க புரம், ஏப்ரல், 1974.

143. நூறாண்டு வாழ்க – திறனாய்வு, தமிழ்ப்பணி, 1974.

144. வாணிதாசரின் வளமார் தமிழ், தமிழ்ச்சாரல், 1974.

145. கணக்காயர், ஆசிரியர் நரசிம்மன் அவர்கள் நினைவுமலர், சென்னை, 1974.

146. தமிழ் வளர்த்த பெரியார்கள், மு.சு. பூரணலிங்கம் பிள்ளை, நூலகம், சென்னை, 1974.

147. தமிழ் வளர்த்த பெரியார்கள், திருமணம் செல்லக் கேசவராய முதலியார், நூலகம், சென்னை, 1974.

148. வரலாறும், பண்பாடும், பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்க மலர், சென்னை, 1974.

149. தாயா? தமக்கையா?, ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, புதுவை, 1974.

150. தமிழும் மலையாளமும், செந்தமிழ்ச் செல்வி, சென்னை, 1974.

## 1975

151. எழிலோவியம் காணவாரீர்.

152. தமிழிற்கு ஓர் அறண்

153. அறிஞர் அறவாழி

154. சிலப்பதிகாரத்தின் மாண்பு

155. இராசராசன் கொலைகாரனா? புலமை தொகுதி 1 பகுதி 1, சென்னை – 18, 1975.

## 1977

156. டாக்டர் மு.வ.வின் புதிய உலகம் திறனாய்வுக் கட்டுரைகள், அணியகம், சென்னை –30, 1977.

## 1978

157. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 4, ஜனவரி 1978.

158. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 5, பிப்ரவரி 1978.

159. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 6, மார்ச் 1978.

160. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 7, ஏப்ரல்1978.

161. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 8, மே 1978

162. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 9, ஜூன் 1978

163. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 10, ஜூலை 1978

164. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 12, செப்டம்பா; 1978

165. கந்தபுராணம், தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 3, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 20, 1978.

166. நூல் அறிமுகம் – காளிதாசன் உவமைகள், புலமை தொகுதி –4, பகுதி 3,4, சென்னை –18, 1978.

167. முக்காவல் நாடு, ஆய்வுக்கோவை தொகுதி 10, பகுதி 3, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு அண்ணாமலை நகர், 1978.

## 1979

168. கடவுள் நெறி, திருக்கோயில் மாலை 21, மணி 11, ஆண்டு 1979.

169. கல்லாடம் தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 4, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை 20, 1979

170. திருவள்ளுவரும் சர்வக்ஞரும், திருவள்ளுவர் 2010–ஆம் ஆண்டு மலர் பெங்களூர்த் தமிழ்ச்சங்கம், பெங்களூர் 42, 1979.

## 1980

171. வாணிதாசன் கவிதைகளில் படிமக் காட்சி, ஆய்வுக்கோவை 12, தொகுதி 1, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, அண்ணாமலை நகர், 1980.

172. பண்பாடு சமஸ்கிருத மயமாக்கப்படுதல்

173. வரலாற்றியல், ஜைன இளைஞர் மன்றம், சென்னை – 17.

174. மறுமலர்ச்சி

175. சிலப்பதிகாரத்தால் அறியப்படும் அரசியல் உறவு.

176. தமிழ் உரைநடை

177. உவமை

178. பொற்காலம்

179. பாவியலில் கற்பனை

180. கம்பனுக்கும் ஒரு தாசன் விக்ரமன் பொன்விழா மலர் 17.3.1978.

181. கல்லணையைக் கட்டியது யார்?

182. பசி

183. பகை பிறந்தெறிதல்

184. நான்கண்ட அடியாருக்கு நல்லார் – தி.க.நாராயணசாமி நாயுடு 80–ஆம் ஆண்டு நினைவு விழா மலர்.

185. நன்னூல் உரை ஆசிரியர்கள்

186. சிறுநெறி

187. அறிவு என்பது என்ன?

188. மணிமேகலை காட்டும் கடவுள் நெறி

189. சிற்றிலக்கியங்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

190. தமிழரின் கலைக்கோட்பாடு, உ.த.ஆ. நிறுவனம் 9.2.87

191. மறுமலர்ச்சிப் பாடல்களில் கவிதை இன்பம்

192. முடமோசியார் – யவனரா?

193. பழியும், பாவமும்

194. வினையின் பயன்

195. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் நெறி

196. இருட்டறை

197. மதுராந்தகம்

198. குறவஞ்சி

199. திருக்குறளை வேதமாகப் போற்றுவது பொருந்துமா?

200. வேளிர்

201. மனம்

202. திராவிட மொழிகளில் நீதி இலக்கியம்

203. தேசீயம்

204. வரலாற்றுக் காலம்

205. வள்ளலார் காட்டிய வழி

206. இலக்கியப் படிமங்களில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

207. வேதங்கள்

208. வீரயுகப் பாடல்கள்

## 1988

209. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, நவம்பர், 1988

210. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, டிசம்பர், 1988

211. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஜனவரி 1989

212. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, பிப்ரவரி 1989

213. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, மார்ச் 1989

214. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஏப்ரல் 1989

215. சீனாவில் சிறப்புற்ற காஞ்சி இளவரசர், தினமணி, 15.02.1989

216. மறுமலர்ச்சி இயக்கத்தின் வெற்றிமுரசு

217. பதினெண் கீழ்கணக்கின் கற்பனைவளம்

218. பழந்தமிழ்க்குடிகள், "முதன்மொழி" உலகத் தமிழ்க் கழக மாதிகை சென்னை 16.

219. ஒன்றே தெய்வம் இராமலிங்க வள்ளலார் வானொலி, ஆல் இண்டியா ரேடியோ, சென்னை –4, நாள் 7.11.71

220. A Tamil Savant From the City of Madras (8.1.1901 to 27.8.1988)

221. மறுமலர்ச்சித் தமிழ் உரை நடை

222. சித்தர்களின் மெய்ஞ்ஞானம் – உ.த.க. நிறுவனம் 8.6.1977 83–ஆம் ஆய்வுமன்ற கருத்தரங்கு

223. குறவஞ்சி

224. சான்றோர்கள் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களும் மரபொழுங்கங்களும்

225. இந்திய நாடகக் கலையின் தந்தை

226. படிமங்கள்

••••••••

# வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| 1) | தோற்றம் – மறைவு | 20.11.1931 - 05.05.1989 |
| 2) | பிறந்த ஊர் | கருங்குழி, மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம் |
| 3) | கல்வி | சிந்தாதரிப்பேட்டை ஆண்கள் |
| | பள்ளிக்கல்வி | உயர்நிலைப்பள்ளி, சென்னை |
| | புதுமுக வகுப்பு | விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர், சென்னை |
| | இளங்கலை (ஹானர்ஸ்) தமிழ் | 1951–1954 பச்சையப்பன் கல்லூரி |
| | பின்னர் முதுகலை (தமிழ்) | சென்னைப் பல்கலைக்கழகம், முதல் வகுப்பு, முதல்நிலை |
| | முதுகலை வரலாறு | சென்னைப் பல்கலைக்கழகம் தனிநிலைப்படிப்பு (1956) |
| | முதுகலை இலக்கிய ஆராய்ச்சி | "பழந்தமிழ் இலக்கியத்தில் அறம்" (ஆங்கிலத்தில்) அண்ணாமலை பல்லைக்கழகம் (1963) |

| | |
|---|---|
| மொழியியல் | அண்ணாமலை பல்கலைக்கழகம் |
| பெருஞ்சான்று | (1963) |
| முனைவர்பட்டம் | பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்பிலக்கியம் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம் 1979. |
| ஆசிரியர் பணி | 1. 6 ஆண்டுகள், பயிற்சி ஆசிரியர், அரசர் கல்லூரி, புதுக்கோட்டை 1954 – 1959. |
| | 2. 7 ஆண்டுகள், துணைப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை 1962–1968 |
| | 3. 2 ஆண்டுகள், முதல்வர், மணலித் தமிழ்க் கல்லூரி சென்னை 1968–1969 |
| | 4. 3 ஆண்டுகள், திருக்குறள் ஆராய்ச்சித் துறைத் தலைவர் சென்னைப் பல்கலைக்கழகம்," 1962–1972. |
| | 5. 19 ஆண்டுகள், இணைப் பேராசிரியர் மற்றும் இயக்குநர் (ஆராய்ச்சியியல்), உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை. |
| தெரிந்த பிறமொழிகள் | சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் |
| விருதுகள் | 1. சாகித்திய அக்காதெமி விருது (1974) திருக்குறள் நீதி இலக்கியம் |
| | 2. தி.ரு.வி.க விருது 1985 |

••••••••

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

நூலாசிரியர், அவர் படைப்புகள்
பற்றிய இணையதளம்

இ-புத்தகத்தை வாசிக்க /
பதிவிறக்கம் செய்ய

நூலாசிரியர், அவர்
படைப்புகள் பற்றிய யூடியூப்

ISBN 978-93-48345-90-5